# கேரளப் பாடநூல்

# தமிழ்

வகுப்பு X

பகுதி 1

**Kerala Reader - Tamil (AT)**
**Standard X**
**Part - 1**

கேரள அரசு
பொதுக்கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2025

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
　　பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
　　திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
　　உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
　　தவ சுப ஆசிச மாகே
　　காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
　　பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
　　ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

# தமிழ்

# 10

*Prepared by*
State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in, e-mail : scertkerala@gmail.com
Typeset and design by : SCERT
First Edition : 2025
Printed at : KBPS, Kakkanad, Kochi
© Department of General Education, Government of Kerala

## முகவுரை

உலகம் அறிவியல் வளர்ச்சியின் உச்சத்தைத் தொட்டுக் கொண்டிருக்கும் காலமிது. 'செயற்கை நுண்ணறிவு' என்பதே எங்கும் பேசு பொருளாக உள்ளது. 'ஏ.ஐ.' என ஆங்கிலத்தில் சுருக்கமாக அறியப்படும் இந்த 'உருவாக்கப்பட்ட புத்தி' அனைத்துத் துறைகளுக்கும் ஒரு சவாலாகி விடுமோ என்ற அச்சமும் இல்லாமலில்லை. இத்தகைய ஒரு சூழ்நிலையில் மொழிக்கல்வியின் தேவையும் கேள்விக்குறியாகி உள்ளது. தேவைக்குத் தக்கவாறு படிக்கவும் பேசவும் எழுதவும் தெரிந்துகொண்டால் போதாதா என்ற மனநிலை பலருக்கும் உள்ளது. மனிதகுல வரலாற்றில் அறிவியல் சார்ந்ததும் அல்லாததுமான அவனது கண்டுபிடிப்புகள் எண்ணிலடங்கா. அவை யாவற்றுள்ளும் மொழியின் உருவாக்கமே தலை சிறந்தது. காரணம், கண்டுபிடிப்புகளுக்கு அடித்தளமாக அமைவது சிந்தனை, அந்தச் சிந்தனை நிகழ்வுக்கு மொழி என்னும் ஊடகம் தேவை.

மனித வாழ்க்கை நாளுக்குநாள் மாறிக்கொண்டும் வளர்ந்துகொண்டும் இருக்கிறது. ஒருவித இயந்திரத்தனமான வாழ்க்கையை நோக்கி நாம் பயணித்துக் கொண்டிருக்கிறோம்; சமூக உணர்விலிருந்து தனிமனித உணர்வுக்கு மாறிக்கொண்டிருக்கிறோம். இத்தகையதொரு போக்கு நல்லதல்ல. மனிதன் மனிதனாக மனிதாபிமானத்துடன் வாழவேண்டும். அவ்வாறு வாழ வேண்டுமெனில் மொழியறிவும், அந்த மொழியில் தோன்றிய இலக்கியங்களின் வாசிப்பும் மிகவும் தேவை.

தமிழ் மொழியின் இனிமை, பழமை, அமைப்பு, இலக்கண – இலக்கிய வளமை இவை குறித்த அடிப்படை அறிவு மாணவர்களுக்குக் கிடைத்தாக வேண்டும். மேலும் சமூக நிலை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, வாழும் உலகின் இன்றைய போக்கு இவற்றை அறிந்து, இயன்றளவு அவற்றில் ஈடுபடுவதற்கான மனநிலையும் ஆர்வமும் மாணவர்களுக்கு ஏற்பட வேண்டும். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு பாடப்பகுதிகளும் செயல்பாடுகளும் தேர்வு செய்யப்பட்டுள்ளன. பாடங்களைப் படித்தும், செயல்பாடுகளைச் செய்தும் மொழியாற்றலை அடைக! சமூக உணர்வைப் பெறுக!

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

வாழ்த்துகள்

**முனைவர் ஜெயப்பிரகாஷ் ஆர்.கெ.**
இயக்குநர்,
எஸ்.ஸி.இ.ஆர்.டி.

# Textbook Development Team

## Tamil - X - AT (Part 1)

### Advisor

**Dr. Nainar, M.**
Reader in Tamil (Rtd.), University College, Thiruvananthapuram.

### Chairperson

**Dr. Hepsy Rose Mary, A.**
Associate Prof. Dept. of Tamil, University of Kerala, Kariavattom.

### Experts

**Dr. Ayyappan, N.**
Associate Prof. of Tamil, S.T. Hindu College, Nagercoil.

**Dr. Santhosh Kumar, G.**
Curriculum Committee Member

**Dr. Eswaran, P.**
Asst. Professor of Tamil, Govt. College for Women, Thiruvananthapuram.

### Members

**Chidamparam, V.**, HSA Tamil (Rtd.) Palakkad.
**Dominic Savio, J.**, HST, SFXHS, Parisakkal, Palakkad.
**Jasmine, J.**, HSST Tamil (Rtd), Govt. Tamil HSS, Chalai, TVPM.
**Dr. Jeevalatha, S.**, HSST, Govt. Tamil HSS, Chalai, TVPM.
**Dr. Marikkannan, A.**, HSST, GHSS Chenduvarai, Idukki.
**Dr. Nagaraj, G.**, HST, BRC Trainer, Parali BRC, Palakkad.
**Parameswaran, K.**, HST, GHS, Muthalamada, Palakkad.
**Pushpalatha, P.**, HST, PHSS, Vandiperiyar, Idukki.
**Dr. Selvakumar, R.**, HSST, GTHSS Pudur, Palakkad.
**Sheeba, M.**, HST, GHSS, Vagamon, Idukki.
**Sowmiya, S.**, HST, GHSS, Marayoor, Idukki.

### Academic Co-Ordinator

**Dr. Sahaya Dhas, D.**
**Assistant Professor (Tamil), SCERT.**

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்


பக்கம்

**அலகு 1 விந்தைகள்**

நொய்யல் ........ 8 - 16

நிலமகள் ........ 17 - 27

மலையகம் ........ 28 - 34

**அலகு 2 ஒன்றெனக் கொள்**

முதுமையில் இனிமை ........ 36 - 49

ஒன்றே உலகம் ........ 50 - 57

இனியொரு விதி செய்வோம் ........ 58 - 66

**அலகு 3 கலை நயம்**

நளினம் ........ 68 - 72

மெய்ப்பொருள் ........ 73 - 82

கைவண்ணம் ........ 83 - 93

அகராதி ........ 94

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

அலகு 1

# விந்தைகள்



இயற்கை எழில் கொஞ்சும் மலைகளும் வளம் நிறைந்த நிலங்களும் ஆர்ப்பரிக்கும் ஆறுகளும் மக்கள் தொகை பெருக்கத்தாலும் தொழிற்சாலை விரிவாக்கத்தாலும் மாசடைந்து அழிவின் பாதையை நோக்கிப் பயணிக்கின்றன. அவற்றை அழிவின் ஆழத்திலிருந்து மீட்டெடுப்பது நமது கடமையென்று இவ்வலகு உணர்த்துகிறது.

## நொய்யல்



### கிராம வளமே நீரின் வளமை

"நீர் இன்றி அமையாது உலகெனின்..." எனும் வள்ளுவ வார்த்தைகள் வெறும் வெற்றுச் சொற்கள் அல்ல. அதனை உற்று நோக்கின் நீரின் இன்றியமையாமை நன்கு புலப்படும்.

ஊரார் உண்பதற்கு ஊருணி, தானே நீர் கசிந்து உண்டான ஊற்று, மழை நீரின் சிறு தேக்கமான குட்டை, குளிப்பதற்குக் குளம், கண்ணாறுகளைக் கொண்ட கண்மாய், நீரினைத் தேக்கி ஏர்த்தொழிலுக்கு ஏற்றம் தரும் ஏரி, எஞ்சிய நீரினை நெடுந்தூரம் சுமந்து கொண்டு வளப்படுத்தும் ஆறு, ஆற்றுப் பெருக்கை ஆற்றுப்படுத்தும் கடல் என நீர்நிலைகளின் பரிணாமங்கள் பலவாயினும் இவையனைத்தும் மானுடம் வளம் செழிக்கக் களம் தந்து உதவியது.

பண்டைய நாகரிகங்கள் அனைத்தும் ஆற்றங்கரையிலேதான் தோன்றிப் பரவியிருக்கிறது என்பது வரலாற்றின் படிமங்கள் மட்டுமல்ல உண்மையும் அதுவே.

நைல் நதி நாகரிகம், தேம்ஸ் நதி நாகரிகம் – இவை அயல் நாட்டுச் சான்று. சிந்து சமவெளி நாகரிகம், கங்கை சமவெளி நாகரிகம் இவை வடஇந்தியச் சுவடுகள். பொருநைக் கரையில் நெல்லை, வைகைக் கரையில் மதுரை, காவிரிக் கரையில் திருச்சி, பாலாற்றின்கரையில் காஞ்சி என நகரங்களில் பெரும்பாலானவை ஆற்றங்கரையில் உதித்ததை உறுதிப்படுத்தும்போது, ஆறு மனித குலத்துக்கு இழைத்த சிறப்பை எண்ணி பெருமை கொள்ள வேண்டும்.

மரங்களின் செழுமை, வயல்களின் வளமை, மழைகளின் குளுமை என இயற்கை எல்லா காலச் சூழலிலும் வாடி நிற்காது பல்லுயிரித் தேவைகளைப் பதற்றமில்லாமல் பரிசீலித்து உதவிக் கொண்டிருந்தது.

பூமியின் நிலப்பரப்பைவிட, நீர்ப்பரப்பு அதிகமானதால் நீரின் முக்கியத்துவத்தை அன்று உணராமல் போனதே இன்றைய தவிப்புக்குக் காரணம் எனக் கருத முடியும்.

ஊருக்கே நீர் இறைக்கும் ஊருணி ஊனமாகிப் போனது. நிலத்தடி நீரின் செழுமையால் புறங்கண்ட ஊற்றுகள் உயிரற்றுப் போனது. மழை குறைந்து குட்டைகள் குன்றிப் போயின. தூர் வாராது, பாராது குளங்கள் குறுகிப் போயின. விளைநிலங்கள் வீடுகளானதால் கண்மாய்கள் காணாமல் போனது. நீர் வரும் வழிகள் அனைத்தும் அடைபட்டுப் போனதால் ஆர்ப்பரிக்கும் ஆறுகள் அமைதியாயின. நன்னீரின்றி கடலின் நலமும் சரிந்தது.

இயற்கையாய், இயல்பாய் கிடைத்துக் கொண்டிருந்த குடிநீர் இன்று புட்டியில் அடைக்கப்பட்டு அடங்கா விலை கொடுத்து வாங்கும் நிலைக்கு மாறிக் கொண்டிருக்கிறது. இந்நிலைக்குச் சிதைந்து வரும் நீராதாரங்களே சாட்சி. அதனை அழிவிலிருந்து காப்பதே வரும் தலைமுறையினருக்கு விட்டுச் செல்லும் சொத்து. கால்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் கிராமங்களை, அதன் குறுக்கும் நெடுக்குமாக நீர் ஓடி வளம் சேர்த்துக் கொண்டிருந்தது. மாதம் மும்மாரி, உயர்ந்த மரங்களைத் தழுவிப் படர்ந்த நிழல், காற்று, தலை சாய்ந்த பச்சை வண்ண வயல்கள், இசைக்கு இணையாய் ஒலித்துக் கொண்டிருந்த பல்லுயிரிகளின் குரலோசை, கண்மாயின் உட்புகும் கால்வாய்கள், வெளிப்பாயும் வாய்க்கால்கள் என எப்போதும் நீரின் வளமை ஊரைச் செழுமைப்படுத்தியது.

"தொட்டனைத்தூறும் மணற்கேணி" எனும் சொற்களுக்கு இலக்கணமாய் ஊர் முழுதும் பிரவாகமெடுத்த நீர்ஊற்று இன்றில்லையே எனும் ஏக்கம் கிராமத்தை உணர்ந்தவர்களுக்கு இருக்கிறது. அப்பிழைக்கு விலையாய்த்தான் இன்று புட்டி நீருக்குப் பணம் கொடுத்துக் குடித்துக் கொண்டிருப்பதாய்க் கருதலாம்.



மீண்டும் அப்பழமையைப் புதுமையாக்கிடலாம் என்றால் இன்று நீரோடைகளும் கால்வாய்களும் கற்களைத் தாங்கிச் சாலையாக மாறி விட்டன. கவலை கொள்ள வேண்டாம், சாலைகள் கிராமங்களின் உயிர்நாடியும்கூட.

இருக்கும் சாலையோரங்களை நீரோடைகளாகவும் வாய்க்கால்களாகவும் மாற்றுவோம். விளை நிலங்களை வீணாக்குவதை இனித் தவிர்ப்போம். மழைக்காலங்களில் கிடைக்கும் மழை நீரைக் குளம், குட்டை, கண்மாய், ஏரி எனச் சேமிக்கும் வழியைப் புனரமைப்போம். தரிசு நிலங்களை விளை நிலங்களாக்குவோம். பூமிக்குள் நீர் புகும் நுண்துளைகள் அடைபடாமல் இருக்க சிமெண்ட் தளங்கள் அமையாமல் பார்த்துக் கொள்வோம். இந்தப் பூமி மானுடனுக்கு மட்டுமல்ல, மற்றைய உயிரிகளுக்கும் பொதுவானது என்பதால் அவை வாழவும் வழிவகை செய்வோம். மீண்டும் கிராமங்களைக் கிராமமாகவே வைத்திடுவோம்.

'கிராமம்' இது நகரத்தின் அஸ்திவாரம், மாநகரத்தின் ஆதாரம். கிராமம் இல்லையெனில் நகரமுமில்லை, மாநகரமும் இல்லை.

'கிராமங்களின் முன்னேற்றமே ஒரு நாட்டின் முன்னேற்றமாக இருக்க முடியும்' எனும் காந்தியச் சிந்தனையைத் தூவி எழுத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கின்றேன்.

– செ. சஜீவ்

**ஆசிரியர் குறிப்பு** இவர் கன்னியாகுமரி மாவட்டம் பைங்குளத்தைச் சார்ந்தவர். பல ஆண்டுகள் பேராசிரியராகப் பணியாற்றிய இவர் சமூக ஊடகங்கள், வார, மாத, நாளிதழ்களில் தமது படைப்புகளை வெளியிட்டு வருகிறார்.

## செயல்பாடுகள்

- 'நீர் நிலைகளின் பாதுகாப்பு' என்னும் தலைப்பில் இதழில் வெளியிடுவதற்கான சொற்பொழிவுரை தயாரியுங்கள்.
- 'கிராம முன்னேற்றமே ஒரு நாட்டின் முன்னேற்றம்' என்னும் பொருண்மையில் பள்ளியில் கட்டுரைப் போட்டி நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுக்கான சுற்றறிக்கை தயாரியுங்கள்.
- 'நீரின்றி அமையாது உலகெனின் யார் யார்க்கும்<br>வானின்றி அமையாது ஒழுக்கு.'<br>இத்திருக்குறளின் கருத்து வெளிப்படும் வகையில் விளக்கக் குறிப்பு எழுதுங்கள்.
- தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருள் எழுதி அகரவரிசைப்படுத்துங்கள்.<br>ஊருணி, ஊனம், கேணி, மானுடன், குட்டை, கண்மாய்.
- மழை நீரைச் சேகரிப்பதற்குப் பள்ளி வளாகத்தில் எந்தெந்த வழிமுறைகளைக் கையாளலாம்? உங்கள் கருத்துகளை வரிசைப்படுத்துங்கள்.

## தண்ணீரைக் காப்போம்

நிலத்தடியில் நீர்நிறைந்தி ருப்ப தற்கே
நிலம்மீது பெய்கின்ற மழையின் நீரைப்
பலப்பலவாய் நிலைகளிலே நம்மின் முன்னோர்
பாதுகாப்பாய்ச் சேமித்தே வைத்தி ருந்தார்;
நலமாக வாழவயல் விளைச்ச லுக்கும்
நல்லகுடி நீருக்கும் பஞ்ச மின்றிப்
புலம்தன்னை அன்றாண்ட மன்ன ரெல்லாம்
புரிந்தநல்நிர் வாகத்தால் கிடைக்கச் செய்தார் !

அரண்மனையைச் சுற்றிப்பெய்த மழையின் நீரை
அருமையாக வடிவமைத்த கால்வாய் மூலம்
அரணாகக் கோட்டையதன் மதிலைச் சுற்றி
அகழ்ந்தமைத்த அகழிதன்னில் சேமித் தார்கள் !
கரம்கோர்த்து மக்களெல்லாம் வாழ்ந்த ஊரில்
காலத்தே பெய்தமழை நீரை யெல்லாம்
வரம்பமைத்தே ஒருதுளியும் வீணா காமல்
வடித்தசிறை நீர்நிலையில் தேக்கி வைத்தார் !

பல்வகையாய்ப் பயன்படுத்தும் நீர்நி லைக்கே
பசுந்தமிழில் இலஞ்சியெனும் பெயரும் சூட்டி
நல்வகையாய் நீர்தன்னைச் சேமித் தார்கள்;
நன்றாகக் கால்நடைகள் குளிப்ப தற்கே.
சொல்லாலே குட்டையென்று பெயரை வைத்துச்
சொகுசாக அவைகளினை நீந்த வைத்தார்;
செல்லாமல் பள்ளத்தில் தேங்கி நிற்கும்
செழும்நீரைக் கூவல்என்றே அழைத்துக் காத்தார் !



ஊற்றெடுத்து வாய்க்காலை அமைத்துக் கொண்டு
ஊர்ந்துவரும் நீர்தன்னை ஓடை என்றார்;
ஏற்றமுடை வெற்பிருந்து கசியும் நீரை
எழிற்றமிழில் சுவையாகச் சுனையாம் என்றார்;
காற்றடிக்கும் கடல்மணலில் குடிக்கத் தோண்டிக்
கட்டிவைத்த கிணற்றைஆழ் கிணறு என்றார்;
நாற்றிசையும் கோபுரங்கள் காணும் கோயில்
நற்றலத்து நீர்நிலையைக் குளமாம் என்றார் !

ஏரிதன்னை ஊர்தோறும் அமைத்துக் காத்தே
எதிர்காலத் தலைமுறைக்கே விட்டுச் சென்றார்;
ஊரிருந்த இவற்றையெல்லாம் தன்ன லத்தால்
உருவின்றி அழித்திருப்பைக் காலி செய்தோம்;
வேரினையே பிடுங்கிமரம் சாய்த்தல் போல
வெறுமையாக்கிச் சந்ததிக்கே நிலத்தை வைத்தோம்;
யாரிதனை நினைக்கின்றோம் ! இயற்கை தன்னை
யாவருக்கும் விழிப்புணர்வை ஊட்டிக் காப்போம் !

– கருமலைத் தமிழாழன்

**ஆசிரியர் குறிப்பு** இவரது இயற்பெயர் கி. நரேந்திரன். தொடர்ந்து மரபுக் கவிதைகள் எழுதிவருகிறார். இவர் எழுதிய நூற்களில் நெஞ்சின் நிழல்கள், காற்றை மணந்த கவிதைகள், பண்பில் வாடை, சுவடுகள், வேரின் விழுதுகள் என்பவை குறிப்பிடத்தக்கன. டாக்டர் இராதாகிருஷ்ணன் நல்லாசிரியர் தேசிய விருதையும் தமிழ்ப் படைப்பாளர் சங்கம் அளித்த பாவேந்தர் நெறிச் செம்மல் விருதையும் பெற்றுள்ளார்.

## செயல்பாடுகள்

- கவிதையின் மையக்கருத்தைச் சிறுகுறிப்பாக எழுதுங்கள்.
- நயம் பாராட்டி எழுதுங்கள்.

  "ஊற்றெடுத்து வாய்க்காலை அமைத்துக் கொண்டு;
  ஊர்ந்துவரும் நீர் தன்னை ஓடை என்றார்;
  ஏற்றமுடை வெற்பிருந்து கசியும் நீரை,
  எழிற்றமிழில் சுவையாகச் சுனையாம் என்றார்."
- பின்வரும் சொற்களுள் பண்புத்தொகைச் சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
  எழிற்றமிழ், பசுந்தமிழ், நாற்றிசை, செழுநீர்.
- நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகளைக் கலந்துரையாடி, குறிப்பு தயாரியுங்கள்.



# சாயத்திரை

கண்ணிற்கு எட்டிய தூரம் வரைக்கும் கறுப்பாய்ச் சாக்கடை மினுங்கிக் கொண்டிருந்தது. இன்னும் கொஞ்சம் பார்வையை அவன் எட்டிப் போட்ட போது சாயப்பட்டறைக் கழிவுகள் பல்வேறு வர்ணங்களுடன் வந்து கலந்து நின்றிருந்தன. ரோசா கூசினபடி மெதுவாக நடந்தாள். வறண்ட கழிவுகளும் முட்களின் சிதலங்களும் வழியை நிறைத்திருந்தன. டில்லி முட்களின் ஆக்கிரமிப்பிலிருந்து ஒற்றையடிப்பாதை, குறுகலாய்ச் சென்று நொய்யலில் மறைந்தது. ஆறு கறுத்த நிறத்துடன் கழிவுகளாய் நிரம்பியிருந்தது.

இடையில் நாலைந்து திட்டுகள் தென்பட்டன. அவற்றின் மேல் மேய்ந்து கொண்டிருந்த பன்றிகளின் விகாரத்தைச் சகித்துக் கொள்ளாதவள் போல் உடம்பைக் குலுக்கினாள் ரோசா. "இவையெல்லாம் என்ன, அசாதாரணமான திட்டுகள் போல் இருக்கின்றனவே" என்றாள். ஆங்கிலத்தில், ஒருவகை விரக்தியான புன்னகையை உதிர்த்தான் பக்தவச்சலம்.

"இந்தப் பகுதி மக்களின் கல்லறைகள்"

"கல்லறைகளா..."

"ஆமாம்..." சவக்குழிகள். கல்லறைத் தோட்டத்திற்கு ரொம்பதூரம் போக வேண்டும். அவர்கள் குடியிருக்கும் இடத்திற்குப் பக்கத்தில் எங்காவது இடம் கிடைத்தால் அங்கேயே சவங்களைப் புதைத்து விடுகிறார்கள்.

வெவ்வேறு வர்ணங்களால் வரும் சாயப்பட்டறைத் தண்ணீர் சங்கமமாகும் இடத்தில் புகைப்படங்களை எடுத்தாள். சாயங்கள் கலந்து காய்ந்திருந்த மண்ணைக் கையில் தொட்டுப் பார்த்தாள். அவளின் விரல்களில் பட்ட நிறம், காணமுடியாத புதுவகை வர்ணத்தைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள். முட்செடிகளும் புதர்களுமாய் ஆறு நிறைந்து கிடந்தது.

"இதை ஆறு என்றுதான் சொல்வீர்களா..."

"ஆமாம், என்ன சந்தேகம்"

"எங்கள் ஊர்களில் ஆறுகள் என்றால் வருடம் பூராவும் தண்ணீர் ஓடிக்



கொண்டிருக்கும். ஆற்றை யொட்டின பகுதிகளும் திட்டமிடப்பட்டு அழகாக இருக்கும். பனிக்காலம் என்றால் பனிக்கட்டிகளால் மேல்பாகம் நிறைந்திருக்கும். ஆறு என்று அர்த்தம் தொனிக்கவும் உணர்ந்து கொள்ளவும் என்று நிறைய சந்தர்ப்பங்கள் அமைந்து விட்டிருக்கும். ஆனால் இதையும் நீங்கள் ஆறு என்றுதான் சொல்கிறீர்கள்."

"சரி.. மறைந்து போன நதி என்று வைத்துக் கொள்ளலாம்."

"அதுதான் சரியாக இருக்கும்... ஆமாம் இதை ஆறு என்பதை உணர்வதற்கான அனுபவங்கள் உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கிறதா..."

"ஆமாம்... எல்லாம் இருபது வருடங்களுக்கு முன்பு.."

நொய்யல் வெள்ளமாய்ப் பெருக்கெடுத்த நாட்கள் அவனின் மனதில் இன்னும் பசுமையாய் இருந்தன. மில்லர் நிட்டிங் பக்கத்துச் சேற்று மண்ணிலிருந்து, மண்புழுவைச் சேகரித்துக் கொண்டு மண்ணரைக்கு நண்பர்களுடன் மீன் பிடிக்க சைக்கிளில் சென்ற காலத்தில் நொய்யல் கரை பரவினபடி தண்ணீர் ஓடி இருக்கிறது. அடைமழைக்காலம் வருகிற போதெல்லாம் பாலம் ததும்ப, தண்ணீர் நுரையைக் கிளப்பியபடி எல்லா அழுக்குகளையும் துடைத்தெறிந்து விட்டு ஓடியிருக்கிறது. டவுனுக்கு அமாவாசையன்று சினிமாவிற்குப் போகிறபோதெல்லாம் பாலத்தில் நின்று ஏதோவகையான உள்ளுணர்வு பயத்துடன் அப்பாவின் கைகளைப் பிடித்துக்கொண்டு எட்டிப்பார்த்து நேரம் கழிப்பது நிகழ்ந்திருக்கிறது. அம்மாவுடன் கல்லறைத் திருநாளை வேடிக்கை பார்க்கச் செல்கின்றபோது கரும்புச்சாறு போன்று ஓடும் வெள்ளத்தை நெடுநேரம் பார்க்க வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அப்பாவின் மடியில் உட்கார்ந்து கொண்டு நொய்யல் ஆற்று மணலில் நடக்கிறக் கூட்டங்களை ரசிக்க எத்தனையோ வாய்ப்பு அமைந்திருக்கிறது. பூப்பறிப்பு நோம்பிகளில் கரும்பும் பொரியும் எண்ணெய்ப் பலகாரங்களுமாய் இறைந்து கிடக்க மணலின் நிறமே மாறிப் போயிருப்பதை வேடிக்கையாய் பார்க்க நேர்ந்திருக்கிறது. சாக்கடையாய் மாற ஆரம்பித்தபோதுகூட சாக்கடை நாற்றத்தைச் சகித்துக்கொண்டு நொய்யலைப் பார்ப்பது ஆறுதலாக இருந்திருக்கிறது. சாக்கடை என்பது வேறுபடும் வர்ணங்களால் சாயப்பட்டறைத் தண்ணீர்க் கழிவுகளுக்கென்றானபோது சங்கடமாகப் பக்தவச்சலம் உணர்ந்திருக்கிறான்.

நெடுநேரம் சாயக்கழிவுகளைப் பார்த்துக் கொண்டிருந்த ரோசா பெருமூச்சு விட்டவாறு அவனைப் பார்த்து உடம்பைக் குலுக்கினாள். "உங்கள் பெருமூச்சு ஏதேதோ அதிருப்தியைச் சொல்வது போல் படுகிறது." அவன் தூரத்துப் பூங்காவைக் காமராவில் படம்பிடித்தபடிச் சொன்னான். "அதைவிட எங்களின் பெருமூச்சுதான் இவ்வளவு வெப்பத்தையும் புழுதியையும் இந்த ஊருக்குத் தந்திருக்கிறது..." அவன் சொல்லிவிட்டுச் சிரித்தான். அவள் தோளைக் குலுக்கி பூங்காவை நோக்கி கை நீட்டினாள்.

"அது ஒரு பூங்கா... நகரத்து மக்கள், இந்தக் கழிவுகளையும் மீறி உட்கார்ந்து கொள்ள ஓர் இடம். எல்லாம் செயற்கையாக இருக்கும். அங்கு நீரூற்றில் விழும் தண்ணீர்கூட லாரியில் கொண்டு வந்து கொட்டப்பட்டதாய் இருக்கும். எல்லாச் செடிகளும் குட்டையாகவே இருக்கச் சபிக்கப்பட்டவை. கொஞ்சம் மனிதர்கள் நடமாடுவர் என்பதுதான் இயல்பான இயற்கை..." அவள் ஏனோ ஓவென்று சிரித்தாள். அருகிலிருந்த பாறையைத் தொட்டவள் ஏனோ வெறுப்படைந்தவள் போல் கைகளை எடுத்தாள். கைகளைத் தட்டினபோது வெளிச்சத்தில் தூசி பறந்தது. வெயிலின் ரேகைகளில் தூசி அடைபட்டதுபோல ஒரு நிமிடம் பறந்து நின்றது. காக்கையொன்றின் நீண்ட கரைதலில் வாகனங்கள் இடிபட்டுக் கொண்டது போலிருந்தது. வெயிலின் வெம்மை தகதகத்து, சூரியனைச் சென்றடைந்து கொண்டிருந்தது.

"இந்த நதி எதுவரை செல்கிறது.."

"நதியா..."

"நதி அல்லது சாயப்பட்டறைக் கழிவுகள்.."

"இருபது கிலோ மீட்டருக்கு அப்பால் ஓர் அணைக்கட்டு, அதுவரைக்கும்." தூரத்தில் தெரிந்த பனைமரங்களின் மேல் பார்வையைச் செலுத்தினாள். வானத்தின் சூட்டுக்கோலாய் அவை நின்று கொண்டிருந்தன. வானத்தின் நீலத்தைச் சூட்டுக்கோல்கள் கரைத்து வெளுப்பாக்கிக் கொண்டிருந்தன. வானம் தீவிர வெளுப்பில் அக்கறை கொண்டிருந்தது.

"உங்கள் ஊரில் இளநி குடிக்க வேண்டும் என்று ஆசையாய் இருக்கிறது.'

"விபரீத ஆசைதான்."

"ஏன் விபரீதம் என்கிறாய்..."

"சாயப்பட்டறைத் தண்ணீர் இளநிக்குள்ளும் இருக்கும். தோண்டப்படும் போர்வெல்களிலிருந்து சாயத்தண்ணீர் சாதாரணமாகப் பீச்சியடிக்கும். சிலசமயம் இளநி தண்ணீரில் பல வர்ணங்களைப் பார்க்கலாம்..."

### தொகை

தொகை என்றால் 'தொக்கி நிற்றல்' எனப் பொருள். தொக்கி நிற்றல் என்றால் வெளிப்படையாக இல்லாமல் மறைந்து வருவது. சில இடங்களில் காலம் காட்டும் இடைநிலை, வேற்றுமை உருபுகள், உவம உருபுகள் போன்றவை மறைந்து நிற்பதுண்டு. இவ்வாறு மறைந்து நிற்குமானால் அச்சொல்லைத் தொகை என்பர். எந்த உருபு அல்லது இடைநிலை மறைந்து நிற்கிறது என்பதற்கு ஏற்பத் தொகைகளை வகைப்படுத்துவர். தமிழ் மொழியில் தொகைகளை ஆறாக வகைப்படுத்தியுள்ளனர். அவையாவன, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத் தொகை, உம்மைத்தொகை, வேற்றுமைத் தொகை, அன்மொழித் தொகை என்பன.

ரொம்பவும் துயரம் கொண்டவள் போல் எதுவும் பேசாமல் அவனைப் பார்த்தாள். நடப்பது சாகசம் என்பதுபோல் மெல்ல நடந்தாள். கால்களில் புழுதி அப்பியிருந்தது. பருத்த கொக்கிற்கு வர்ணங்களைப் பூசிவிட்டது போல் அவளின் உடை இருந்தது.

மேட்டிலிருந்து கீழிறங்கியவுடன் கனத்த வாகன இரைச்சல்களுடன் வீதி ஆரம்பமானது. வீதியின் ஓரத்திலிருந்து கிளம்பிய கறுப்பு பைப்புகள் பனைமரங்களைக் கீழே வீழ்த்தி கறுப்பு வர்ணமிட்டது போல் இருந்தன. வலது முனையில் ஒரு சிறு கூட்டம் கூடியிருந்தது. ரோசா அந்தக் கூட்டத்தின் அருகாமையில் சென்றாள். குழாயின் ஒரு நுனியிலிருந்த நீர் சொட்டிக் கொண்டிருந்தது. சொட்டும் நீரைப் பிடிப்பதற்கென்று குடங்கள் இருந்தன. கலைந்த முகத்துடன் இருந்த பெண்கள் ரோசாவைப் பார்த்தார்கள். "இவர்கள் என்ன செய்கிறார்கள்..."

"குடிநீர்க் குழாய், சிறு கசிவு, அந்தத் தண்ணீரைப் பிடிக்கிறார்கள்."

"குடிநீருக்கு இவ்வளவு சிரமமா... டாலரும் பவுண்டுகளும் தண்ணீராய் ஓடும் இந்த நகரத்தில்...."

அவள் குழாயையும் தண்ணீர்ப் பிடிக்கும் பெண்களையும் படம் பிடித்தாள். சொட்டும் தண்ணீரைப் பார்த்துக் கொண்டிருந்தாள். கசிவு சட்டென வேகம் எடுக்க ஆரம்பித்ததும் பரபரப்பு ஏற்பட்ட மாதிரி பெண்கள் நெருக்கியடித்தனர்.

– சுப்ரபாரதிமணியன்

**ஆசிரியர் குறிப்பு** இப்பாடப்பகுதி 'சாயத்திரை' என்னும் நாவலில் இருந்து எடுக்கப்பட்டது. இது சுற்றுச்சூழல் மீது அக்கறை கொண்டு எழுதப்பட்ட சிறந்த சூழலிய நாவல். இதற்குத் தமிழக அரசின் சிறந்த நாவலுக்கான பரிசு கிடைத்தது. இவர் மண்புதிது, அண்டைவீடு என்ற பயணநூற்களையும் மற்றும் சிலர், சுடுமணல், தேனீர் இடைவேளை, ஓடும் நதி போன்ற நாவல்களையும் அப்பா, ஓலைக்கீற்று, நவீனம் போன்ற சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.

## செயல்பாடுகள்

- கதையின் தலைப்பு பொருத்தமானதா? உங்கள் கருத்துகளைக் குறிப்பாக எழுதுங்கள்.
- நீர் நிலைகள் மாசடைந்து வருவதற்கான காரணங்களை வரிசைப்படுத்துங்கள்.
- இந்தக் கதையினை நாடக வடிவில் மாற்றி வகுப்பில் நடியுங்கள்.
- உங்கள் பகுதியிலுள்ள நீர் நிலைகளின் தற்போதய நிலைப் பற்றி செயல்திட்டம் தயாரியுங்கள்.
- தொழிற்சாலைகளின் வளர்ச்சியும் சுற்றுச்சூழல் பாதிப்பும் என்னும் தலைப்பில் கட்டுரை தயாரியுங்கள்.

# நிலமகள்



## கம்பராமாயணம்

வரம்பு எலாம் முத்தம்; தத்தும்
மடை எலாம் பணிலம்; மா நீர்க்
குரம்பு எலாம் செம் பொன்; மேதிக்
குழி எலாம் கழுநீர்க் கொள்ளை;
பரம்பு எலாம் பவளம்; சாலிப்
பரப்பு எலாம் அன்னம்; பாங்கர்க்
கரம்பு எலாம் செந் தேன்; சந்தக்
கா எலாம் களி வண்டு ஈட்டம்.

ஆறு பாய் அரவம், மள்ளர்
ஆலை பாய் அமலை, ஆலைச்
சாறு பாய் ஓதை, வேலைச்
சங்கின் வாய்ப் பொங்கும் ஓசை,
ஏறு பாய் தமரம், நீரில்
எருமை பாய் துழனி, இன்ன
மாறு மாறு ஆகி, தம்மில்
மயங்கும் – மா மருத வேலி.

நீரிடை உறங்கும் சங்கம்;
நிழலிடை உறங்கும் மேதி;
தாரிடை உறங்கும் வண்டு;
தாமரை உறங்கும் செய்யாள்:



தூரிடை உறங்கும் ஆமை;
துறையிடை உறங்கும் இப்பி;
போரிடை உறங்கும் அன்னம்;
பொழிலிடை உறங்கும் தோகை.

ஆலைவாய்க் கரும்பின் தேனும்,
அரி தலைப் பாளைத் தேனும்,
சோலை வீழ் கனியின் தேனும்,
தொடை இழி இறாலின் தேனும்,
மாலைவாய் உகுத்த தேனும்,–
வரம்பு இகந்து ஓடி, வங்க
வேலைவாய் மடுப்ப – உண்டு,
மீன் எலாம் களிக்கும் மாதோ.

– கம்பர்

**ஆசிரியர் குறிப்பு** இவர் வால்மீகி இராமாயணத்தை மூல நூலாகக் கொண்டு கம்ப இராமாயணத்தைப் படைத்தார். இவரது சிறப்பைக் 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' என்னும் தொடர் உணர்த்துகிறது. இவரது பிற படைப்புகள் சிலை எழுபது, சடகோபர் அந்தாதி, சரஸ்வதி அந்தாதி, திருக்கை வழக்கம், ஏர் எழுபது, மும்மணிக் கோவை என்பன.

## செயல்பாடுகள்

- பாடலில் 'ஓசை' என்னும் பொருள் தரும் சொற்களைக் கண்டுபிடித்துப் பட்டியலிடுங்கள்.
- அன்னம், மயில் போன்ற பறவைகள் மகிழ்ச்சியாக இருப்பதற்கு ஆசிரியர் கூறும் காரணங்களை வரிசைப்படுத்துங்கள்.
- கம்பராமாயணப் பாடல் காட்சிகள் காட்டும் நில வளங்களை விளக்கி எழுதுங்கள்.
- பாடலில் தேனின் உறைவிடங்களாக ஆசிரியர் கூறுவனவற்றைப் பட்டியலிடுங்கள்.

## நாட்டின் நலம்



நால்வகை வளங்களில் சிறந்த நீர்வளம் நிறைந்த கோசல நாட்டில் சோலைகளும் சாலைகளும் பொழில்களும் பொய்கைகளும் நிரம்பி எங்கும் இயற்கை இன்பம் பொங்கிற்று. நீர் வளமும் நில வளமும் செழித்தோங்கிய அந்நாட்டில் செறிந்து நிமிர்ந்த சோலைகளில் மயில்கள் தோகை விரித்தாடுவதும் குயில்கள் இனிமையாய்க் கூவுவதும் அன்னங்கள் அழகாய் நடப்பதும் அஞ்சிறை வண்டுகள் இன்னிசை

முரல்வதும் மக்களது கருத்தைக் கவர்ந்து இயற்கை இன்பம் பயப்பனவாம். இவ்வாறு அமைந்த மருதநிலத்தின் மாண்பினைக் கம்பர் செஞ்சொற்கவிகளால் எழுதிக்காட்டும் சீலம் சிந்தைக்கினியதாகும்.

தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளை கண் விழித்து நோக்க,
தெண் திரை எழினி காட்ட, தேம் பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட, மருதம் வீற்றிருக்கும் மாதோ !

என்று மருத மன்னன் இயற்கை இன்பம் துய்த்து இனிது இலங்கும் கோலத்தைக் கவிஞர் நம் கண்ணெதிரே எழுதிக் காட்டுகின்றார். செம்மை சான்ற மன்னன் வாழும் மாளிகையில் ஆடலும் பாடலும் நிகழ்தல் இயல்பே அன்றோ? அம்முறையில் மருத மன்னனது இயற்கை மாளிகையில் இசையோடு அமைந்த இயற்கை நாடகம் இனிது நடைபெறக் காணலாம். மரங்கள் செறிந்து நீங்காத நிழல் விரிக்கும் நெடிய சோலைகளில் அழகிய தோகை அமைந்த மயில்கள் ஆடுகின்றன. தேனுண்டு திளைத்த வண்டுகள் இன்னிசை பாடுகின்றன. இவ்வாறு நிகழும் ஆடலுக்கும் பாடலுக்கும் ஏற்ப, மரச்சோலைகளில் படிந்த மேகங்கள் மத்தளம் முழங்குகின்றன. இச்சோலையின் அருகேயுள்ள பொய்கையில் தெள்ளிய அலைகள் திரை காட்டுகின்றன. தாமரைக் கொடிகள் செம்மலர்களாய்ச் செஞ்சுடர்களைத் தாங்கி நிற்கின்றன. குவளை மலர்கள் இவ்வியற்கைக் காட்சியைக் கண்விழித்துக் காண்கின்றன. ஆகவே இயற்கையில் அமைந்த இனிய சோலைகளில் வண்டுகள் இசைபாட, கொண்டல்கள் முழங்க, மயில்கள் நடனம் செய்ய, மலர்கள் ஒளிகாட்ட, தெள்ளிய அலைகள் திரை காட்ட, கருங்குவளை கண் விழித்து நோக்க, மருத மன்னன் இயற்கை நாடகத்தைக் கண்டு களிக்கின்றான்.

இன்னும் இயற்கை இன்பம் பொங்கித் ததும்பும் கோசல நாட்டுக் குளிர்ந்த பொழில்களில் பறவை இனங்கள் பண்புற வாழ்ந்து இன்புறுகின்றன. பொழில்களில் அமைந்த மரக்கிளைகளில் குயில்கள் மணம் செய்து மகிழ்கின்றன. அயில் விழி

### வினைத்தொகை

அதியன் : இனியா! நாளிதழ்களைத் திறந்தால் என்றைக்கும் இதே செய்திதான். கவலையாக இருக்கிறது. வெடிகுண்டுபாய்ந்து ஐந்து பேர் பலியாம்.

இனியா : வருத்தம்தான்.. சரி... சரி.. எது பாய்ந்து மரணம் என்றாய்?

அதியன் : வெடிகுண்டு,

இனியா : அதன் இலக்கணம் தெரியுமா?

அதியன் : (எதற்கெடுத்தாலும் இலக்கணமா) தெரியாது நீயே சொல்.

இனியா : வெடிகுண்டு என்பது வெடித்த குண்டு, வெடிக்கின்ற குண்டு, வெடிக்கும் குண்டு என மூன்று காலத்திற்கும் பொருந்தி வரும். வெடிப்பது என்பது அதன் பண்பு. இவ்வாறு மூன்று காலத்தையும் வெளிப்படையாகக் காட்டாமல் மூன்று காலத்திற்கும் பொருத்தமாக வரும் சொற்களை வினைத்தொகை என்பர்.

அதியன் : ஓ! அப்படியா! என்னொரு இலக்கணத் தெளிவு.

இனியா : சரி.. இதுபோல் வேறு சில எடுத்துக்காட்டுகளைக் கூற முயன்று பாரேன்.

அதியன் : உம்.. சரி.. கொல்யானை, ஓடுகுதிரை, அலைகடல், பெய்மழை, படர்கொடி...

இனியா : சபாஷ்! எளிதில் புரிந்துகொண்டாயே...! நீ கூறியது அத்தனையும் சரியே... வாழ்த்துகள்.

**வேற்றுமைத்தொகை**

அதியன் : இனியா! வேற்றுமைத்தொகை என்றால் என்ன?

இனியா : உனக்கு வேற்றுமை உருபுகள் தெரியுமல்லாவா.... சொல்.

அதியன் : ஐ , ஆல், கு, இன், அது , கண்.

இனியா : நன்று! வேற்றுமை உருபுகள் இடம்பெறும் சில எடுத்துக்காட்டுகளைக் கூறேன்.

அதியன் : மிக எளிது கூறுகிறேன். மரத்தை வெட்டினான், நண்பனின் வீடு, தலையால் வணங்கினான்.....

இனியா : போதும் சரியாகச் சொன்னாய். நீ கூறியதையே மரம் வெட்டினான், நண்பன் வீடு, தலை வணங்கினான், என்றும் கூறலாமல்லவா?

அதியன் : ஆமாம்! அப்படியும் கூறலாம். சொற்களில் வேற்றுமை உருபுகள் இல்லை. ஆனாலும் பொருள் மாறுபடவில்லை.

இனியா : புரிந்து கொண்டாயே! இவ்வாறு சொற்களில் வேற்றுமை உருபுகள் வெளிப்படையாக வராமல், மறைந்து நின்று அதே பொருளைத் தருமானால் அச்சொற்கள் வேற்றுமைத்தொகை எனப்படும்.

அதியன் : நன்றி இனியா!

மாதரினும் அழகாய் மயில்கள் ஆடுகின்றன. அன்னங்கள் மெல்லிய மலர்களில் துயின்று காலையில் எழுகின்றன. மலர்களின் மதுவையுண்டு வண்டுகள் மதுரகீதம் பாடுகின்றன என்று கம்பர் அமைத்த கவி இன்பம் கற்போர் கருத்தைக் கவர்வதாகும்.

குயில் இனம் வதுவை செய்ய, கொம்பிடைக் குனிக்கும் மஞ்ஞை

அயில் விழி மகளிர் ஆடும் அரங்கினுக்கு அழகுசெய்ய,

பயில் சிறை அரச அன்னம் பல் மலர்ப் பள்ளி நின்றும்

துயில் எழதும்பி காலைச் செவ்வழி முரல்வ சோலை

என்னும் கவியின் இயற்கை இன்பம் இனிதுணரப்படும். இதழ் நெருங்கிப் பூத்த இனிய தாமரை மலர்களில் அரச அன்னம் துயில்வது இயல்பாகும். இவ்வாறு தூய மலர்ப்பள்ளியில் துயிலும் மன்னனைக் காலையில் எழுப்புமாறு வண்டுகள் அம்மலர்களின் முன்னே நின்று இன்னிசை பாடுகின்றன என்று கம்பர் அருளிய கற்பனை மிக அழகியதாகும்.

இத்தகைய கோசல நாட்டில் வாழும் மக்களும் இயற்கையோடியைந்து இன்புற வாழ்கின்றார்கள்.

– ரா.பி. சேதுப்பிள்ளை

**ஆசிரியர் குறிப்பு** இப்பகுதி 'சொல்லின் செல்வர் படைப்புகள்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. இவர் தமிழ் அறிஞர், எழுத்தாளர், வழக்குரைஞர், மேடைப் பேச்சாளர் என்னும் நிலைகளில் புகழ் பெற்றவர். இவரது 'தமிழின்பம்' என்னும் நூலுக்கு, 'சாகித்திய அகாதமியின்' பரிசு வழங்கப்பட்டது.

## செயல்பாடுகள்

- 'தண்டலை மயில்கள் ஆட' என்று தொடங்கும் கம்பராமாயணப் பாடலின் கருத்தினை வர்ணனைக் குறிப்பாக எழுதுங்கள்.
- 'இயற்கையோடு இயைந்த வாழ்க்கை' என்னும் தலைப்பில் கட்டுரை தயாரியுங்கள்.
- பொருள் எழுதி அகராதி தயாரியுங்கள்.
  வதுவை, அயில், மஞ்ஞை, துயில், கொண்டல், எழினி, முழவு.
- 'நாட்டிற்கு நலம் பயப்பது நிலவளமே' விவாதக் குறிப்பு எழுதுங்கள்.

# நிலம்



கந்தசாமிக்காகக் காத்திருந்தேன். இன்னும் வரவில்லை. கண்ணுக்கெட்டிய தூரம் வரை நிலங்கள் எல்லாம் பயிர் செய்யப்படாமல் வெறும் கரம்பாகவே கிடந்தன. புதரும் மண்டிக் கிடந்தது. வரப்புகள் தெரியவில்லை. வாய்க்கால் தெரியவில்லை. ஒரு காலத்தில்.... ஒரு காலத்தில் என்ன? பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு அந்த நிலங்கள் எல்லாம் எனக்குச் சொந்தமாக இருந்தன. இப்போது அது கந்தசாமியின் கையில். கந்தசாமி அந்த நிலங்களை வேறு யாருக்கோ விற்கப் போகிறாராம். தகவல் கிடைத்ததும் கிளம்பிவிட்டேன்.

அத்தனையும் அருமையான நிலங்கள். போட்ட விதை ஒன்றுகூட பழுதில்லாமல் விளையக்கூடிய விளைச்சல் பூமி. சொன்ன மகசூலைச் சொன்னபடி வாரிக் கொடுக்கும் சொர்ண பூமி எல்லாமே.

நிலம், சிந்தனை முள் பின்னோக்கி நகர்ந்தது. அப்போது ஆறாவது ஏழாவது படிக்கும் சிறுவன் நான். அப்பா, பெரியப்பா, சித்தப்பா எல்லாருக்குமாகச் சேர்ந்து மூன்று ஏக்கர் நிலம். ஒருமுறை வேர்க்கடலை பயிரிட்டால் மறுமுறை நெல் பயிரிடுவோம். வீட்டிலிருந்து கழனிக்கு எப்படியும் நான்கு கிலோ மீட்டர் தூரம் இருக்கும். காலையிலும் மாலையிலும் நானும் எனது சித்தப்பா மகனுமாகக் கழனிக்கு வந்துவிடுவோம். பள்ளி செல்வதற்கு முன்னும் பள்ளிவிட்ட பின்னும்.

'ஃபைவ் ஹார்ஸ் பவர் பம்ப் செட்' அது. மெஷினை ஆன்செய்து விட்டு தண்ணீரை ஒரு கழனிக்கு மடைமாற்றிவிட்டு இருவரும் பெரிதாகக் கட்டப்பட்டிருக்கும் அந்தத் தண்ணீர் தொட்டியில் விழுந்து விழுந்து குளிப்போம். குழாயிலிருந்து வரும் நீரை இரு கைகளாலும் அழுத்திப் பிடித்து ஒருவர் மீது ஒருவர் பீய்ச்சிப் பீய்ச்சி அடித்து விளையாடுவோம்.

சட்டென்று எழுந்து ஓடிப்போய் தண்ணீர் பாய்ந்து கொண்டிருக்கும் சேற்றுக் கழனியில் தொபுகடீர் என்று விழுந்து விழுந்து புரளுவோம். சேற்றையள்ளி ஒருவர் மீது ஒருவர் உடம்பெல்லாம் பூசி விளையாட்டாகச் சண்டை

போடுவோம். பொறாமையினால் புரளி என்கிற சேற்றையள்ளி பூசத் தெரியாத பருவமல்லவா அது. அவன் என்னைத் துரத்த நான் அவனைத் துரத்த ஒரே கொண்டாட்டந்தான். மறுபடியும் ஓடிப்போய்த் தண்ணீர்த் தொட்டியில் விழுவோம். அப்படியே குழாயில் வாயை வைத்து மூச்சு முட்டத் தண்ணீரைக் குடிப்போம். மீண்டும் சேற்றுக் கழனி. மறுபடியும் தண்ணீர்த் தொட்டி.

சிந்தனை முள் நின்றது. ஒரு பத்து வயது திடீரென்று குறைந்துவிட்டதுபோல் உணர்ந்தேன். மீண்டும் சிந்தனை முள் ஓடியது.

"டேய் ஆறுமுகம், சம்முவம் (சண்முகம்) இங்கே வாடா… அதோ களத்து மேட்டில இருக்கிற வேப்பந்தழை, நுணாத்தழை, வாதமடக்கி, பூவரசு, புங்கத்தழை எல்லாத்தையும் வாரி அதோ அந்தக் கீழண்டை இருக்கிற சேத்துக் கழனியில போடு. தொளி மிதிக்க ஆள் வருவாங்க. நல்லா மிதிக்கணும்னு சொல்லுங்க. ரெண்டு பேரும் கிட்டக்க இருந்து பார்த்துக்கணும் என்ன…ணு" பெரியப்பா சொல்லிவிட்டு வேறு வேலையாகக் கிளம்பிப் போனார். அவர் சென்றவுடன் அந்த இலை தழைகளை எல்லாம் இரண்டு வேலையாட்கள் வாரி எடுத்துப் போய்ச் சேற்றில் ஆங்காங்கே குவியல் குவியலாகக் கொட்டினார்கள்.

"தம்பீங்களா எல்லாத்தையும் கொண்டாந்துக் கொட்டிட்டோம். தொளி மிதிக்க ஆள் வருவாங்க. அப்ப நாங்க கெளம்பறோம்"

அந்தச் சேற்றுக் கழனி ஒரு பெரிய நீர்ப் பரப்பாகக் காட்சியளித்தது. அதில் முகம் பார்க்கலாம். அவ்வளவு தெளிவாக இருந்தது. நேரந்தான் போனதே தவிர தொளி மிதிக்க ஆள் வந்தபாடில்லை.

"இப்போ என்னடா பண்றது?" நாங்கள் இருவரும் மாற்றிமாற்றிக் கேட்டுக் கொண்டோம். சட்டென்று இருவரும் சேற்றில் இறங்கிவிட்டோம். ஒவ்வொரு குவியலையும் பரவலாக வாரி இறைத்துக் கலைத்துப் போட்டு கால்களால் மாறிமாறி மிதித்து இலை தழைகளைச் சேற்றுக்குள் அழுத்தினோம்.

"ம்… நல்லா… இன்னும் நல்லா…. அப்படித்தான்…. அப்படித்தான்… ஓங்கி மிதி…" எங்களைப் பொறுத்தவரை அவை இலை, தழைகளாகவே தெரியவில்லை. ஊரிலே நடமாடிக் கொண்டிருக்கும் பொறுக்கிகளும் போக்கிரிகளும் குடிகாரர்களாகவுமே உணர்ந்தோம். "டேய் அவனை இன்னும் நல்லா மிதிடா… தலை தெரியறது பார்… அமுக்கு… அமுக்கு…." அவர்களையெல்லாம் தட்டிக் கேட்க முடியாத குறையை இப்படியாகத் தீர்த்துக் கொண்டோம். அன்று நாள் முழுக்க கால்கள் இரண்டும் விண்விண் என்று வலித்தன. கால்கள் மட்டுமா? உடம்புந்தான்.

"இன்னிக்கி இல்லாட்டி நாளைக்கு வந்து மிதிச்சுட்டுப் போறாங்க… உங்களுக்கேன்டா இந்த வேண்டாத வேலை?" பெரியப்பா அன்றிரவு எங்கள் கால்களை வாஞ்சையோடு பிடித்துவிட்டார். தலையைக் கலைத்து விட்டார் பாசத்தோடு. தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டார். ஓர் எட்டணாக் காசை எடுத்துக் கொடுத்து, "நாளைக்கு ரெண்டு பேரும் ஆட்டத்துக்குப் போய்க்கோங்கோ (சினிமா)" என்றார்.

"நாளைக்கு என்ன... இதோ இப்பவே ரெண்டாவது ஆட்டத்துக்குக் கிளம்பிட்டோம்" என்று சொல்லிக் கொண்டே நாங்கள் இருவரும் எழுந்து ஓட்டம் எடுத்தோம். கால் வலி போன இடம் கொஞ்சமும் தெரியவில்லை.

கந்தசாமி இன்னும் வரவில்லை. என் பழைய நினைவுகளும் பற்பல ரீல்களைத் தாண்டி ஓடிக் கொண்டிருந்தன.

"அண்ணே... அண்ணே நானும் கொஞ்ச நேரம் ஓட்டட்டுமா... தள்ளிப் போங்கண்ணே... கலப்பையை இப்படிக் குடுங்க" உழுது கொண்டிருந்த ஆளைத் தள்ளி விட்டுவிட்டு ஏர்க்கலப்பையை இடதுகையில் பிடித்துக் கொண்டு வலது கையில் ஒரு பிரம்பை வைத்துக் கொண்டு ஏய் ஏய் என்று மாடுகளை விரட்ட, அவை தாறுமாறாக ஓட, கலப்பை கீழே விழ, ஒழுங்காகப் போய்க் கொண்டிருந்த சால் கோணல் மாணலானது. மாடுகள் கலப்பையைக் கயிறோடு இழுத்துக் கொண்டு ஓடின. நான் கீழே விழுந்தேன். என் சித்தப்பா பையன் என்னைப் பார்த்துச் சிரித்தான்.

### பண்புத்தொகை

இனியா : அதியா! ஒரு மகிழ்ச்சியான செய்தி!

அதியன் : அப்படியா! சீக்கிரம் சொல்லேன்.

இனியா : அப்போ நேற்று எனக்குப் பொன்னால் ஆகிய ஒரு வளையல் வாங்கித்தந்தார்.

அதியன் : பெருமகிழ்ச்சியான செய்திதான். ஆமாம்... பொன்னால் ஆகிய வளையல் என்று கூறினாயே... சரிதான். அதைப் பொன்வளையல் என்று சுருக்கமாகவும் அழகாகவும் சொல்லாமே.

இனியா : ஆமாம் அப்படியும் சொல்லாம் போல ! செந்தாமரை, பட்டாடை, தங்கக்குடம், வெண்புறா, என்றெல்லாம் சொல்கிறோமே ……..அப்படித்தானே! இதன் இலக்கணப்பெயர் என்னவாம்?

அதியன் : உனக்குத்தெரியாதா என்ன,,,,,? பண்புத்தொகை !

இனியா : பண்புத்தொகையா?

அதியன் : ஆமாம்! நிறம் , வடிவம், சுவை, அளவு, முதலானவற்றை உணர்த்தும் பண்புச்சொற்களுக்கு இடையில் 'மை' என்னும் பண்பு விகுதியும் 'ஆகிய', 'ஆன', என்னும் பண்பு உருபுகளும் மறைந்து வருவது பண்புத்தொகை ஆகும்.

இனியா : மிகவும் சரி! மேலே சொன்ன சொற்களைச் செம்மையாகிய தாமரை, பட்டால் ஆன ஆடை, தங்கத்தால் ஆகிய குடம், வெண்மை ஆகிய புறா என்றெல்லாம் சொல்லாம்.

அதியன் : சரியாகச் சொன்னாய். நன்று இனியா!

"அதுதான் அப்பவே சொன்னேன் இல்லே... நீ கேட்டியா?" என்று குதித்தான். உழுது கொண்டிருந்தவர் ஓடி வந்து மாடுகளை இழுத்துப் பிடித்து, கலப்பையை நிறுத்தி நேர்ப்படுத்தி மீண்டும் உழ ஆரம்பிப்பதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது.

எனக்குக் கோபம் கோபமாக வந்தது. அவர் உழுதால் மட்டும் மாடுகள் சொன்னபடி கேட்கும்போது, என்னை மட்டும் ஏன் அவை ஏமாற்றுகின்றன? கையில் வைத்திருந்த பிரம்பால் நாலு வாங்கு வாங்கலாம் என்று ஓடினேன். பாவம் அவை என்ன செய்யும்? தப்பு உன் மீதுதான் என்று மனம் என்னை இடித்துரைத்தது.

அடேயப்பா... எத்தனை வருடங்கள் போனாலும் நினைவுகள் மட்டும் இன்னும் பட்டுப் போகாமல் அப்படியே இருப்பது எத்தனை எத்தனை ஆனந்தம்.

கந்தசாமி இன்னும் ஆளைக் காணோம். நினைவுகள் தொடர்ந்தன.

தாத்தா இறந்த பிறகு அண்ணன் தம்பிகளுக்குள் இறுதியான பாகப் பிரிவினை என்று வந்தபோது ஊருக்குள்ளேயே வீட்டில் அதிகமான பங்கை எடுத்துக் கொண்டு எனது பெரியப்பாவும் சித்தப்பாவும் அவர்கள் நிலங்களை எங்களுக்கே கொடுத்துவிட்டனர்.

காலம் உருண்டோடியது. அன்று நான் சிறுவன். இன்று என் குழந்தைகளுக்கும் குழந்தைகள் இருக்கின்றன. காலந்தான் எத்தனைத் துரித கதியில் ஓடுகிறது.

"சீக்கிரமா எழுந்து எண்ணெய் தேய்ச்சி தலைக்குக் குளிச்சிடு. கழனிக்குப் போவணும்." களை வெட்ற வேலை இருக்கு. ஆளுங்க வந்துடுவாங்க... காலையில் எழுந்தவுடன் அம்மா என்னை விரட்டு விரட்டு என்று விரட்டினாள். வாரம் தவறினாலும் தவறலாம். எண்ணெய் தேய்த்துக் குளிப்பது மட்டும் தவறவே கூடாது. அதை வைத்தே அன்று சனிக்கிழமை என்று தெரிந்து கொள்ளலாம்.

"போம்மா உனக்கு வேறு வேலையில்லே" என்று நான் ஓடுவேன். அவளும் என் பின்னாலேயே ஓடி வந்து ஒரு கைப்பிடி அளவுக்கு நல்லெண்ணெயைக் கையில் ஊற்றி என் தலையில் தேய்ப்பாள். நன்றாக ஊறட்டும் என்பாள். குளியல் அறைக்குள் போய் நான் அங்கிருக்கும் மனையில் உட்கார்வதோடு சரி. அவளே சீயக்காய் போட்டுத் தேய்த்துக் குளிப்பாட்டிவிடுவாள். தலையை வேண்டுமென்றே ஓர் உதறு உதறுவேன். சீயக்காய் எல்லாம் அவள் புடவையில் பட்டுவிடும்.

"என்னடா இது... நீ இன்னும் சின்னக் குழந்தையா? இதென்ன விளையாட்டு" என்று செல்லமாக என் குறும்புகளைக் கரும்பாக ரசித்தபடி தலையில் இடிப்பாள். அன்று காலை உணவாக வெறும் ரசம் சாதம்தான். தொட்டுக் கொள்ள நெய் கலந்த கடைந்த பருப்பு. தேவாமிர்தமாக இருக்கும்.

சாப்பிட்டுவிட்டு சீக்கிரமாகக் கிளம்பிப் போனோம். களை வெட்ட ஆள் வரவில்லை. ஈரம் போய்விட்டால் நாளை வெட்ட கடினமாக இருக்கும். அன்று பக்கத்தில், வெட்டிக்கதை பேசிக் கொண்டிருந்த இரண்டு பெண்களைக் கூப்பிட்டு வைத்துக்கொண்டு இவளும் களை வெட்டினாள்.

"டேய் ராஜா நேத்து கழனிக்குப் போனியே... கடலைச் செடி நல்ல வளர்ந்திருக்கா.. பிஞ்சி விட்டுருக்குமே... பார்த்தியா?" நான் அவரையே பார்ப்பேன்.

"நாளைக்குப் போவே இல்ல... பார்த்துட்டு வா... எப்படிப் பார்க்கணும் தெரியுமா? ஒரு செடியை எல்லா இணுக்கோடும் சேர்த்து இடதுகையால் பிடிச்சிக்கிட்டு வலது கையால் சுத்தியிருக்கிற மண்ணைக் கொஞ்சகொஞ்சமா பக்குவமாக் கிளறி எத்தனைப் பிஞ்சுகள் இருக்குன்னு எண்ணிப் பார்த்துட்டு மறுபடியும் மண்ணைச் சேர்த்து நல்ல மூடிடணும். இணுக்குகளை முன்னே இருந்தா மாதிரி நல்லாக் கலைச்சி விடணும் சரியா "

"சரிப்பா, நீங்க அந்த மாதிரிப் பண்ணினதைப் பார்த்திருக்கேன்... எனக்குத் தெரியும்" என்பேன்.

காய் முற்றிவிடும். செடிகளைப் பிடுங்கினால் அந்த இடம் நன்றாகத் தெரியும் என்பதால் செடியை ஓர் ஆட்டு ஆட்டுவது குடுமியைப் பிடித்து ஆட்டுவதைப் போல. ஆட்டம் கண்டவுடன் அடியில் இருக்கும் வேர்க்கடலைகளைப் பறித்துக் கொண்டு மீண்டும் செடியை அழுத்தி மண்ணால் மூடிவிடுவேன். பத்துப் பதினைந்து செடிகள் ஆங்காங்கே இப்படி ஒரே நேரத்தில் ஆட்டம் கண்டுவிடும் அடிக்கடி. எல்லாம் கூடப் படிக்கின்ற நண்பர்களுக்காகத்தான்.

பெரியப்பா என்றால் எனக்குக் கொள்ளைப் பிரியம். பெரியம்மாவுக்கும் என் மீது அளவு கடந்த பாசம். சாப்பிடுவது மட்டும்தான் என் வீட்டில். மற்றபடி இரவில் தூங்குவது எல்லாம் அவர்களோடுதான். பெரியப்பா நிறைய கதைகள் சொல்வார். இராமாயணம், மகாபாரதம், அரிச்சந்திரன்கதை எல்லாமே அவர் சொன்னதுதான் எனக்கு.

நினைவுகள் நீண்டு கொண்டே சென்றன.

அதோ கந்தசாமி வந்துவிட்டார்.

"ரொம்ப நேரமா காத்துக்கிட்டு இருக்கீங்களா? வழியில ஒரு வேலை. அதைப் பார்த்துட்டு வர்றதுக்குள்ளாற ரொம்ப நாழியாயிடுத்து... மன்னிக்கணும்... என்ன நெலத்தை அப்படி வச்ச கண் வாங்காம பார்க்குறீங்க... உங்க அப்பா கையில் இருந்த வரைக்கும் என்னமா வெளஞ்சது. அப்படிப்பட்ட வெளைச்சல் அதுக்குப் பிறகு இல்லவே இல்லே... அவரு மனசுப்படியே மகசூலும் வாரிக் கொட்டும். அவர் கைப்பக்குவம் அப்படி. அவர் எதைப் போட்டாலும் பொன்னா வெளையும். பொன் வெளையுற பூமின்னு சொல்வாங்களே அதை அவரைப் பார்த்துத்தான் தெரிஞ்சிக்கிட்டேன். இப்ப இது வெறும் மண்ணுதான். பொன்னில்லே... இது கூட இன்னும் ரெண்டு வாரத்திலே கைமாறிப் போகப் போகுது..."

"என்ன சொல்றீங்க பெரியவரே?"

"பக்கத்தில இருக்கிற பத்து ஏக்கர் நிலத்தோடே இந்த நிலங்களையும் பக்கிரிசாமி வாங்கிக்கிறான். ஏதோ தோல் கம்பெனி வரப் போகுதாம்"

கந்தசாமி சொல்லும்போதே எனக்குக் கதி கலங்கிற்று. நிலம் எனதில்லை என்றாலும் மனதை என்னவோ பிசைந்தது. மூளையின் ஒரு மூலையில் ஓங்கி ஒரு குரல் ஒலித்தது. அன்று மட்டும் நிலத்தை விற்காமல் இருந்திருந்தால் இந்நேரம் அவை இப்படியா புல்பூண்டு வளர்ந்து மண்டிக் கிடக்கும்? வரப்பு வாய்க்கால் எதுவும் தெரியாமல்,

நான் எங்கே விற்றேன்? கூடப் பிறந்தவன் சொன்ன ஒரு சொல் விற்க வேண்டியதாயிற்று. இத்தனைக்கும் நிலத்தில் என்ன விளைகிறது? எத்தனை விளைகிறது? என்று ஒருநாளும் கேட்டதில்லை. அவனே எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளட்டும் என்றிருந்தபோது, திடீரென்று ஒருநாள் அவன், "நீ வந்து உன் நிலத்தை வித்து எடுத்துக்கிட்டுப் போ.

உன்னால எனக்கு நஷ்டமாகிறது" என்று சொல்ல மனம் பொறுக்காமல் தானே அடிமாட்டு விலைக்கு விற்க நேரிட்டது.

கந்தசாமி நிலத்தை விற்றுவிட்டால், அப்புறம் இந்த நிலம் இருந்த இடத்தில் கட்டடங்களும் தோல் கம்பெனியின் நாற்றமடிக்கும் கழிவுகளும்… அய்யோ… அதற்கு மேல் நினைத்துப் பார்க்க முடியவில்லை. கந்தசாமியிடம் சொன்னேன்:

"பக்கிரிக்கு அவசரப்பட்டு நிலத்தைக் கொடுத்துடாதீங்க. ரெண்டு நாள் கழிச்சு நான் வர்றேன். நான் வந்ததுக்கப்புறம் எந்தக் காரியம்னாலும் செய்ங்க"

கந்தசாமியிடம் சொல்லிவிட்டேனே தவிர, நிலத்தைத் திரும்பவும் என்னால் வாங்க முடியுமா? பழையபடி பயிர் செய்ய முடியுமா? மகன் நிலத்தைத் திரும்பவும் வாங்க ஒத்துக் கொள்வானா?

அன்றிரவே கிராமத்தைவிட்டுச் சென்னைக்குக் கிளம்பினேன். வழியெல்லாம் நிலத்தைப் பற்றியே எண்ணங்கள் ஓடின. என் தந்தையும் தாயும் பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சித்தி எல்லாரும் அந்த நிலத்தில் மகிழ்ந்து குலாவி பயிர் விளைவித்தது மனத்திரையில் படங்களாய் வந்து வந்து கண் சிமிட்டின.

மனைவி மக்களிடம் கூறினேன். பிள்ளைகள் சிரித்தார்கள்.

"என்னப்பா இது… பைத்தியக்காரத்தனமா இருக்கு. நம்ம கையை விட்டுப் போயாச்சி. அதுக்கப்புறம் அதை யார் விற்றா என்ன? யார் வாங்கினா என்ன? அதிலே தோல் கம்பெனிதான் வரட்டும்… வேறு ஏதாவதுதான் வரட்டும்… விடுவீங்களா? அதையே நினைச்சி இப்படிப் புலம்புறீங்க?"

இருந்தாலும் மனம் கிடந்து தவியாய்த் தவித்தது.

"டேய் ராஜா… மத்தவங்க மாதிரியெல்லாம் நான் சொல்ல மாட்டேன். நிலத்தை விக்காதே… அப்படி இப்படின்னு…. உனக்கு எப்படிச் சௌகரியமோ அப்படிச் செய்… விப்பியோ அப்படியே வச்சிருப்பியோ… அது உன் பாடு"

அப்பா இப்படித்தான் அடிக்கடி சொல்வார். என்ன இருந்தாலும் அதை நான் விற்றிருக்கக் கூடாது. தப்பு பண்ணிட்டேன். அது வெறும் மண் இல்லே… என் தாய் முகத்தையும் தந்தை முகத்தையும் அவர்களுடைய சந்தோஷத்தையும் பிரதிபலிக்கிற கண்ணாடி… அதைப் போட்டு உடைச்சிட்டேன்.

இரவு நேரங்களில் கழனியில் காவல் இருந்தது, கடலைக் கொடி போட்டு வேர்க்கடலை சுட்டுச் சாப்பிட்டது, துவரை, காராமணி, பயிறு வகைகளை வேகவைத்துச் சாப்பிட்டது, சேற்றில் விழுந்தது, தொட்டியில் குதித்தது, எல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக வந்து வந்து சென்றன. கிராமத்திலிருந்து வந்தது முதல் சரியாகப் பசிக்கவில்லை. தூக்கம் பிடிக்கவில்லை. எதையோ இழந்ததைப் போல பரிதவித்தது பாழும் மனம்.

இரண்டு நாள் ஆகிவிட்டது.

"அப்பா… நாளைக்குக் காலையில நானும் வர்றேன். கிராமத்துக்கு ரெண்டு பேரும் போறோம்"

மகன் சொன்னது எதுவும் என் காதில் விழவில்லை. என்னைப் பிடித்து உலுக்கினான் மகன்.

" ஊ…ம்… என்ன சொன்னே?"

"சரியாப் போச்சி… நீங்க எங்கே இருக்கீங்க? நாளை காலைல மறுபடியும் கிராமத்துக்குப் போறோம். என்ன சரியா"

எதற்கு என்று தெரியவில்லை. இருந்தாலும் சொன்னேன்:

"சரிப்பா…."

மறுநாள் கந்தசாமியைப் பார்த்து என் மகன் அவரிடம் பேசியதைக் கேட்டபோது ஒரு கணம் நான் அதிர்ச்சியானேன்.

"ஆமாம் தாத்தா, இந்த நிலத்தை எல்லாம் நீங்க மறுபடியும் எங்களுக்கே கொடுத்திடுங்க… இது எங்க தாத்தாவோட நினைவா எங்களிடமே இருக்கணும்னு ஆசைப்படுறோம் நாங்க… "

"அப்பா… இப்ப சந்தோஷமா?"

என் பிள்ளை என்னைப் பார்த்தான். அவனுடைய முகத்தில் தெரிந்த அந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

புல் பூண்டுகள் மண்டிக்கிடந்த அந்த நிலங்கள் எல்லாம் உடனே பச்சைப் பசுஞ்சோலையாய் என் கண்முன்னே விரியத் தொடங்கின.

கண்கள் பனித்தன. நா தழுதழுத்தது. என் கைகள் என் பிள்ளையின் கைகளுக்குள் அடங்கிப் போயின.

– கலவை சண்முகம்

**ஆசிரியர் குறிப்பு** இவர், மகளே நீ மகளே நீ மடல் எழுது! என்னும் கதைப் பாடலையும் குழந்தை, நவராத்திரி, ஆசீர்வாதம் என்னும் இலக்கியப் படைப்புகளையும் படைத்துள்ளார். இது நெய்வேலி புத்தகக் கண்காட்சி நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசுபெற்ற சிறுகதை.

## செயல்பாடுகள்

- கதையில் வரும் அடுக்குத்தொடர்களைத் திரட்டி வாக்கியத்தில் அமையுங்கள்.
- சிறுவர்கள் ஏர் கலப்பையை வாங்கி உழுதபோது நடந்த நிகழ்வினை எழுதுங்கள்.
- கதையில் உங்களுக்குப் பிடித்த கதாபாத்திரத்தின் பண்பு நலன்களை விளக்குங்கள்.
- கதையின் மையக்கருத்து, பாத்திரப்படைப்பு, மொழிநடை போன்றவற்றை விமர்சனம் செய்து எழுதுங்கள்.
- கந்தசாமியின் மனவோட்டத்தை உரையாடலாக மாற்றி எழுதுங்கள்.

# மலையகம்



## எழில்மிகு ஏற்காடு

வானைத் தொடவிரையும் மரங்கள் – அங்கு
வாழும் பலகோடி நிறங்கள் – நறுந்
தேனைக் கூடதனில் தேவையின் மிகுதி சேர்த்து
தேடுமதை திசைமறந்த தேனீ – தென்றல்
தெம்மாங்கு பாடும்உடல் நாணி!

கற்பனை வளம்அங்கு பெருகும் – மலைக்
கவின்கண்டால் உடலுள்ளம் உருகும் – கண்கள்
அற்புதம்! அற்புதம்! என்றாலோலம் பாடி அந்த
அழகினைப் பண்பாடிப் போற்றும் – அதன்
அருகில்தான் வருமோபாழ் கூற்றம்?

பாய்போலப் புல்பரந்து கிடக்கும் – அதன்
பசுமேனி தனில்மான்கள் நடக்கும் – அங்கு
நோய்தீர்க்கும் மூலிகைகள் நூறுக் கும்மேல் மிகுந்து
நெஞ்சிற்குச் சுகமளிக்கும் நன்கு – அந்த
நல்லவற்றில் உண்டெனக்குப் பங்கு !

மலைப்பாதை வளைவுகளில் செல்ல –நம்
மனம்மயங்கும் அவ்வழகைச் சொல்ல – கோடி
விலைகொடுத்துக் கூறென்று சொன்னாலும் அடடா இங்கே
கூறத்தான் முடியுமோ என்னால் – அதைக்
கண்டுவிட்டேன் நானெந்தன் கண்ணால்!

மலர்க்கூட்டம் தேனூறிச் சிரிக்கும் – இயற்கை
மனமகிழ்ந்து தன்னுடலை விரிக்கும் – அங்குப்
புலரும் பொழுதுகளில் புகழ்மாலை வேளைகளில் பலப்பல
பறவைகள் சிறகடித்துப் பறக்கும் – அதைக்
பார்த்துவிடின் பசியறவே மறக்கும் !

படகுகளைச் சுமக்கும் ஓர்ஏரி – அதன்
பக்கங்களில் தவளைகளின் கச்சேரி – சுற்றி
அடர்ந்திருக்கும் மரங்களின்மேல் அமர்ந்திருக்கும் குரங்கு எல்லாம்
அப்பப்பா ! செய்யும்பல சேட்டை உண்மையில்
அம்மலையே ஓர்அழகுக் கோட்டை !

மங்கையர்கள் மலைக்கிழங்கு போலே – அவரின்
முகத்திருந்து பாயும்இரு வேலே – அந்தத்
தங்கரதப் பாவையரின் தளிருடலைக் கண்டுவிடின் மெய்யாய்
தாரணியும் தேவையில்லை யார்க்கும் அந்தத்
தோகையரைத் தான்கண்கள் பார்க்கும் !

தலைக்குமேல் படர்ந்துறங்கும் மேகம் – அதன்
தண்மைகண்டால் பறந்துவிடும் சோகம் நம்மைச்
சிலையாகச் செய்துவிட்டுச் சிரித்திருக்கும் புற்களின் மேல்
சின்னச்சின்ன முத்தா கப்பனி – மலைச்
சிறப்பைச்சொல்ல வார்த்தை யில்லைஇனி !

– ப. ஜீவகாருண்யன்

**ஆசிரியர் குறிப்பு** இவர் நெய்வேலியைச் சார்ந்தவர். இவர் எழுதிய நதியின் மடியில் என்னும் நூல் தமிழக அரசின் பரிசைப் பெற்றது. சமத்துவச்சுடர் இராமானுஜர், கவிச்சக்கரவர்த்தி என்ற நாடக நூற்களையும் எழுதியுள்ளார். இறுதிப் படியிலிருந்து என்னும் சிறுகதைத் தொகுப்பையும் மனிதனை நேசிக்கிறேன் என்னும் புதுக் கவிதைத் தொகுப்பையும் வெளியிட்டுள்ளார். இவருடைய களரி என்னும் நாவல் மலையாள மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- ஏற்காடு என்ற மலையின் அழகினை வர்ணித்து விளக்கி எழுதுங்கள்.
- பள்ளி ஆண்டு மலரில் வெளியிடுவதற்கு 'மலைகளும் பயன்களும்' என்னும் தலைப்பில் கட்டுரை தயார் செய்யுங்கள்.
- உலக வன தினத்தன்று பள்ளிக் காலைக் கூட்டத்தில் கூறுவதற்கு உறுதிமொழி தயாரியுங்கள்.



# உண்ணாமலை

தலைநகரில் ஆராய்ச்சிப் படிப்பை முடித்துவிட்டுத் தன் சொந்த ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்தாள் உண்ணாமலை. கடந்த ஆறு ஆண்டுகளில் ஓரிரு நாட்கள் மட்டும் ஊருக்கு வந்து போவதைத் தவிர மற்ற நாட்களிலெல்லாம் கல்லூரியிலேயே தங்கித் தன் படிப்பை முடித்திருந்தாள். தலைநகரத்திலிருந்து ஏழு மணி நேர பயணத்திற்குப்பின் வருகிற சிறு நகரத்திலிருந்து முப்பது கிலோ மீட்டர் சென்று பஸ் இறங்கி, அங்கிருந்து செல்கிற மண் பாதையில் இரண்டு மைல் தொலைவில் உள்ள தேவி மலைக்கு நடந்துதான் செல்ல வேண்டும்.

அங்குள்ள மலையின் உருவமும் வரலாறும் அக்கிராமத்திற்கு அப்பெயர் வரக் காரணமாயிற்று. இம்முறை அம்மலை பற்றிய ஆய்வுப் பணிகளை முடித்திட வேண்டுமென்ற திட்டத்தோடு பேருந்தில் பயணப்பட்டுக் கொண்டிருந்தாள்.

அழகிய உருவத்தோடு கருமையாகவும் ஆங்காங்கே சாம்பல் கலந்த நிறத்துடன் கம்பீரமாய் காட்சியளிக்கும் தேவிமலையின் உயரமும் அகலமும் பார்ப்பவர்களை மிரள வைக்கும்.

அம்மலையின் மீது கட்டப்பட்டுள்ள கோட்டை மற்றும் அங்குள்ள சுவர்கள் ஆட்சி புரிந்தவர்களுக்குச் சாட்சியாய் நின்று கொண்டிருந்தன.

மலையின் அடிவாரத்தில் சிறுவயதில், தன் தாய் கதிரம்மாளோடு ஆடு மேய்க்கச் செல்வாள் உண்ணாமலை. அப்படிச் செல்லும் பொழுதெல்லாம் அம்மலையையே பார்த்துக் கொண்டிருப்பாள் அவள். "அம்மா நாம அந்த மலமேல போயி ஆடு மேய்க்கலாம்" எனக் கெஞ்சுவாள். "அட வெவரங் கெட்டவளே! மலமேலயெல்லாம் போகக்கூடாதுடி."

அங்க, "தையலுக்குப் பூதங்கல்லாம் காவல் காக்குதாங். நாம போனா நம்மளையும் அடிச்சி காவு வாங்கிறும்" என்று அவளின் பேச்சைத் தட்டிக் கழிப்பாள் கதிரம்மாள்.

இவர்களோடு ஆடு மேய்க்க வரும் முனுசாமி தாத்தா மலையைப் பற்றி சொல்லும் சேதிகள் உண்ணாமலைக்கு மலைக்குப் போக வேண்டுமென்ற ஆசையை வளர்த்தது.

"நான் சின்னப் பையனா இருக்கும் போது என்னோட கூட்டாளிங்களோடு சேர்ந்துக்குனு ஊருக்கே தெரியாம மலமேல போயிட்டு வருவோம். அந்த மலமேல

போறதுக்குக் கொஞ்சம் தூரந்தான் கல்லுல படிக்கட்டு இருக்கும். அதுக்கு மேல போகணுன்னா பாறைங்க மேல ஏறித்தான் போகணும். அப்படிப் போனா ஒரு சாண் குளம் வரும். அதுல எவ்வளவு தண்ணி எடுத்தாலும் ஒரு சாண் அளவுமட்டும்தான் தண்ணி இருக்கும். அதனால அத ஒரு சாண் குளமுன்னு சொல்வாங்க, அங்கிருந்து மேல நடந்து போனா அங்கிருந்தவங்க தங்கினதுக்கு அடையாளமா பாழடஞ்சு போன வீடுங்க மாதிரி கொட்டடிங்க இருக்குது. அப்புறம் ஒரு பாறையில சின்ன சுரங்கம் மாதிரி இருக்கும். அதுக்குள்ள கொஞ்சம் தொலைவில போனா வெளிச்சம் வரும். அப்படியே கோட்டைச் சுவரும் வரும் அந்தச் சுவத்துலயிருந்து பார்த்தா இருக்கிற எல்லா இடங்களும் தெரியும். அப்படியே திரும்பி வந்தா அங்க ஒரு இடத்துல பாறைக்குக் கீழ் தண்ணி இருக்கும். அதுல கை கால் கழுவிக்கிலாம். அந்தத் தண்ணி வழியா தெரியுற வெளிச்சத்தப் பார்க்கப் போன யாரும் திரும்பி வந்ததுயில்லையாம். சுரங்கத்தப் பார்த்துட்டு மேல போயி பின்பக்கமா போனா பாறைக்குள்ள பள்ளமா இருக்குற பகுதியில தண்ணி தேங்கி நிக்கும். அங்கதான் அங்கிருந்தவங்க குளிப்பாங்களாம். முன்பக்கம் வந்தா ஒரு மதகுருவோட சமாதி இருக்கும். அதுக்குத் தினந்தோறும் நம்ம அப்துல்லாவோட தாத்தா, பாத்தியா பண்ணிட்டு விளக்கேத்திட்டும் வருவார். மலைமேல எதிரிங்க வராம இருக்க மலையைச் சுத்தி மதில் சுவர்களும் அந்தச் சுவத்துல வட்டமா ஓட்டைகளும் வெச்சு இருப்பாங்க. வருசாவருசம் மலமேல இருக்குற சமாதியில் உருஸ் விழாவும் மலையடிவாரத்தில் இருக்கற முருகன் கோயில் விழாவும் நடக்கும் போதெல்லாம் ஜனங்க மலமேல போயிட்டு வருவாங்க. அந்த விழாவெல்லாம் நடக்கறதும் போச்சு ஜனங்க மலமேல போறதும் நின்னாச்சு."

இதையெல்லாம் கேள்விப்பட்டதிலிருந்தே உண்ணாமலை மனதில் எப்படியாவது மலைமீது சென்று அந்த இடங்களெல்லாம் பார்க்க வேண்டும் என்ற ஆசையை மேலும் மேலும் கிளறியது.

உண்ணாமலை அவ்வூரின் அருகாமையில் உள்ள பள்ளிக்கூடத்திற்கு நடந்து போய் வரும்போதெல்லாம் மலையைப் பார்த்தவண்ணம் செல்வாள். பள்ளி வகுப்பறையில் தன் தோழிகளோடு பேசும்போதெல்லாம் தேவிமலை பற்றியும் முனுசாமி தாத்தா சொன்னதையும் திரும்பத் திரும்பச் சொல்வாள். மற்ற மாணவர்களைவிடத் தனக்குத்தான் அந்த மலையைப் பற்றி அதிகம் தெரியும் என்பதைப்போல பேசுவாள், நடந்துகொள்ளவும் செய்வாள். பள்ளிப் படிப்பை முடித்த அவளைப் பள்ளிக்கூட ஆசிரியரின் உதவியோடு தலைநகரில் கல்லூரி விடுதியில் தங்கிப் படிக்க ஏற்பாடு செய்திருந்தாள் கதிரம்மாள். ஆடுகளை மேய்த்துக் கொண்டும் அது போடும் குட்டிகளை வளர்த்து விற்பதும் மற்ற நேரங்களில் மாந்தோட்டங்களில் காவல்பணி செய்து கிடைக்கும் வருமானத்தையே உண்ணாமலையின் படிப்புக்கும் அவளைப் பார்க்கச் செல்வதற்கும் வைத்துக் கொள்வார். தன்னைப் பார்க்க வரும்பொழுது கதிரம்மாளிடம் அம்மலையைப் பற்றி விசாரிப்பாள் அவள். கதிரம்மாளோ 'அதுக்கென்ன' கெடக்குது என்று பதிலளித்துவிட்டு அவளின் படிப்பும் உடல்நலமும் குறித்தும் பேசத் தொடங்கி விடுவாள்.

உண்ணாமலையும் தன்னுடைய மேல் படிப்பில் மலைகள் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டாள். அதற்காகப் பல மலைகளின் தொன்மமும் வரலாறும் குறித்து ஆய்வுப் பணிகளைச் செய்து அம்மலைகளுக்குச் சென்றும் வருவாள். மற்ற மலைகளைப் பற்றி ஆய்வுப் பணிகளைச் செய்கிறபோது தன் ஊரின்

தேவிமலையைப் பற்றி ஆய்வு செய்து அதை ஆவணமாக வெளிக்கொண்டுவர முடிவெடுத்திருந்தாள்.

எட்டு மணி நேர பயணத்திற்குப்பின் அடைகிற நகரத்திலேயிருந்து தன் ஊருக்கு டவுன் பஸ் ஏறிச் சென்றுகொண்டிருந்தாள் உண்ணாமலை.

பழைய சாலைகளும் அதன் இரு புறமும் இருந்த மரங்களும் காணாமல் போயிருந்தன. ஆங்காங்கு விவசாய நிலங்களில் தனியார் கல்லூரிகளும் பெரிய பெரிய கல்குவாரிகளும் நங்கூரமிட்டிருந்தன.

பஸ் நிறுத்தம் வந்தவுடன் இறங்கியவளுக்குத் தன் ஊருக்கான மண்பாதை தெரியாத அளவுக்குச் சிறு கடைகளும் ஓட்டல்களும் விளம்பரப் பலகைகளும் மறைத்திருந்தன. ஒரு வழியாகத் தன் ஊருக்கான மண் பாதையில் நடந்து கொண்டிருந்தவளுக்கு ஆச்சரியமும் அதிர்ச்சியும் ஏற்பட்டது.

ஒற்றையடிப் பாதையாக இருந்த தேவிமலைப் பாதை இன்று பெரிதாகி கற்களை ஏற்றிக் கொண்டு செல்வதும் வருவதுமான வாகனங்களால் வழி பிதுங்கி குண்டும் குழியுமாகியிருந்தது. எந்த நேரமும் விவசாய வேலைகளும் மாந்தோப்புகளுமாக இருந்த நிலங்களெல்லாம் கல்குவாரிகளாக மாறியிருந்தன. பெரும் சத்தத்துடன் கற்களை அறுப்பதும் பாலிஷ் செய்வதும் பாலிஷ் செய்யப்பட்ட கிரானைட் கற்களை அடுக்கி வைப்பதும் கழிக்கப்பட்ட கற்கள் ஆங்காங்கு குவியல் குவியலாகக் கொட்டப்பட்டும் கிடந்தன.

ஊருக்கு வந்தவளிடம் "என்ன உண்ணாமலை, எப்படி இருக்கே? படிப்பு முடிஞ்சுதா? பார்த்து ஐஞ்சாறு வருசமாச்சு! வேலைக்குப் போறியா" என்று அக்கம்பக்கத்தவர்கள் நலம் விசாரிக்க, அவளும் அதற்குப் பதிலளித்து விட்டுச் சென்றாள், கதிரம்மாள் அவளுக்குத் திருஷ்டி சுற்றிப் போட்டாள். "ஏன்டி உண்ணாமலை! சீக்கிரமா குளிச்சிட்டு வா. நான் சாப்பாடு செய்றேன்." என்றவள் தன் வேலைகளைக் கவனித்தாள்.

உண்ணாமலையும் குளித்து, சாப்பிட்டுவிட்டு அவசர அவசரமாக வெளியே கிளம்பினாள். "ஏண்டி உண்ணாமலை, இவ்வளவு அவசரமாக எங்க போற?

"மலையப் பாக்கத்தான் போறேன்ம்மா.."

"எந்த மலைய?"

"நம்ம தேவிமலையத்தான் பார்க்கப் போறேம்மா. காலேஜ்ல படிக்கிறப்ப மலைகளைப் பத்தி ஆய்வு செய்ஞ்சி கட்டுரை எழுதியிருக்கேன். நம்ம தேவிமலையைப் பத்தியும் எழுதணும். அதான் மலையப் பார்க்கப் போறம்மா" என்று சொல்லி முடித்தவளிடம் "ஆமாடி அது உன் முப்பாட்டனோட மலை. அதை ஆளுற மகாதேவி நீ.. நீ வருவேன்னு ரத்தினக் கம்பளம் விரிச்சி காத்துனு இருப்பாங்க. போயி பாத்துட்டு வா! போடீ கூறுகெட்டவளே, அந்த மலயெல்லாம் வித்துக் காசாக்கினுகிறாங்க. மலயப் பாக்கப் போறாளாம் மலய... போயி ஆகுற வேலயப் பாரு." என்றாள் கதிரம்மாள்.

உண்ணாமலை சற்று தளர்ந்து போனாள். இருந்தாலும் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள். தோழிகளோடு கதிரம்மாளுக்குத் தெரியாமல் தேவிமலையைப் பார்க்கச் சென்றாள்.

சிறுவயது முதலே தனக்கும் அம்மலைக்கும் உறவு இருப்பதைப் போல உணர்ந்தவளாக வேக வேகமாகத் தேவிமலையைப் பார்க்க நடந்து கொண்டிருந்தாள். சற்று தொலைவு கடந்ததும், "யாரும்மா அங்கு நடந்து போறது" என்று கேட்டார் ஒருவர். காவலாளி போலத் தெரிந்தார்.

"மலயப் பாக்க போறோம்யா.."

"அங்கயெல்லாம் போகக் கூடாதும்மா பாறைக்கு வேட்டு வெச்சிருக்காங்க. கல்லு கில்லு மேல வந்து வுழும். வந்த வழியா திரும்பிப்போங்க..'

காவலாளியின் பேச்சைக் கேட்டு அதிர்ந்து நின்றாள் உண்ணாமலை. "ஆமாடி உண்ணாமலை, இப்படித்தான் நம்ம முனுசாமி தாத்தா ஆடு மேய்க்க போனபோது தலமேல கல்லு விழுந்து செத்துப் போயிட்டாரு" என்று அவள் தோழிகள் சொல்லி அவளை வீட்டிற்கு அழைத்தனர். அவளோ யார் பேச்சையும் கவனிக்காமல் தேவிமலையை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சிறுவயதில் தனக்குத் தோன்றிய அம்மலையின் உருவம் உருத்தெரியாமல் போயிருந்தது. அம்மலையின் மீது ஜே.சி.பி. வாகனங்களும் டிராக்டர்களும் டிப்பர் லாரிகளும் வெறிகொண்டு பாய்ந்து கொண்டிருந்தன. சில தனிநபர்களும் ஆண்டவர்களும் ஆள்பவர்களும் போட்ட வேட்டுகளால் ஆயிரம் கற்பனைகள் குடியிருந்த அந்த மலை சிதைந்து சின்னாபின்னமாகியிருந்தது. உண்ணாமலையின் ஆசையும் கனவும் இந்த வேட்டுகளால் தவிடுபொடியாகின.

பிரமை பிடித்தவளைப் போல நின்றுகொண்டிருந்த உண்ணாமலை கண்ணில் பட்டது அங்கிருந்த ஒற்றை மூங்கில் கட்டையில் தொங்கவிடப்பட்டிருந்த தகரத்தாலான அறிவிப்புப் பலகை.

"இயற்கை வளங்களைப் பேணுவோம். கனிமவளங்களைப் பாதுகாப்போம்"

வாசகத்தைப் படித்துச் சிரிக்க ஆரம்பித்தாள். மேலும் மேலும் சிரித்தாள். அவளது சிரிப்பொலி அங்கிங்குமாய் மிஞ்சியிருந்த தேவிமலையில் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

– வி. சங்கர்

**ஆசிரியர் குறிப்பு**

உண்ணாமலை என்னும் சிறுகதை 'முருகம்மா சிறுகதைகள்' என்னும் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டதாகும். இக்கதையை எழுதிய வி. சங்கர் வீதிநாடகக் கலைஞராக விளங்கி வருகிறார். இவர் அறிவொளி இயக்கத்தில் தன்னார்வலராகத் தொண்டாற்றி வருகிறார்.

## செயல்பாடுகள்

- மலை வளத்துடன் காணப்பட்ட தேவிமலை பிற்காலத்தில் உருதெரியாமல் போனதற்கான காரணம் என்ன? கூறுங்கள்.
- மலைகள் அழிக்கப்படுவதால் மக்களும் பிற உயிரினங்களும் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகின்றனர். இதனைத் தவிர்க்கும் வழிமுறைகளைச் சுட்டிக்காட்டித் தலையங்கம் தயார் செய்யுங்கள்.
- நீர்வளத்திற்கு மலைகள் எவ்வாறு பயன்படுகின்றன என்பது குறித்த தகவல்களை நூலகம், இணையதளத்திலிருந்து திரட்டி எழுதுங்கள்.

## குற்றாலக் குறவஞ்சி

முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும்
முற்றம்எங்கும் பரந்துபெண்கள் சிற்றிலைக் கொண்டோடும்
கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்
கிம்புரியின் கொம்பொடித்து வெம்புதினை இடிப்போம்
செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப்பந் தடிக்கும்
தேன்அலர்சண் பகவாசம் வானுலகில் வெடிக்கும்
வழங்குகொடை மகராசர் குறும்பலவின் ஈசர்
வளம்பெருகும் திரிகூட மலைஎங்கள் மலையே !

ஆடுமர வீனுமணி கோடிவெயில் எறிக்கும்
அம்புலியைக் கவளமென்று தும்பிவழி மறிக்கும்
வேடுவர்கள் தினைவிரைக்கச் சாடுபுனந் தோறும்
விந்தைஅகில் குங்குமமுஞ் சந்தனமும் நாறும்
காடுதொறும் ஓடிவரை ஆடுகுதி பாயும்
காகமணு காமலையில் மேகநிரை சாயும்
நீடுபல வீசர்கயி லாசகிரி வாசர்
நிலைதங்கும் திரிகூடமலை எங்கள் மலையே !

கயிலைஎனும் வடமலைக்குத் தெற்குமலை அம்மே
கனகமகா மேருஎன நிற்குமலை அம்மே
சயிலமலை தென்மலைக்கு வடக்குமலை அம்மே
சகலமலை யுந்தனக்குள் அடக்குமலை அம்மே
வயிரமுடன் மாணிக்கம் விளையுமலை அம்மே
வான்இரவி முழைகள்தொறும் நுழையுமலை அம்மே
துயிலுமவர் விழிப்பாகி அகிலமெங்கும் தேடும்
துங்கர்திரி கூடமலை எங்கள்மலை அம்மே !

கொல்லிமலை எனக்கிளைய செல்லிமலை அம்மே
கொழுநனுக்குக் காணிமலை பழநிமலை அம்மே
எல்லுலவும் விந்தைமலை எந்தைமலை அம்மே
இமயமலை என்னுடைய தமையன்மலை அம்மே
சொல்லரிய சாமிமலை மாமிமலை அம்மே
தோழிமலை நாஞ்சிநாட்டு வேள்விமலை அம்மே
செல்இனங்கள் முழவுகொட்ட மயிலினங்கள் ஆடும்
திரிகூடமலை யெங்கள் செல்வமலை அம்மே !

– திரிகூட இராசப்பக் கவிராயர்

**ஆசிரியர் குறிப்பு** இவர் திருநெல்வேலி மாவட்டம் தென்காசியை அடுத்த வடகரைப் பகுதியில் வாழ்ந்தவர். குறவஞ்சியைப் பாடி மதுரையை ஆண்ட சொக்கலிங்க நாயக்கரிடம் குறிஞ்சிமேடு என்னும் நிலப்பகுதியைப் பரிசாகப் பெற்றார். குறவஞ்சி 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று. இவரது குற்றாலக் குறவஞ்சி குறிப்பிடத்தக்க ஓர் சிற்றிலக்கியம்.

### செயல்பாடுகள்

- பாடலில் வரும் மலைகளின் பெயர்களையும் அவற்றின் சிறப்புகளையும் தொகுத்து எழுதுங்கள்.
- குற்றாலக் குறவஞ்சி பாடல்களை நயம் பாராட்டி எழுதுங்கள்.

அலகு 2

# ஒன்றெனக் கொள்



'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று பூங்குன்றனார், உலகியல் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் உருவாக்கும் நோக்கில் எடுத்துரைத்த கருத்தினை நாம் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். கணினி யுகத்தில் வாழும் நாம் சாதி, மத, மொழி, நாடு வேறுபாடின்றி வாழ்வதுடன் சமூக விதிமுறைகளையும் பழக்க வழக்கங்களையும் முறையாகக் கடைப்பிடித்து வாழ வேண்டும் என்ற நோக்கில் இவ்வலகு வடிவமைக்கப்பட்டுள்ளது.

# முதுமையில் இனிமை



## சுமை அல்ல... மூப்பு

'ஜிரியட்ரிக்' என்றால் எத்தனை பேருக்குத் தெரியும்? மூப்பியல்துறை என்று பொருள். குழந்தைகளிடம் நாம் எந்த அளவுக்குப் பாசமும் பரிவும் காட்டுகிறோமோ அதே அளவு முதியோரிடமும் அன்பு செலுத்த வேண்டும். வைத்தியம் பார்ப்பதில் அக்கறை செலுத்த வேண்டும் என்பதுதான் இதன் பொருள்.

முதியோரைக் குணப்படுத்தும் அரிய மருந்து அன்பும் பாசமும்தான். தனக்கு மிகவும் நெருக்கமான சொந்தங்களால் உதாசினப்படுத்தப்படுகிறோம். தன்னிடம் அக்கறை காட்டுபவர்கள் குறைந்து போய்விட்டனர் என்ற விரக்திதான் பெரும்பாலான முதியோரைப் படுக்கையில் தள்ளுகிறது.

இது மூன்று ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்தது.

எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. ஒரு முகவரியைக் குறிப்பிட்டு, "டாக்டர், என் அப்பாவுக்கு உடம்பு சரியில்லை. நேரில் அழைத்து வரும் நிலையில் அவர் இல்லை. வயசாகிவிட்டது. உங்களால் வீட்டுக்கு வரமுடியுமா?" என்று கேட்டார். அழைத்தவர் குரலில் ஒரு தோரணையான பெரிய மனுஷத்தனம் தெரிந்தது.

"ஏதாவது சீரியஸ் ப்ராப்ளமா? உடனடியாக வரணுமா?" என்றேன்.

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. மாலை ஐந்து மணிக்கு மேல் நீங்கள் எப்போது வேணுமானாலும் வரலாம். நானும் வீட்டில் இருப்பேன். என் பேர் சேதுராமன்" என்று குறிப்பிட்டு, மீண்டும் ஒரு முறை தமது வீட்டு

முகவரியைச் சொல்லி எழுதி வைத்துக் கொள்ளப் பணித்தார்.

"சரி, க்ளினிக் முடித்துவிட்டு வருகிறேன்," என்று வாக்களித்தேன்.

அது சாதாரண வீடு அல்ல. பெரிய பங்களா. நான் காரைக் கொண்டு போய் நிறுத்திய ஓசை கேட்டதும் முன்ஹால் சோபாவில் ஏதோ பைல் பார்த்துக் கொண்டிருந்த அந்தப் பெரிய மனிதர் எழுந்து வந்தார். பைஜாமா குர்தாவில் இருந்தார்.

"ஹலோ டாக்டர், வாங்க," என்று பிசினஸ்காரர்களுக்கே உரிய ஓர் அன்னியோன்னிய கம்பீரத்தோடு கைகுலுக்கி வரவேற்றார்.

பொதுப்படையாகச் சற்று நேரம் அவருடன் பேச்சுக் கொடுத்ததில் தெரிந்து கொண்ட விஷயங்கள்: சேதுராமனுக்கு ஒரு சகோதரர், அவர் மனைவி மக்களோடு டில்லியில் செட்டில் ஆகிவிட்டார். பெரிய உத்தியோகம். ஒரு தங்கை. அவள் ஓர் அமெரிக்க மாப்பிள்ளைக்கு வாழ்க்கைப்பட்டு அவளும் அங்கேயே வங்கியில் பணியாற்றுகிறாள். இவருக்குப் பிள்ளை குட்டி கிடையாது. மனைவிக்குச் சோஷியல் சர்வீஸ் ஈடுபாடு. இப்படித்தான் அடிக்கடி மீட்டிங், அது இது என்று வெளியில் போய் விட்டுத் தாமதமாக இரவுகளில் வீடு திரும்பும் ரகம். அப்பா தம்முடன் இருக்கிறார்... ஓரளவு சூழ்நிலை புரிகிறது.

"பேஷண்ட் எங்கே இருக்கிறார்? பார்க்கலாமா?" என்றேன்.

"வாருங்கள்," என்று அவர் முன் செல்ல, நான் தொடர்ந்தேன்.

அந்த விஸ்தார பங்களாவின் முன் கட்டு, அடுத்த கட்டு, பின்கட்டு என்று பல அறைகளைப் பின்னுக்குத் தள்ளிக் கொண்டு என்னைப் புறக்கடைப் பக்கம் காம்பவுண்டை ஒட்டினாற் போலிருந்த ஓர் அறைக்கு அழைத்துச் சென்றார்.

அந்தப் பங்களாவில் தேவையில்லாத, நடமாட்டமில்லாத இடங்களில் எல்லாம் குழல் விளக்குகளும், லஸ்தர்களும் பளிச்சிட்டுக் கொண்டிருக்க, அந்த அறை அரையிருட்டுச் சூழலில் ஜீரோ வாட் பல்ப் வெளிச்சத்தில் இருந்தது. எனக்காக ஸ்விட்ச் தட்டிப் பிரகாச விளக்கு ஏற்றிய சேதுராமன், சமாதானமாய் என்னிடம் சொன்னார்.

"அப்பாவுக்குத் தூக்கம் கெட்டுடும்னுதான் ட்யூப் லைட் போடறதில்லை," என்றவர், தகப்பனாரை நெருங்கி. "அப்பா, டாக்டர் வந்திருக்கார்" என்று காதருகே சத்தமாகச் சொன்னார்.

இரண்டு வாரத்து நரைமுடி முகத்தோடு இருந்த அந்தப் பெரியவருக்கு எழுபது வயது இருக்கலாம். பார்வை புரையோடியிருந்தது. தடிமனான கண்ணாடி. எழுந்து உட்கார முனைந்தார். நான் அவருக்கு உதவும் வகையில் அவரது மெலிந்த தோளைப் பற்றினேன். அவர் திமிறிக் கொண்டு என்னைத் தவிர்த்தார்.

"அப்பா, டாக்டர் உங்களை டெஸ்ட் பண்ண வந்திருக்கார்." என்று துடைத்துப் போட்ட குரலில் சேதுராமன் சொல்ல...

ஒரு கணம் அவரை வெறித்த பெரியவர் என்னை அளப்பது போல் திரும்பி ஏறிட்டார். ஏதும் பேசவில்லை. முகத்திலே ஓர் இறுக்கம்.

நான் முதியவரை நெருங்கி, "சார், உங்களுக்கு என்ன பண்ணுகிறது?" என்று குழைந்தவாறே அவர் கரத்தைப் பற்றினேன். அவ்வளவுதான். எந்த நோயாளியிடமுமே எனக்கு நேராத ஓர் அனுபவம், என் முகத்தில் எச்சிலைத் துப்பிவிட்டார். அப்போது எனக்கு அதிர்ச்சி ஏற்பட்டாலும், அதைவிடப் பேரதிர்ச்சி அடுத்தாற்போல் ஏற்பட்டது.

அந்தப் பெரிய மனிதர் சேதுராமன் குபீரென்று பாய்ந்து, அவரைப் பெற்ற அந்தப் பெரியவரைக் கண் மண் தெரியாமல்' பளார் பளாரென்று அறைந்து, முஷ்டி மடக்கித் தாக்கினாரே பார்க்க வேண்டும்!

நான் ஆடிப்போய் விட்டேன். ஓடிச் சென்று இழுத்துப் பிடித்து விலக்கிவிட்டு, அதே சமயம் முகத்திலிருந்த எச்சிலைத் துடைத்தவாறே, "லுக் மிஸ்டர் சேதுராமன், இது பேஷண்ட்டுக்கும் டாக்டருக்கும் உள்ள பிரச்சினை. நான் உங்ககிட்ட ஏதும் புகார் செய்தேனா? நீங்க எதுக்கு நடுவிலே புகுந்து பெத்த அப்பாவை மாட்டை அடிக்கிற மாதிரி போட்டு அடிக்கிறீங்க? இந்த வயசானவரை இப்படியெல்லாம் மிருகத்தனமா அடிக்கிறதுக்கு

**உவமைத்தொகை**

அதியன் : இனியா தொகைகள் ஆறு வகை என்று படித்தோமே நினைவிருக்கிறதா?

இனியா : பசுமரத்தாணி போல் பதிய வைத்து சொல்லித் தந்தாரே ஆசிரியர் மறக்கவா முடியும்!

அதியன் : அப்படியானால் உவமைத்தொகையைக் கொஞ்சம் விளக்கிக் கூறேன். நான் மறந்துவிட்டேன் . நாளைய தேர்வில் கேட்டாலும் கேட்கலாம் .

இனியா : எனக்கு நினைவிருக்கிறதா என்று சோதிக்கத் தானே இவ்வினா . ஆனாலும் சொல்கிறேன்.

அதியன் : சரி! விளக்கமாகவே சொல்.

இனியா : ஒன்றை இன்னொன்றுடன் ஒப்புமைப்படுத்திச் சொல்லுவது உவமை.' மீன் போன்ற கண்கள்' இங்கு , கண்ணுக்கு மீன் உவமையாக கூறப்படுகிறது. இடையே போன்ற என வருவது உவமை உருபு .

அதியன் : சரி ! மேலும் சொல்லேன்.

இனியா : உவமை உருபுகள் இல்லாமலும் உவமைகள் வருவதுண்டு. ஆனாலும் பொருள் மாறுபடுவதில்லை .

அதியன் : அதாவது உவமைத்தொகையில் போன்ற , அன்ன , நிகரான முதலான உவமை உருபுகள் வெளிப்படையாக வராமல் மறைந்து வரும். அப்படித்தானே.

இனியா : ஆமாம் ! அவ்வாறு 'உவமை உருபுகள் தொக்கி நிற்கும் சொற்களைத்தான் உவமைத்தொகை என்கிறோம் ' பவளவாய் , மதிமுகம், மலரடி, பால்மதி ….. இவையெல்லாம் உவமைத்தொகைகள்.

அதியன் : நன்றாகவே விளக்கினாய் .. இனியா ! உனக்கு ஓர் ஆசிரியராகும் தகுதி இருக்கிறது.

இனியா : நன்றி அதியா

உங்களுக்கெல்லாம் எப்படி சார் மனசு வந்தது? போங்க சார், தயவு செய்து வெளிய இருங்க. பெரிய மனுஷனா லட்சணமா நடந்துக்குங்க சார். தயவு பண்ணி வெளிய இருங்க கொஞ்ச நேரம்," என்று படிப் படியாகக் குரலில் ஏற்றிய கண்டிப்பில் அஞ்சியோ, அவமானப்பட்டோ அந்த மனிதர் அந்தப் பெரியவருடன் என்னைத் தனித்திருக்க விட்டுவிட்டு ஹாலுக்குப் போய்விட்டார்.

அப்புறம் நான் அந்த அறைக் கதவைத் தாழிட்டுக் கொண்டு பெரியவர் அருகில் வந்தேன். நெருங்கி அவர் எதிரில் அமர்ந்து அவரது முகத்தையே சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தேன். அவர் என்னைப் பார்க்கக் கூசியவராய்த் தலை குனிந்தார்.

அவரே பேசட்டும் என்று காத்திருந்தேன். நீண்ட குறுகுறுப்பான மவுனத்துக்குப் பிறகு வாய் திறந்தார். "ஸாரி.." என்றார்.

அவரைத் தழுவிக் கொள்ளாத குறையாக ஆறுதலாக முதுகில் வருடிக் கொடுத்தேன். "அதெல்லாம் பரவாயில்லை சார். என்னுடைய அப்பாவைப் போல் இருக்கிறீர்கள்..." என்று நான் சொல்ல இடைமறித்தார் அவர்.

### உம்மைத்தொகை

இனியா : அதியா! இந்தச் செய்தித் தலைப்பைப் பாரேன்!

அதியன் : என்ன எழுதியிருக்கிறார்கள்?

இனியா : "உலகக் கோப்பைக் கிரிக்கெட் இந்தியா இலங்கை மோதல்".

அதியன் : சரிதானே! என்ன ஐயம்?

இனியா : நீதான் இலக்கணம் தவறாதவன் ஆயிற்றே. இந்தியாவும் இலங்கையும் என வர வேண்டாமா ? 'உம்' விடுபட்டு இருக்கிறதே. இடையே ஓர் அரை புள்ளி(,) ஆவது போட்டு இருக்கலாம்,

அதியன் : சரியான ஐயப்பாடுதான் . நன்றாக கேட்டாய் இனியா ! இது தவறில்லை. இவ்வாறு எழுதுவது தமிழ் மொழியின் ஒரு சிறப்பு என்றே சொல்லலாம்.

இனியா : என்ன அதியா! தப்பா எழுதினால் சிறப்பு என்கிறாயே !

அதியன் : ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்களை அடுக்கிச் சொல்லும்போது ஒவ்வொரு பெயரையடுத்தும் 'உம்' எனும் இடைச்சொல் வர வேண்டும். சில இடங்களில் அவ்வாறு வராமல் எழுதினாலும் பொருள் மாறுவதில்லை.

இனியா : ஓர் எடுத்துக்காட்டு சொன்னால்தானே புரியும் .

அதியன் : அவசரப்படாதே இனியா ! சேரனும் சோழனும் பாண்டியனும் வந்தனர் என 'உம்' சேர்த்துச் சொல்வதைச் 'சேர சோழ பாண்டியர் வந்தனர்' என்று 'உம்' வராமல் சொன்னாலும் தவறில்லை. இவ்வாறு 'உம்' மறைந்து வரும் சொற்களை உம்மைத்தொகை என்பர். சரி நீயும் இரண்டு எடுத்துக்காட்டுகளை ஆலோசித்து சொல்லேன்.

இனியா : கை கால் கழுவ வேண்டும், செடி கொடிகள் வளர்ந்துள்ளன, ஏரி குளம் நிறைந்தன…

அதியன் : போதும்…… போதும்! உனக்கு நூற்றுக்கு நூறுதான்.

"நோ சார், என்னைப் போல ஒரு அப்பா உயிரோட இருக்கக் கூடாது," என்றார். என் முகத்தை ஏறிட்டுப் பொலபொலவென்று கண்ணீர் வடித்தார். "ஆனா உங்களைப் போல ஒரு பிள்ளைக்கு நான் அப்பாவா இருக்கக் கொடுத்து வைக்கலையே!" என் கையைப் பிடித்துக் கண்ணில் ஒற்றிக் கொண்டார்.

"ஏன், மிஸ்டர் சேதுராமன் உங்களைச் சரியாகக் கவனிக்கறதில்லையா?" தெரிந்தே, அவருடைய துக்கத்துக்கு ஒரு வடிகால் வெட்ட இப்படி ஒரு கேள்வியைப் போட்டேன்.

அவர் என்னை ஏறிட்டு ஒரு விரக்திச் சிரிப்பு உதிர்த்தார். "கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி அவன் என்னைக் கவனிச்சதைத்தான் நேரே பார்த்தீங்களே!" மூச்சு விட்டவர், திடுதிப்பென்று ஆவேசப்பட்டார். "டாக்டர் உங்ககிட்ட என்ன சொல்லி இங்கு அழைத்து வந்தான்?"

"அப்பாவுக்கு உடம்பு சரியில்லேன்னு சொல்லித்தான் கூட்டி வந்தார்."

அவர் பலமாகப் பக்கவாட்டாய்த் தலையாட்டினார். "இல்லை டாக்டர் இந்த ஒடம்புக்கு வைத்தியம் பார்க்கறதுக்காக அவன் உங்களை இங்க கூட்டி வரலை. இன்னும் எத்தனை நாளைக்கு நான் உயிரோட இருப்பேன்னு தெரிஞ்சுக்கறதுக்காகத்தான் என் நாடி பிடிச்சுப் பார்க்கச் சொல்லியிருக்கிறான். எனக்குத் தெரியும். அந்தக் கோவத்திலேதான் நான் உங்களை அப்படி அசிங்கப்படுத்தினேன். அதனாலயாவது நீங்க வெளிய போயிடுவீங்கன்னு நினைச்சேன். ஆனா நீங்க..."

"சார், பெத்த அப்பன் சாகணும்னு எந்தப் பிள்ளையாவது நினைப்பாரா? எதனால் அப்படி நினைக்கிறீங்க?"

"அவனுக்கு நான் பெரிய சுமையாப் போயிட்டேன் டாக்டர். மூத்தவன் டில்லியில் செட்டில் ஆயிட்டான். பொண்ணு திரும்பியும் பார்க்கறதில்லை. வேறு என் சைடிலே கூடப் பிறந்தவங்க யாரும் இப்ப உயிரோட இல்லை. இவனைத் தவிர என்னைப் பார்த்துக்க யாரும் இல்லை. டாக்டர், இந்த வீட்டுக்கே நான் வேண்டாத பண்டம், அழுகல். எப்ப தூக்கியெறியலாம்னு பார்த்துட்டிருக்காங்க. பகவான் என்னைக் கொண்டு போகலையே!

"இவன் பெண்டாட்டிக் கிட்ட இவன் பாச்சா பலிக்கிறதில்லை. அவமேல இருக்கிற கோவத்தையெல்லாம் என்கிட்டதான் கொட்டறான். எப்பவாவதுதான் இந்தப் பக்கம் எட்டிப் பார்ப்பான். அதுவும் செத்தானா, பிழைச்சிருக்கானான்னு தெரிஞ்சுக்கத்தான். சொல்லுங்க டாக்டர், எனக்கு எதுக்கு இப்படியொரு வாழ்க்கை? என் மேல உங்களுக்குப் பாவமா இல்லையா? மெர்ஸி கில்லிங்கா ஏதாவது விஷ ஊசி போட்டுச் சாவடிச் சிடுங்களேன் ப்ளீஸ்..." கெஞ்சினார் அந்தப் பெரியவர்.

"பேஷண்டைச் சாவடிக்கிறது டாக்டர் வேலை இல்லை சார். அவங்களை வாழ வைக்கறது எங்க கடமை."

அவரை மெல்ல மெல்லத் தேற்றி, உடலைப் பரிசோதித்தேன். குறிப்பிட்டுச் சொல்லும்படி எந்த உடல் கோளாறும் இல்லை. எல்லாம் மனக்

கோளாறுதான். வயதேறியதன் பலவீனத்துக்கு வைட்டமின் மாத்திரைகள் எழுதிக் கொடுத்தேன்.

சேதுராமனிடம் வந்து, "பாவம் சார், வயதான உங்கள் தந்தை பாசத்துக்காக, உங்கள் பார்வைக்காக ஏங்குகிறார். என்னதான் உங்களுக்கு டென்ஷன், வேலை நெருக்கடி இருந்தாலும் ஒரு நாளைக்கு ஐந்து அல்லது பத்து நிமிடம் அவரோடு உட்கார்ந்து அன்பாக, ஆதரவாகப் பேசுங்கள். ஒரு சின்ன டி.வி. வையுங்கள். பொழுதுபோக்காய்ப் படிக்க பத்திரிகை, புத்தகங்கள் வாங்கிப் போடுங்கள். இப்போதைக்கு அவர் உடலில் வேறு எந்தக் கோளாறும் இல்லை. பலவீனம்தான். வேறு எதற்கும் தேவைப்பட்டால் போன் பண்ணுங்கள்," என்று விடை பெற்றேன். அதற்குப் பிறகு சேதுராமனிடமிருந்து எனக்கு எந்த அழைப்பும் வரவில்லை.

– டாக்டர் செ. நடராசன்

**ஆசிரியர் குறிப்பு** இந்த அனுபவக்கட்டுரை 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. இதன் ஆசிரியர் டாக்டர் செ. நடராசன். இவர் சென்னையில் மருத்துவராகப் பணியாற்றி வருகிறார். முதுமையும் மூளை நரம்பு நோய்களும், முதுமை ஒரு முழுநிலா, பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்க, முதுமையே வா வா வா ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார். பத்மஸ்ரீ பட்டம் பெற்றவர்.

## செயல்பாடுகள்

- ஜிரியட்ரிக் பற்றி கட்டுரை தரும் செய்திகளைத் தொகுத்து விளக்கக் குறிப்பு உருவாக்குங்கள்.
- 'சுமை அல்ல.... மூப்பு' என்ற பாடப்பகுதியை உரையாடல் வடிவில் மாற்றி எழுதுங்கள்.
- முதியோர்களுக்குச் சமூகத்தில் மதிப்பளிக்க வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டு உறுதிமொழி தயார் செய்யுங்கள்.
- இந்தக் கட்டுரையில் வரும் பேச்சுவழக்குச் சொற்களைத் தொகுத்து அவற்றிற்கு இணையான தூய தமிழ்ச் சொற்களைப் பட்டியலிடுங்கள்.
- முதியவர்கள் சுகமா? சுமையா என்னும் தலைப்பில் பட்டிமன்றக் குறிப்பு தயாரியுங்கள்

## குடும்ப வாழ்வியல்

**மூத்த பிள்ளை முதியவரோடு**
வேடப்பன் தம்பி யான
வெற்றிவேல், மனைவி யோடு
வேடப்பன் வாழ்ந் திருந்த
வீட்டினில் வாழு கின்றான்.
வேடப்ப னோ, தன் தந்தை
வீட்டினிற் குடும்பத் தோடு
பீடுற வாழு கின்றான்.
பெற்றவர் முதுமை பெற்றார்!

**முதியோருக்கு மருமகள் தொண்டு**

வேடப்பன் மனைவி யான
நகைமுத்து மிகவும் அன்பாய்
வேடப்பன் தந்தை தாய்க்கு
வேண்டுவ தறிந்தே அன்னார்
வாடுதல் சிறிதும் இன்றி
வாய்ப்புறத் தொண்டு செய்வாள்;
ஆடிய பம்ப ரங்கள்
அல்லவா அம்மூத் தோர்கள்?

**தலைக்கடை அறையிலே மணவழகர் தங்கம்**

தலைக்கடை அறைக்குள் அந்தத்
தளர்மண வழகர் ஓர்பால்
இலக்கியம் படிப்பார்! இன்பத்
துணைவியார் கேட்டி ருப்பார்!
உலர்ந்தபூங் கொடிபோல் தங்கத்(து)
அம்மையார் ஒருபால் குந்திப்
பல ஆய்வார்; துணைவர் கேட்பார்:
துயிலுவார்; பழங்கா லத்தார்.



**மணவழகர் உடல்நிலை**

மணவழ கர்க்கு முன்போல்
வன்மையோ தோளில் இல்லை!
துணைவிழி ஒளியும் குன்றக்
கண்ணாடித் துணையை வேண்டும்;
பணையுடல், சருகு! வாயிற்
பல்லில்லை! மயிர்வெண் பட்டே!
உணவெலாம்! பாலின் கஞ்சி;
உலவுதல் சிறிதே ஆகும்.

**தங்கத்தம்மையார் உடல்நிலை**

நன்னிலாக் கதிர்போல் கூந்தல்
நரைத்தது. கொண்டை யிட்டு
முன்னிலா முகில்உண் டாற்போல்
முகத்தொளி குறைய லானார்!
அன்புடல் அறத்தால் தோய்ந்த
ஆயிரம் பிறைமூ தாட்டி
தன்னுசீர் அன்னாள் மெய்யோ
வானவில் போற்கூ னிற்றே!

**முதியோர் அறைக்கு மக்கள் பேரர் வந்து போவார்கள்**

இருபெரு முதியோர் தம்மைத்
தலைக்கடை அறைசு மந்து
பெரும்பேறு பெற்ற தன்றோ!
பிள்ளைகள், அவர்ம னைமார்
வருவார்கள்; அறங்கேட் பார்கள்.
மற்றுள பேர்த்தி பேரர்
வருவார்கள் அளவ ளாவி
மணியோடு பள்ளி செல்வார்.



**இரு முதியோர் நிரம்பிய உள்ளம்**

மைந்தர்க்குக் கல்வி சேர்த்தோம்
மகள்மார்க்கும் அவ்வா றேயாம்
எம்தக்க கடன்மு டித்தோம்
இனிதாக வாழு கின்றோம்;
முந்துறச் சுற்றத் தார்க்கும்
செய்வன முழுதும் செய்தோம்;
இந்தநாள் வரைக்கும் வாய்மை
இம்மியும் மறந்த தில்லை.

– பாரதிதாசன்

**ஆசிரியர் குறிப்பு** அழகின் சிரிப்பு, இருண்ட வீடு, எதிர் பாராத முத்தம், இளைஞர் இலக்கியம், குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு என்பவை இவரது படைப்புகளாகும். இப்பகுதி 'குடும்ப விளக்கு' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. புரட்சிக்கவி, பாவேந்தர் என்றெல்லாம் அறியப்படுபவர்.

## செயல்பாடுகள்

- பாரதிதாசனின் குடும்ப வாழ்வியல் கதாபாத்திரங்களில் உங்களைக் கவர்ந்த கதாபாத்திரம் பற்றி எழுதுங்கள்.
- 'முதியோரைப் பேணல்' என்னும் தலைப்பில் பாரதிதாசன் கவிதையின் அடிப்படையில் கட்டுரை தயார் செய்யுங்கள்.
- உங்கள் வீட்டிலோ வீட்டின் அருகிலோ வசிக்கும் முதியவர்களைப் பேணுவதில் உங்களின் பங்கு குறித்து எழுதுங்கள்.
- கீழ்க்காணும் சொற்களை அகரவரிசைப்படுத்திப் பொருள் எழுதுங்கள்.
  (முகில், சீர், மெய், முதுமை, பீடு, இம்மி, வாய்மை, மைந்தர்).



## ரயில் பயணத்தில்

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் வழக்கம் போல் களை கட்டியிருந்தது. பாதுகாப்புக்காகப் போலீஸார் ஆங்காங்கே நிறுத்தப்பட்டிருந்தனர். சமீபத்தில் நடந்த வெடிகுண்டு வெடிப்பு சம்பவத்திற்குப்பின் காவலர்கள் மிகக் கவனமாகக் கடமையாற்றிக் கொண்டிருந்தனர். எங்குப் பார்த்தாலும் மக்கள் கூட்டம். பயணிகள் பலர் அந்தச் சந்தடியிலும் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தனர். இடையிடையே இனிய பெண் குரலில் அறிவிப்பு ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. சில பயணிகள் தங்கள் லக்கேஜ்களைத் தூக்க முடியாமல் கஷ்டப்பட்டுத் தூக்கி வந்து கொண்டிருந்தனர். 'குறைந்த சாமான் நிறைந்த வசதி" என்கின்ற வாசகங்களைக்கூட ரயில்களில் இப்பொழுது காண முடிவதில்லை. ஒருவேளை, சொல்லிப் பயனில்லை என்று விட்டு விட்டார்களோ என்னமோ!

ராஜதானி எக்ஸ்பிரஸில் தில்லி செல்வதற்காக அன்வர் வந்திருக்கிறான். முதலில் ஹிக்கின் போதம்ஸ் ஸ்டால் உள்ளே போய் பயண நேரத்தில் படிப்பதற்குச் சில புத்தகங்களை வாங்கிக் கொண்டான். ராஜதானி எக்ஸ்பிரஸ் கிளம்புகின்ற ஐந்தாவது பிளாட்பாரத்தில் வந்து கூட்டம் அதிகம் இல்லாத இடமாகப் பார்த்து நின்றான். இந்திய ரயில்வே என்பது எவ்வளவு பெரிய நெட்வொர்க்! சுதந்திர இந்தியாவில் பெருமைப்படத்தக்க முன்னேற்றம் இந்திய ரயில்வேயும் தகவல் தொடர்பும் என்பது அன்வரின் அசைக்கமுடியாத நம்பிக்கை. அன்வர் பிளாட்பாரத்தில் அங்கும் இங்கும் நோட்டமிட்டான். சற்று தள்ளி ஒரே பெண்கள் கூட்டம். கல்லூரி மாணவிகள் தில்லிக்குச் சுற்றுலாப்பயணம் செல்கின்றனர் என்று அன்வர் நினைத்துக்கொண்டான்.

ராஜதானி எக்ஸ்பிரஸ் வந்து பிளாட்பாரத்தில் நின்றவுடன் அன்வர் தனக்கு ஒதுக்கப்பட்ட பெட்டியில் முதல் ஆளாக ஏறிக்கொண்டான்.

கைவசம் உள்ள சூட்கேஸைப் பாதுகாப்பான இடத்தில் வைத்துவிட்டு ஜன்னல் ஓரம் அமர்ந்து கொண்டான். பாட்டரியில் இயங்கும் வண்டியில் சில வயதான பயணிகள் பிளாட்பாரத்தில் வந்து கொண்டிருந்தனர். வயது முதிர்ந்தவர்களுக்கும் உடல் ஊனமுற்றவர்களுக்கும் நோயாளிகளுக்கும் நல்ல பயனுள்ள ஏற்பாடு இது.

ஒரு நடுத்தர வயதுடைய மனிதரும் அவர் மனைவியும் ஒரு மூதாட்டியும் அன்வர் அருகில் உள்ள இருக்கையில் அமர்ந்தனர். அவர்களுடைய உடைமைகள். பெட்டிப் படுக்கைகளை எடுத்துக்கொண்டு இரண்டு பேர் வந்தனர். அந்த நடுத்தர வயதுடைய மனிதர் தில்லி தலைமைச் செயலகத்தில் உயர் அதிகாரியாகப் பணியாற்றுபவர் என்றும் மனைவி மற்றும் அம்மாவுடன் தில்லிக்குச் செல்கிறார் என்றும் அன்வரால் புரிந்து கொள்ள முடிந்தது.

ரயில் கிளம்பும் நேரத்தில் வாலிபர் ஒருவர் ஓடி வந்து ரயிலில் ஏறிக்கொண்டார். மிக எளிமையான உடையணிந்திருந்த அவர் முகத்தில் கிராமத்துக் களை குடிகொண்டிருந்தது. ராஜதானி எக்ஸ்பிரஸ் தில்லி செல்வதற்கிடையே ஐந்து அல்லது ஆறு ஸ்டேஷன்களில் மட்டுமே நிற்கும். தில்லி சென்றடைய இருபத்தாறு மணிநேரம் ஆகும் என்று ரயில்வே வழிகாட்டி கூறியது. நீண்ட தூரப் பயணத்தில் நேரத்தைக் கொல்வது என்பது மிகவும் கடினமான விஷயம்தான். ஏ.ஸி. பெட்டியில் ஜன்னல்களின் உள்ளும் வெளியுமாக இரண்டு கருப்புக் கண்ணாடிகள் பொருத்தியிருப்பார்கள். எனவே ஜன்னல் வழியாக வெளியே வேடிக்கை பார்ப்பதும் கஷ்டம்தான்.

டிக்கெட் பரிசோதகர் வந்து சென்றபின் அன்வர் புத்தகத்தைத் திறந்து வாசிக்கத் தொடங்கினான். நேரத்தைக் கடத்த புத்தகம் நல்ல நண்பன்தான். ஆனால் நேரம் செல்லச் செல்ல புத்தகம் வாசிப்பதே ஒரு சுமையாகி விடுகிறது.

"எத்தனை மணிக்கு வண்டி தில்லி போய்ச் சேரும் சார்?" அருகில் இருந்த அந்த வாலிபர் கேட்டார்.

"சரியான நேரத்துக்குப் போனா நாளை மாலை ஆறு மணிக்குப் போகும். ஆனா குளிர்காலம் ஆனதால் மூடுபனி அதிகம் இருந்தா தாமதம் ஆகும்". அன்வர் பதில் சொன்னான்.

"நீங்க தில்லிக்குத்தான் போறீங்களா சார்?"

ஆமாம்! ஆபீஸ் வேலையா தில்லிக்குப் போறேன். நீங்க ....?"

"தில்லிக்குத்தான் சார். உண்மையைச் சொல்லப் போனால் நான் சிங்கப்பூர் போறேன். எங்க கிராமத்துக்கு வந்து ஏஜென்ட் தேர்வு செய்தான். தில்லியில் கிட்டத்தட்ட ஒரு வாரம் தங்கியிருக்க வேண்டியது வரும். விசா கிடைச்ச உடனே சிங்கப்பூர் அனுப்பி வைப்பாங்களாம்."



"சிங்கப்பூர்ல என்ன வேலைக்குத் தேர்ந்தெடுத்திருக்காங்க? உங்களை."

"பத்தாம் வகுப்பு பெயிலான எனக்குப் பெரிசா என்ன சார் வேலை கிடைச்சிடப் போகுது! கூலி வேலை அல்லது வீட்டு வேலைன்னு சொல்லித்தான் தேர்ந்தெடுத்தாங்க."

"இந்த வேலை பார்க்கிறதுக்குச் சிங்கப்பூர் போகணுமா? இங்கேயே பார்க்கக் கூடாதா?" எதிர் சீட்டிலிருந்த அந்த நடுத்தர வயது மனிதர் குறுக்கிட்டார்.

"கிராமத்துல மழைத் தண்ணி இல்லாமல் பூமியெல்லாம் வறண்டு கிடக்கு. அதனால் விவசாயத்தை நம்பி எந்தப் பிரயோஜனமும் இல்லை. டவுனுக்குக் கூலி வேலைக்குப்போனா, கிடைக்கிற சம்பளம் நமக்கே சரியாப் போகுது. அப்பா அம்மாவைக் காப்பாத்துற கடமையும் நமக்கு இருக்குதில்ல சார்."

"தம்பி! நானும் உங்களை மாதிரி கிராமத்துல பிறந்தவன்தான். நான் படிச்சி இப்ப பெரிய உத்தியோகத்துல இல்லையா? நீங்க படிக்காததுக்கு யாரையும் குற்றம் சொல்ல முடியாது."

"கூலி வேலை செய்ற அப்பா அம்மாவுக்குப் பிள்ளையா நீங்க பிறக்கலையே சார்! பாதிநாள் பட்டினியிலேயே கழியும். இதுல எங்க சார் ஒழுங்கா பள்ளிக்கூடம் போய்ப் படிக்கிறது? அனுபவிச்சாத்தான் கஷ்டம் என்னான்னு தெரியும்" அந்த வாலிபர் சற்று உணர்ச்சிவசப்பட்டுக் கூறினார்.

அன்வருக்கு என்னவோ அந்த நடுத்தர வயது மனிதரிடம் ஈடுபாடு ஏற்படவில்லை. அவரது தோற்றத்திலும் பேச்சிலும் கர்வம் கலந்திருந்தது. அவரது மனைவி வண்டியில் ஏறியவுடன் உறங்கத் தொடங்கியவர் சாப்பிடும் நேரம் தவிர மீதி நேரம் எல்லாம் உறங்கிக்கொண்டே இருந்தார்.

மறுநாள் காலை எட்டு மணிக்கு வண்டி மகாராஷ்ட்ரா எல்லையைத் தாண்டியிருந்தது. சரியான நேரத்தில்தான் வண்டி போய்க் கொண்டிருந்தது. ஆனால் ஜான்சியைக் கடந்த போது கடுமையான பனிமூட்டம் சூழ்ந்து கொண்டது. வண்டியின் வேகம் குறைந்து மெதுவாகச் செல்லத் தொடங்கியது. கடும் குளிரில் அந்த மூதாட்டி நடுங்கினார். அவருக்குக் கம்பளியைச் சரியாகப் போர்த்தக்கூட தெரியவில்லை. அன்வர் சால்வையை அவர் உடலில் நன்றாகப் போர்த்திவிட்டான். ஆனால் அந்த மனிதர் இது எதைப் பற்றியும் கவலைப் படவில்லை. அவரது மனைவி அப்போதும் உறங்கிக்கொண்டிருந்தார்.

"ஏம்பா! இந்த வண்டி எத்தனை மணிக்குப் போய்ச் சேரும்?" குளிர் தாங்காமல் மகனிடம் கேட்டார் அந்த மூதாட்டி.

"ஏன்? நீ ஆபீசுக்குப் போகப் போறியா? வண்டி போய்ச் சேர வேண்டிய நேரத்தில போய்ச் சேரும். சத்தம் போடாம கிடந்து தூங்கு" அம்மாவிடம் எரிந்து விழுந்தார் அந்த மனிதர். அவருடைய பேச்சைக் கேட்டு அந்த மூதாட்டி பேசாமல் சுருண்டு படுத்துக்கொண்டார். அன்வருக்கு அவரைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

மதிய உணவு முடிந்தவுடன் அந்த மனிதர் மேல் பர்த்தில் ஏறி உறங்கத் தொடங்கினார். அன்வர் அந்த மூதாட்டியிடம் மெதுவாகப் பேசத் தொடங்கினான்.

நீங்க முதன்முதல் இப்பத்தான் தில்லி போறீங்களாம்மா?"

"ஆமாம்ப்பா. அரக்கோணம் பக்கத்தில எங்க கிராமம். வெள்ளாமை, விளச்சல்னு செல்வச் செழிப்பானது எங்க குடும்பம். ஆணும் பெண்ணுமா எனக்கு ரெண்டு பிள்ளைங்க இவன்தான் மூத்தவன். மகளை அரக்கோணத்துல கட்டிக் குடுத்திருக்கோம். எங்க வீட்டுக்காரர் திடீர்னு மூணு மாசத்துக்கு முன்னால இறந்து போய்ட்டாரு. அவரு போனதுக்கு அப்புறம் என் மக வீட்டுலதான் இருந்தேன். மகளும் மருமகனும் என்னை நல்லா கவனிச்சிக்கிட்டாங்க. இவன்தான் எங்க குடும்பத்துல இப்படி வந்துட்டான். மூக்கு மேல கோபம் வரும். யாரும் இவன்கிட்ட பேச முடியாது. என் மருமககூட நல்லவதான். இவனுக்குப் பயந்துகிட்டே என் பக்கத்துல வரமாட்டா. புருஷன்னா அவளுக்கு அப்படி ஒரு பயம். கல்யாணம் முடிஞ்சு இருபது வருஷத்துக்கு மேல ஆயிடுச்சு. குழந்தை இல்ல. மகள் வீட்டுல நான் இருந்தா, அவனுக்குக் கௌரவக் குறைச்சலாம். அதான் தில்லிக்குக் கூட்டிட்டுப் போறான். அங்கப் போய் என்னல்லாம் கூத்து பண்ணப் போறானோ? யாருக்குத் தெரியும்" மடைதிறந்த வெள்ளம் போல 'மள மளன்னு' சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லி முடித்தார்.

இரவானதும் ரயிலின் வேகம் மேலும் குறைந்தது. கடுமையான பனிமூட்டத்தால் அடுத்துள்ள கட்டிடங்களைக்கூட காண முடியவில்லை. இரவு பன்னிரெண்டு மணியளவில் வண்டி நிசாமுதீன் ரயில்நிலையம் சென்றடைந்தது. ரயில் கடைசி பிளாட்பாரத்தில் நின்றதால் மேம்பாலம் ஏறி நீண்ட தூரம் நடக்கவேண்டி வந்தது. அன்வர் அந்த மூதாட்டியின் கையைப் பிடித்து மெதுவாக நடந்தான்.



கடுமையான குளிர் ஆனதால் நள்ளிரவில் வெளியே ஆட்டோ ரிக்ஷாவோ, டாக்ஸியோ காணவில்லை. அன்வருக்குக் கம்பெனியிலிருந்து கார் வந்திருந்தது. கடும் குளிரில் அந்த மூதாட்டியை ரயில்வே ஸ்டேஷனில் விட்டுச் செல்ல அன்வருக்கு மனசு வரவில்லை. அவர்கள் மூவரையும் காரில் ஏற்றி ஜனக்புரியில் உள்ள அவர்கள் வீட்டில் இறக்கிவிட்டான். அந்த மனிதர் தன்னுடைய விசிட்டிங் கார்டை அன்வரிடம் கொடுத்தார். முதன் முதலாக அவர் மனைவி அன்வரைப் பார்த்து புன்னகைத்தார். அந்த மூதாட்டி அன்வரின் கையைப் பிடித்து, ஊருக்குப் போறதுக்கு முன்னால ஒரு தடவை வந்து, இந்த அம்மாவைப் பார்த்துட்டுப் போப்பா! என்று கூறினார். அன்வரும் புன்னகையுடன் அவரிடம் தலையசைத்து விட்டு காரில் ஏறி கரோல்பாக்கில் உள்ள கம்பெனி கெஸ்ட் ஹவுஸை சென்றடைந்தான்.

மூன்று நாட்களுக்குப்பின் கிடைத்த ஓய்வு நேரத்தில் அந்த அம்மாவைக் காண அன்வர் ஜனக்புரி சென்றான். அந்த மனிதர் ஆபீஸ் சென்றிருந்தார். அம்மா மிகவும் சோர்ந்து போயிருந்தார். கட்டிலில் இருந்து எழுந்திருக்கக் கூட இயலவில்லை. அன்வரை அருகில் அழைத்து, கட்டிலில் அமரச் சொன்னார்.

"என்னால இந்தக் குளிரைத் தாங்க முடியலப்பா. எதுவும் அவன்கிட்டச் சொல்லவும் முடியல. வாயைத் திறந்தாலே அவன் கத்தத் தொடங்கிடுவான். நீ ஊருக்குப் போகும்போது என்னையும் கூட்டிட்டுப் போய் என் மக வீட்டுல விட்டுரு. இங்க இருந்தா நான் செத்துருவேன்." கண்ணீர் மல்க அந்த அம்மா கூறினார்.

"என்னால் எதுவும் செய்ய முடியல தம்பி. ஏதாவது பேசினா உடனே அடி உதைதான். அதனால் அவங்க அம்மா பக்கத்துல போறதுக்கே பயமா இருக்கு. இருபது வருஷத்துக்கு மேல நான் இங்க நரக வாழ்க்கை வாழ்ந்துகிட்டு இருக்கேன். மகள் வீட்டுல சந்தோஷமா இருந்த அம்மாவைக் 'கவுரவம்' அது இதுன்னு சொல்லி இங்க கூட்டி வந்துட்டு திரும்பிக்கூட பார்க்குறது இல்லை. அவரு ஆபீசுக்குப் போனதுக்கு அப்புறம் என்னால் ஆனதை நான் அவங்களுக்குச் செய்யுறேன். பாவம்! நல்லா வாழ்ந்தவங்க." மனதின் பாரத்தைக் கொட்டித் தீர்த்தார் அவரது மனைவி.

வீட்டை விட்டுக் கிளம்பும் முன் அம்மாவின் கையைப் பிடித்துக்கொண்டு, மீண்டும் வருவதாக அன்வர் கூறினான். அம்மாவின் கண்களில் ஒருவித ஏக்கம் தெரிந்தது.

அன்வருக்கு ஆபீஸ் வேலை மேலும் சில நாட்கள் நீண்டு போனது. சென்னை செல்வதற்கு முந்தைய நாள் அம்மாவைப் பார்ப்பதற்காக அன்வர் ஜனக்புரி சென்றான். வீட்டிற்குள் கூடுதலாகச் சில ஆட்கள் தென்பட்டனர். வீட்டிற்குள் ஏறிச் சென்ற அன்வருக்கு அதிர்ச்சி. கூடத்தில் மாலையிட்ட புகைப்படத்தில் அம்மா சிரித்துக் கொண்டிருந்தார். அந்த மனிதர் வந்து அன்வரின் கையைப் பிடித்தார். அன்வருக்கு என்னவோ

அருவருப்பாகத் தோன்றியது. கையை விடுவித்துக் கொண்டான்.

"அப்பா போனதிலிருந்தே அம்மா தளர்ந்துட்டாங்க. திடீர்னு மாரடைப்புல போய்ட்டாங்க. அவங்க அஸ்தியை யமுனை ஆற்றுல கரைச்சோம். இந்த அதிர்ஷ்டம் எத்தனை பேருக்குக் கிடைக்கும்? இன்னைக்கு ஐந்தாம் நாள். அதான் அம்மாவுக்குப் பிரியமான பலகாரம் எல்லாம் படைச்சு கும்பிட்டோம். உட்காருங்க சார். பலகாரம் சாப்பிட்டுட்டு போகலாம்,"சொல்லிவிட்டு அந்த மனிதர் உள்ளே போய்விட்டார்.

வீட்டிற்குள் சென்ற அந்த மனிதரை அன்வர் வைத்த கண் மாறாமல் பார்த்துக் கொண்டிருந்தான். இப்படியும் ஒரு மனிதரா? 'கவுரவம்' என்ற பெயரில் அம்மாவை அழைத்து வந்து கொன்று விட்டாரே! வாழும்போது இன்முகம் காட்டாமல், இறந்தபின் யமுனை ஆற்றில் அஸ்தியைக் கரைப்பதிலோ, பலகாரம் படைத்து இறந்தவர் பெயரைச் சொல்லி நாம் சாப்பிடுவதிலோ என்ன அர்த்தம் இருக்க முடியும்?

கடைசியாக ஏக்கத்துடன் தன்னைப் பார்த்த அம்மாவின் முகம் அன்வர் கண்முன்னே நிழலாடியது. அதற்கு மேல் அங்கே இருக்கப் பிடிக்காமல் சாலையில் இறங்கி வேகமாக நடக்கத் தொடங்கினான் அன்வர்.

– அனந்தை காசிநாதன்

**ஆசிரியர் குறிப்பு** இக்கதை 'மனிதாபிமானம்' என்ற சிறுகதைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது. இதன் ஆசிரியர் அனந்தை காசிநாதன் ஆவார். இவர் சிறுகதை, கவிதை, கட்டுரை தொடர்பான பல்வேறு நூல்களை எழுதியுள்ளார்.

## செயல்பாடுகள்

- கதையாசிரியர் ரயில் நிலையக் காட்சியைக் கூறும் விதத்தை எழுதுங்கள்.
- கதையினை விமர்சனம் செய்யுங்கள்.
- நீங்கள் ரயில் பயணம் செய்தபொழுது ஏற்பட்ட அனுபவங்களைக் குறிப்பாக எழுதுங்கள்.
- இந்தக் கதையில் வரும் ஊர்ப்பெயர்களையும் அதன் சிறப்புகளையும் தொகுத்து எழுதுங்கள்.

# ஒன்றே உலகம்



## சமபந்தி உணவு

"பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரதநாடு" என்று பழம்பெரும் நாடாம் பாரதநாட்டைப் புகழ்ந்து பாடினார் பாட்டுக்கொரு புலவன் பாரதி. ஆயினும் சாதியின் பெயராலும் மதத்தின் பெயராலும் உயர்வு தாழ்வு கற்பித்து, காலங்காலமாக நாம் ஒற்றுமையை இழந்து வருகின்றோம். சில சாதியினர் உயர் சாதியினராக உயர்த்தப்பட்டனர்; சில சாதியினர் தாழ்த்தப்பட்டனர். அதோடு நின்றுவிடாமல், தாழ்த்தப்பட்ட இன மக்களைத் தொடுவதோ, அவர்களைக் காண்பதோ தீட்டாகக் கருதினர். ஒரு காலத்தில் தீண்டாமை எனும் பாவி நாடெங்கும் தலைவிரித்து ஆடியது. நீண்டகாலமாக அது தொடரவும் செய்தது. அன்று கொளுந்துவிட்டு எரியத் தொடங்கிய அந்தத் தீண்டாமைத் தீ இன்னும் முழுமையாக அணைந்தபாடில்லை. இப்போதும் ஆங்காங்கே புகைந்து கொண்டுதான் இருக்கிறது.

இத்தகைய கொடுமையான ஒரு சூழ்நிலை நிலைபெற்றிருந்த காலகட்டத்தில் அவ்வப்போது தோன்றிய சமூகச் சீர்திருத்தச் செம்மல்கள் தங்கள் போதனைகளால் சாதி மதக் கொடுமைகளுக்கும் ஏற்றத் தாழ்வுகளுக்கும் எதிராகக் குரல் கொடுத்தனர். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' எனும் உயரிய தத்துவத்தை உலகுக்கு அளித்தார் வான்புகழ் வள்ளுவர். ஒரு சாதி, ஒரு மதம், ஒரு தெய்வம்

என்னும் ஒப்பற்ற கொள்கையை நாடெங்கும் பரப்பியவர் கேரளத்தின் தவப்புதல்வர் ஸ்ரீ. நாராயண குரு. 'தாழக் கிடப்பாரைத் தற்காப்பதே தர்மம்' என்னும் அருள் மொழியை வழங்கியவர் அய்யா வைகுண்ட சாமிகள்.

மனம், மொழி, மெய்யால் சமூக சமத்துவத்திற்காகப் பாடுபட்டவர் அய்யா அவர்கள். அதன் பொருட்டு அவர் நிறுவிய புரட்சிகரமான அமைப்பு 'சமத்துவ சமாஜம்.' 1836–ஆம் ஆண்டு செப்டம்பர் 12–ஆம் நாள் உருவாக்கிய சமாஜம், சமத்துவக் கருத்துகளை நாடெங்கும் பிரச்சாரம் செய்வதை முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தது; தீண்டாமையைக் கடுமையாக எதிர்த்தது. ஒன்றே சாதி, ஒன்றே மதம், ஒன்றே தெய்வம், ஒன்றே குலம், ஒன்றே உலகம், ஒன்றே அரசு, ஒன்றே மொழி, ஒன்றே நீதி என்பதே சமத்துவ சமாஜத்தின் கோட்பாடாக இருந்தது. சமத்துவ சமாஜத்தின் கருத்துகள் திருமூலரின் திருமந்திரக் கருத்துகளுடன் ஒப்புமை உடையதாக இருந்தன. திருமூலரின் எண்ணங்கள் அய்யா வைகுண்ட சாமிகளிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது என்றே கூறலாம். தம் சீடர்களையும் தொண்டர்களையும் பல்வேறு இடங்களுக்கு அனுப்பி, அங்கெல்லாம் சமாஜத்தின் கிளைகளை அமைத்தார்.

சமத்துவ, சமாஜத்தின் தலையாய செயல்பாடுகளில் ஒன்று 'சமபந்தி உணவு' என்னும் திட்டமாகும். தாழ்த்தப்பட்டவர்கள், மேல் சாதியினர் என்ற பாகுபாடு காட்டாமல், பல சாதியினரும் ஒருவரோடு ஒருவர் ஒட்டி இருந்து, பொதுவாகச் சமைக்கப்பட்ட உணவை உண்டு மகிழ்வதே சமபந்தி உணவு. இவ் உணவு முறை ஒழுங்காகச் சிறப்புற நடத்துவதற்கு வைகுண்ட சாமிகள் சில எண்ணங்களை முன் வைத்தார். உணவுப் பொருட்களை இயன்ற வரை அனைவரும் கொண்டு வரவேண்டும். அவற்றைச் சேகரித்து, சமைத்து அனைவரும் ஒரு பந்தியில் இருந்து உண்ண வேண்டும். இதுவே அவர் முன்வைத்த கருத்து. தொடக்கத்தில் அய்யாவின் சமபந்தி உணவுத் திட்டம் சிலருக்கு மனவேதனையை ஏற்படுத்தியது. என்றாலும் நாட்கள் செல்லச் செல்ல பெரும் மாற்றம் ஏற்பட்டது. சமபந்தி உணவுமுறை ஓர் ஆனந்த அனுபவமாக மாறி, மக்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தது.



பல வீடுகளுக்குச் சென்று உணவருந்தி, சமபந்தி உணவுமுறையை மக்களிடையே பிரச்சாரம் செய்ய, அய்யா தம் சீடர்களைக் கேட்டுக் கொண்டார். அவர்களும் அவ்வாறே செய்தனர். ஒரு நாள் பிச்சையம்மாள் என்னும் தாழ்த்தப்பட்ட ஒரு குலப் பெண்மணியின் வீட்டில் சென்று உணவருந்தக் கூறினார் அய்யா. பிச்சையம்மாளும் உணவு தயார் செய்து விருந்தினர்களை எதிர்நோக்கிக் காத்திருந்தார். சீடர்களும்

அங்குச் சென்றனர். ஆனால் அவர்கள் அங்கு ஆக்கி வைத்திருந்த உணவை உண்ணவில்லை. பிச்சையம்மாள் வருந்தினாள். இச்செய்தி உடனேயே அய்யாவின் செவிகளை எட்டியது. அவர் சீடர்களை அழைத்து, கட்டாயப்படுத்தி, பிச்சையம்மாளின் வீட்டிற்குத் திருப்பி அனுப்பி உணவு உண்ணச் செய்தார். அம்மாளும் மகிழ்ந்தார்.

சாமித்தோப்பிலுள்ள முந்திரிக் கிணற்று நீரைப் பயன்படுத்தி உணவு சமைத்துத் தொடங்கி வைத்த சமபந்தி உணவுமுறை சுற்று வட்டாரங்கள் எங்கும் பரவத் தொடங்கியது. இதனால் ஓரளவு வரை சாதி வேறுபாடுகளைத் தவிர்க்கவும் சமூக நீதியை நிலைநாட்டவும் இயன்றது. அய்யா வைகுண்டர் பொருத்தி வைத்த சமூகநீதி என்னும் ஒளிச்சுடர், பின்னர் பிற பகுதிகளிலும் ஒளிவீசத் தொடங்கியது; ஓரளவுக்குத் தீண்டாமை இருளை அகற்றவும் இயன்றது.

– மொழிபெயர்ப்பு

## செயல்பாடுகள்

- சமூகத்தில் நிலவும் சமத்துவமின்மைக்கான காரணங்களையும் அதற்கான தீர்வுகளையும் விளக்கித் தலையங்கம்எழுதுங்கள்.
- இதழில் வெளியிடும் பொருட்டு 'சமூகநீதி' என்னும் தலைப்பில் கட்டுரை தயாரியுங்கள்.
- சமபந்தி உணவு குறித்துக் குறிப்பு எழுதுங்கள்.

## புதிய சமுதாயம்

பாட்டாளி மக்களது பசிதீர வேண்டும்
பணமென்ற மோகத்தின் விசைதீர வேண்டும்.
கூட்டாளி வர்க்கங்கள் குணம்மாற வேண்டும்
குற்றேவல் தொழி லென்ற மனம்மாற வேண்டும்.
வீட்டொடு தான்மட்டும் சுகமாக உண்டும்.
வேறுள்ளோர் துன்பங்கள் கண்ணாரக் கண்டும்
நாட்டோடு சேராத தனிபோக உரிமை
நடவாதிங் கினியென்று நாமறிதல் பெருமை

உடலத்தின் வடிவத்தில் பேதங்கள் உண்டு
உள்ளத்தின் எண்ணத்தில் வித்தியாசம் உண்டு
சடலத்தை ஆள்கின்ற பசிதாகம் எல்லாம்
சகலர்க்கும் உலகத்தில் சமமான தன்றோ
கடலொத்த தொழிலாளர் வெகுபாடு பட்டும்
கஞ்சிக்கு வழியின்றிக் கண்ணீரைக் கொட்டும்
மடமிக்க நிலைமைக்கு மாற்றில்லை யானால்
மனிதர்க்கிங் கறிவுள்ள ஏற்றங்கள் ஏனோ

பசைமிக்க தொழில் செய்து பலன்முற்றும் யாரோ
பரிவற்ற முதலாளி பறிகொண்டு போக
பசிமிக்கு மிகநொந்த தொழிலாளர் எல்லாம்
பகையென்று நமையெண்ணிப் பழிகொள்ளும் முன்னால்
வசைமிக்க நிலைமாற வழியொன்று சூழ்வோம்
வறுமைக்கே இடமற்ற சமுதாய வாழ்வை
இசைமிக்க முறைகண்டு ஏற்பாடு செய்வோம்
எல்லாரும் குறைவற்ற நலமெய்தி உய்வோம்.

– கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை

**ஆசிரியர் குறிப்பு** புதிய சமுதாயம் என்ற கவிதை 'நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை பாடல்கள்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. கவிஞராகவும், ஓவியராகவும் திகழ்ந்தவர். என் கதை, மலைக்கள்ளன், மரகதவல்லி, கற்பகவல்லி, காதல் திருமணம் ஆகிய புதினங்களையும் எழுதியுள்ளார். காந்தியக் கவிஞர் எனவும் புகழப்படுகிறார்.

## செயல்பாடுகள்

- 'ஏற்றத்தாழ்வில்லாத சமுதாயம்' உருவாகும் வழிமுறைகளைக் கலந்துரையாடிப் பட்டியலிடுங்கள்.
- 'குற்றேவல் தொழில் என்ற மனம் மாற வேண்டும்' இவ்வாறு ஆசிரியர் கூறக் காரணம் என்ன? விளக்குங்கள்.
- புதிய சமுதாயம் மலர நீங்கள் கூறும் கருத்துகளைக் குறிப்பாக எழுதுங்கள்.

### சிலேடை அணி

தமிழில் ஒரே பொருளைக் குறிக்கப் பல சொற்களும், பல பொருள்களைக் குறிக்க ஒரே சொல்லும் உண்டு. இத்தகைய சொற்களை ஒரு பொருள் பல சொல் , பல பொருள் ஒரு சொல் என்று வகைப்படுத்துவோம். பங்கஜம் , அம்புஜம் , தாமரை என்பன தாமரை என்னும் ஒரே பொருளைக் குறிக்க வந்த பல சொற்கள் . 'மா' என்னும் ஒரே சொல் மாமரம், குதிரை , விலங்கு, பெரிய எனப் பல பொருள்களைத் தரும் .

இத்தகைய சொற்களைப் பயன்படுத்தி கவிதைகளைப் படைப்பதுண்டு. இதனை ஓர் அணியாகக் கொண்டு அதற்குச் 'சிலேடை அணி' எனப் பெயர் கொடுத்துள்ளனர். சிலேடை என்பது செம்மொழி சிலேடை, பிறமொழி சிலேடை என இரு வகைப்படும்.

அரசனைப் புகழ்ந்து பாடி அவன் கொடுத்த பரிசுகளைக் கொண்டு வருகிறார் புலவர் . அவர் வீட்டினுள் நுழைந்ததும் என்ன பரிசில் கிடைத்தது எனக் கேட்கிறார் மனைவி. 'களபம்' என்கிறார் புலவர். இதைக் கேட்டதும் ஏமாற்றுத்துடன், பூசிக்கொள்ளுங்கள் என்கிறார் மனைவி. புலவருக்குக் கிடைத்த பரிசில் ஒரு யானை! களபம் என்பதற்கு யானை, சந்தனம் என இரு பொருள் உண்டு. புலவரும் மனைவியும் இரு வேறு பொருள்களைக் கொண்டனர். இதனைச் செம்மொழி சிலேடை என்பர்.

'பாரதி சின்னப்பயல்' என்பதை பார் + அதி + சின்னப்பயல் , 'பாரதி+ சின்னப்பயல் என இரு வேறு நிலைகளில் பிரித்துப் பொருள் கொள்ளலாம். இவ்வாறு பிரிப்பதால் பொருள் மாறுபடுகிறது. இதனைப் பிரிமொழி சிலேடை என்பர். ஒரு பாடலில் இருவேறு பொருள்களை வர்ணித்து அல்லது சிறப்பித்துப் பாடுவது சிலேடைஅணியின் தனிச்சிறப்பு.

ஆடிக் குடத்தடையும் ஆடும்போ தேயிரையும்
மூடித் திறக்கின் முகங்காட்டும் – ஓடிமண்டை
பற்றிற் பரபரெனும் பாரிற்பிண் ணாக்கு முண்டாம்
உற்றிடுபாம் பெள்ளனவே யோது.

– காளமேகப் புலவர்



## முத்து எங்கள் சொத்து

கனியூர் கிராமத்தில் பஞ்சாயத்துத் தேர்தல் நடந்தது. கிராமத்திலுள்ள பொதுமக்களுக்குத் தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள் விருப்பு வெறுப்பின்றி அனைவருக்கும் சேவை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் நடைபெறுவதுதான் பஞ்சாயத்துத் தேர்தல். தேர்தலில் போட்டியிட்டவர்கள் பலர் என்றாலும் சாம்பசிவத்தைப் பொதுமக்களால் மறக்க முடியவில்லை. காரணம் முத்துவின் அப்பாதான் சாம்பசிவம். பெரியவர்களின் பெயரைச் சொல்லிப் பிள்ளைகளுக்குப் பெருமை சேர்ப்பதுதான் உலக வழக்கம். ஆனால் 'முத்து' பெயரோ அப்படி அல்ல! பின் எப்படி?

முத்து தனியார் உயர்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு படிக்கிறான். கனியூர் கிராம மக்கள் அனைவரும் விரும்பி ஒன்றாகப் பேசுகிற ஒரே பேச்சு. "முத்து எங்கள் கிராமத்தின் சொத்து". மாணவன் முத்து எந்தப் பள்ளிக்கூடத்திற்குச் சென்றாலும், எந்தப் போட்டியில் கலந்துகொண்டாலும் வெற்றி எப்பொழுதும் அவன் பக்கம்தான். இது ஊர் அறிந்த உண்மை. முத்துவை மாவட்டம் முழுவதும் உள்ள மக்களுக்குத் தெரியும் ஏன்? மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் முத்துவைப் பிடிக்கும். இந்தச் சூழ்நிலையில்தான் கனியூர் கிராமத்தில் தேர்தல் நடந்தது. பொதுமக்கள் அனைவரும் "முத்து அப்பா சாம்பசிவம்" "முத்து அப்பா சாம்பசிவம்" என்று கூறி ஒருங்கே இணைத்துப் பார்த்ததால்தான் தேர்தலில் சாம்பசிவம் வெற்றி பெற்றார்.

சாம்பசிவம் வெற்றிபெற்றதும் கனியூர் மக்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்தார். நாளடைவில் சாம்பசிவம் புகழ் பரவ ஆரம்பித்தது. இதனால் பேரூராட்சித் தலைவரானார். பின் படிப்படியாக முன்னேற்றம் அடைந்து சட்டமன்ற உறுப்பினர் ஆனார். சட்டமன்றத்தில் தொகுதி மக்களின் குறைகளை அடிக்கடி எடுத்துச் சொல்வார். இதனால் பேரும் புகழும் கிடைத்தது.

சாம்பசிவம் புகழ் சட்டமன்றம் வரை பரவியது என்றால் முத்துவின் புகழ் மாநிலம் முழுவதும் பரவத் தொடங்கியது. காரணம் கனியூருக்கு அருகில் உள்ள கிராமத்தில்தான் அந்தச் சம்பவம் நடைபெற்றது.

அன்று முத்து, நகரத்தில் அமைந்துள்ள உயர் நிலைப்பள்ளிக்கூடத்தில் படித்து விட்டு வீடு திரும்பிக்கொண்டு இருந்தான். அவன்வந்த பாதை கனியூர் போவதற்கான ஒருவழிப்பாதை. குறுக்குவழியில் கிராமம் போக முடியும். நகரத்தில் இருந்து கனியூர் கிராமம் செல்ல பொதுமக்கள் அனைவரும் அந்த ஒரு வழிப்பாதையைத் தேர்ந்து எடுப்பர். முத்து அன்று பள்ளியில் இருந்து திரும்பும் பொழுது,

"ஐயோ காப்பாத்துங்க, ஐயோ காப்பாத்துங்க" என்று யாரோ கத்துகிற ஒலி காதில் கேட்டது. திரும்பிப்பார்த்தால் ஒரு கிணற்றின் மேல் சிறுவன் நின்று கொண்டு முத்துவை அழைத்து அழுதுகொண்டு கூறினான்.

"அண்ணா... அண்ணா.. நானும் என் தம்பியும்... ஆடு மேய்த்துக்கொண்டு இருந்தோம். கிணத்துக்கு அருகில்போன ஆட்டைத் துரத்தும்போது என் தம்பி... மண் சரிந்து கிணற்றில் விழுந்துவிட்டான்...எனக்கு நீச்சல் தெரியாது. எப்படியாவது என் தம்பியைக் காப்பாத்துங்க... காப்பாத்துங்க... என்று கெஞ்சி அழுதான்."

உடனே தோளில் சுமந்து வந்த புத்தகப்பையைக் கீழே போட்டு விட்டு முத்து கிணற்றில் தொபீர் எனக் குதித்தான். கிணற்றில் மூழ்கிய முத்து உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த சிறுவனின் தலைமுடியைப் பிடித்துக் கரைக்கு மேலே கொண்டு வந்தான். பின் முத்து சிறுவனுக்கு முதல் உதவி சிகிச்சை செய்தான். சிறுவன் கண் விழித்தான்... கிணற்றில் விழுந்த சிறுவனை முத்து காப்பாற்றிய இந்தச் செய்தி காட்டுத் தீபோலப் பரவிவிட்டது.

கிராமத்தில் இருந்த முத்துவின் புகழ் அம்மாவட்டத்திற்கு மட்டுமல்ல, மாநிலம் முழுவதும் தெரிய ஆரம்பித்துவிட்டது. கடந்த சுதந்திர தினத்தன்று ஆளுநர் முன்னிலையில் முதல் அமைச்சரின் அண்ணா தங்கப்பதக்கமும், விருதும் முத்துவுக்குக் கிடைத்தன.

மகன் முத்துவின் வீரதீரச் செயலால் சட்டமன்ற உறுப்பினர் சாம்பசிவத்திற்கு மேலும் புகழ் கிடைத்தது. எல்லா நாளிதழ்களிலும் முத்துவின் படத்தைப் போட்டுச் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

அன்று ஞாயிற்றுக் கிழமை காலை பத்துமணி. வயதான பெரியவர் ஒருவர் கல்யாண அழைப்பிதழுடன் சட்டமன்ற உறுப்பினர் சாம்பசிவம் வீட்டுக்கு வந்தார். அப்பொழுது வீட்டின் உள்ளே இருந்த அறையில் சாம்பசிவம் அன்றைய நாளிதழைப் படித்துக்கொண்டு இருந்தார். திருமண அழைப்பிதழுடன் வந்த பெரியவர்,

"ஐயா... ஐயா...ஐயா..." என்று மூன்று முறை அழைத்து பின் அழைப்பு மணியை அழுத்தினார். ஒலி கேட்ட முத்து உள்ளே இருந்து வெளியே ஓடிவந்தான். வெளியே வந்த முத்து, "ஐயா... உங்களுக்கு என்ன வேண்டும்? என்று கேட்டான்.

"என் பேரனுக்குத் திருமணம். உங்க அப்பாவிடம் அழைப்பிதழ் கொடுக்க வந்தேன்" என்றார் பெரியவர்.

செய்தி கேட்ட முத்து தந்தையிடம் ஓடி பெரியவரின் வருகை குறித்தும், வந்த நோக்கம் குறித்தும் சொல்லி விட்டு ஹாலுக்குச் சென்று தொலைக்காட்சியில் ஜியோகிராஃபிக் சேனல் பார்த்தான்.

ஆனால் அங்கே என்ன நடந்தது தெரியுமா?

திருமண அழைப்பிதழ் கொண்டுவந்த பெரியவரிடம் முத்துவின் அம்மா வெளியே வந்து, "ஐயா.. உள்ளே தூங்கிகிட்டு இருக்கார். என்கிட்ட குடுத்துட்டுப் போக முடியுமா?" என்று கேட்டார்.

பெரியவரும் அழைப்பிதழைக் கொடுத்துவிட்டு முத்துவின் வீட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்றார். இதையெல்லாம் ஜன்னல் ஓரத்தில் நின்று கவனித்துக்கொண்டு இருந்த முத்து கோபம் அடைந்தான். உடனே அம்மாவிடம்,

"அம்மா.. அப்பா வீட்டில் பேப்பர் படித்துக்கொண்டு இருக்கும் பொழுது நீங்க தூங்குகிறார் என்று பொய் சொன்னது எனக்குப் பிடிக்கவில்லை. நீங்க இன்று பெரிய பொய் சொல்லிட்டீங்க அம்மா" என்று சொன்னான் முத்து.

இதைக் கேட்ட முத்துவின் அம்மா "முத்து நான் வேண்டுமென்று பொய் சொல்லவில்லை. இப்படிச் சொல்லச் சொன்னது உன் அப்பாதான்... ஏன் என்று உன் அப்பாவிடம் கேட்டுத் தெரிந்துகொள். எனக்குச் சமையல் அறையில் கொஞ்சம் வேலை இருக்கிறது" என்று கூறிவிட்டுச் சமையல் அறையில் மெதுவாக நுழைந்தாள்.

சிறிது நேரம் கழிந்தது. மதிய உணவை ஹாலில் உட்கார்ந்து முத்து, அவனது அப்பா சாம்பசிவம் பாட்டி பார்வதி, தாத்தா காளமேகம் அனைவரும் சாப்பிட்டனர், முத்துவின் அம்மாதான் பரிமாறினாள்.

அப்பொழுது முத்து, "அப்பா... கர்னாடக மாநிலத்தை உயர்ந்த நிலைக்கு மாற்ற சிலர் கடினமான உழைப்பைக் கொடுத்தார்கள். யார் யார் என்று உங்களுக்குத் தெரியுமா?"

உடனே சட்டமன்ற உறுப்பினர் சாம்பசிவம் "தெரியுமே.. 'பாரதரத்னா' விஸ்வேஸ்வரய்யா, முதலில் அவரைத்தான் சொல்ல வேண்டும் சரிதானா?" என்று கேட்டார்

"அப்பா நீங்க சொன்னது நூற்றுக்கு நூறு சரிதான். அவரிடம் தோட்ட வேலை செய்து கொண்டிருந்த பெரியவர், திருமண அழைப்பிதழ் ஒன்றை விஸ்வேஸ்வரய்யாவிடம் கொடுக்க வந்தாராம். அவர் வந்ததை அறிந்த விஸ்வேஸ்வரய்யா உள்ளே சென்று வேட்டியை நன்றாகப் பஞ்சகச்சம் கட்டிக் கொண்டு தலைப்பாகையும் கட்டிக்கொண்டு மரியாதையுடன் பயபக்தியோடு வந்து திருமண அழைப்பிதழை வாங்கிக் கொண்டு அவரை அனுப்பி வைத்தார். உடனே அவரது துணைவியார் சாதாரண தோட்டக்காரனுக்கு ஏன் இந்த மரியாதை கொடுக்க வேண்டும் என்று

கேட்க.. பாரதரத்னா விஸ்வேஸ்வரய்யா மனிதர்கள் யாரையும் நாம் வேறுபடுத்திப் பார்க்கக் கூடாது. இங்கு எல்லோரும் உயர்ந்தவர்கள்தான்.

கவர்னர் வந்தால் நான் என்ன மரியாதை கொடுப்பேனோ அதே மரியாதையை நம்மிடம் பணியாற்றுகிறவர்களிடமும் நாம் தர வேண்டும். ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசம் பார்க்கக் கூடாது. எல்லோரும் நம்மவரே; எல்லோரும் நல்லவரே என்ற எண்ணம் வர வேண்டும். அதுதான் பெரியோர்களுக்கு நல்ல அழகு, நல்ல பண்பான செயலும் அதுதான் என்று கூறி முடித்தாராம் விஸ்வேஸ்வரய்யா'

இந்தச் சம்பவம் நடைபெற்றது உங்களுக்குத் தெரியுமா அம்மா?" என்று முத்து தன் பெற்றோரிடம் ஒரே நேரத்தில் கேட்டான்.

அப்பொழுது.. முத்துவின் அப்பா சாம்பசிவம், "மகனே... நீ எதற்காக விஸ்வேஸ்வரய்யா வாழ்க்கையில் நடந்த சிறந்த சம்பவத்தை என்னிடம் சொன்னாய் என்பது எனக்கு இப்பொழுது நன்றாகப் புரிந்து விட்டது. இனி நம் வீட்டில் இன்று ஒரு பெரியவர் வந்தபொழுது நடைபெற்ற சம்பவம் போல எப்போதும் நடக்காது. அதுபோல மற்றொரு சம்பவம் இனி நடவாது. அதற்கு நான் உறுதி கூறுகிறேன். நடந்த சம்பவத்திற்காக நான் பெரிதும் வருந்துகிறேன்" என்று கூறினார்.

இவ்வளவையும் பொறுமையாகக் கேட்ட முத்துவின் தாத்தா... தன் பேரனைப் பார்த்து "முத்து... எனக்கு மிகவும் மகிழ்ச்சி... உண்மையாகவே நீ தகப்பன் ஸ்வாமி. முத்துதான் இனி எங்கள் வீட்டுச் சொத்து" என்று கூறினார்.

– என்.சி. ஞானப்பிரகாசம்

**ஆசிரியர் குறிப்பு** இச்சிறுகதை 'பாட்டி சொல்லாத கதைகள்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. இதன் ஆசிரியர் என்.சி. ஞானப்பிரகாசம். அகில இந்திய வானொலி நிலையத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். சிறுகதைகளைத் தொகுத்துச் சிறுவர் கதைக் களஞ்சியம் என்னும் இரு தொகுதிகளாக வெளியிட்டுள்ளார்.

## செயல்பாடுகள்

- முத்து கதாபாத்திரத்தின் பண்பு நலன்களை விளக்கி எழுதுங்கள்.
- 'முத்து எங்கள் சொத்து' என்ற சிறுகதையின் மையக்கருத்தைக் குறிப்பாக எழுதுங்கள்.
- முத்து செய்த தீரச்செயல் போன்று உங்கள் வாழ்க்கையில் நடைபெற்ற செயலை அனுபவக் குறிப்பாக எழுதுங்கள்.
- ஒரு விபத்து நடந்ததை நேரில் பார்த்தால் என்ன செய்வீர்கள்? வகுப்பில் கலந்துரையாடிக் குறிப்பு தயாரியுங்கள்.

# இனியொரு விதி செய்வோம்



## பாரத சமுதாயம்

மனித ருணவை மனிதர் பறிக்கும்
	வழக்கம் இனியுண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
	வாழ்க்கை இனியுண்டோ? – புலனில்

வாழ்க்கை இனியுண்டோ? – நம்மி லந்த
	வாழ்க்கை இனியுண்டோ?
இனிய பொழில்கள் நெடிய வயல்கள்
	எண்ணரும் பெருநாடு,

கனியும் கிழங்கும் தானி யங்களும்
	கணக்கின்றித் தரு நாடு – இது
கணக்கின்றித் தரு நாடு – நித்தநித்தம்
	கணக்கின்றித் தரு நாடு வாழ்க!

இனியொரு விதிசெய் வோம் – அதை
	எந்த நாளும் காப்போம்,
தனியொருவனுக் குணவிலை யெனில்
	ஜகத்தினை அழித்திடு வோம் – வாழ்க!

எல்லா உயிர்களிலும் நானே யிருக்கிறேன்
	என்றுரைத்தான் கண்ண பெருமான்,
எல்லாரும் அமரநிலை எய்தும்நன் முறையை
	இந்தியா உலகிற் களிக்கும் – ஆம்

இந்தியா உலகிற் களிக்கும் – ஆம் ஆம்
இந்தியா உலகிற் களிக்கும் – வாழ்க!

எல்லாரும் ஓர் குலம் எல்லோரும் ஓரினம்
எல்லாரும் இந்திய மக்கள்.
எல்லாரும் ஓர் நிறை எல்லாரும் ஓர் விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர் – நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர் – ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர் – வாழ்க!



– பாரதியார்

**ஆசிரியர் குறிப்பு** இக்கவிதை 'பாரதியார் கவிதைகள்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. இதன் ஆசிரியர் தேசியக் கவி பாரதியார். தமிழ்க் கவிதை வரலாற்றில் ஒரு புதுப் பாதையை வகுத்துத் தந்த பெருமைக்குரியவர்.

### செயல்பாடுகள்

- "எல்லாரும் ஒரு குலம் எல்லோரும் ஓரினம்" என்ற பாரதியாரின் கூற்றை விமர்சனம் செய்து எழுதுங்கள்.
- "கேரளத்தின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வழிகள்" என்னும் தலைப்பில் நடைபெறும் கருத்தரங்கில் கேரள நிதி அமைச்சர் கலந்துகொள்கிறார். இந்நிகழ்விற்கான நிகழ்ச்சி நிரல் தயாரியுங்கள்.
- சமூகத்தில் அனைவரும் பொருளாதார சமத்துவம் அடைவதற்கான வழிமுறைகளைக் கலந்துரையாடி குறிப்பு எழுதுங்கள்.
- 'ஏழைகளுக்குச் செய்யும் தொண்டே, இறைவனுக்குச் செய்யும் தொண்டு' என்பதை இன்றைய வாழ்வியல் சூழலோடு ஒப்பிட்டு குறிப்பு தயாரியுங்கள்.

## நாட்டுப் பாடல் காட்டும் பொருளியல்

நாட்டுப்புறப் பாடல்கள் காலப்போக்கில் வெறும் சொல்லலங்காரத்திற்காக மட்டுமே பாடப்பட்டவை என்று விட்டுவிட்டால் அவற்றில் புதைந்து கிடக்கும் பல அற்புதமான புதையல்களை நாம் அனுபவிக்கத் தவறிவிடுவோம்.

நாட்டுப்பாடல்களில் எங்குப் பொருளியல் கருத்துகள் காணக்கிடக்கின்றன? தாலாட்டிலா, குழந்தைப் பாட்டிலா, தொழில் பாட்டிலா, ஒப்பாரியிலா? எங்கெல்லாம் வாழ்க்கைக் கூறுகள் விவரிக்கப்பட்டனவோ, எங்கெல்லாம் வீடும் நாடும் பாடப்பட்டனவோ அங்கெல்லாம் பொருளியல்– வாழ்க்கையினின்று, வீட்டினின்று, நாட்டினின்று பிரிக்க முடியாததொன்று. நாட்டுப் பாடல்கள் கிராமத்து மண்ணில் பாடப்பட்டவை.

எனினும் அந்தக் கிராமியப் பொருளாதாரத்தை எத்தனைச் சுவையாக எளிமையான இனிமையான இசையுடன் அவை படம்பிடித்துக் காட்டுகின்றன.

தாலாட்டுப் பாடும் ஒரு தாய் தன் பிள்ளையைப் பற்றி மட்டுமா பாடுகிறாள். தன்னைப் பற்றி, தன் தந்தையைப் பற்றி, தன் கணவனைப் பற்றி, தன் அண்ணனைப்பற்றி, தன் வீட்டைப் பற்றி தன் ஊரைப் பற்றி பாடுகிறாளே, அந்தப் பாட்டிலிருந்து எப்படி ஒரு கிராமப் பொருளாதார நிலை தப்பித்து விட முடியும்!

இது போன்றே குழந்தைப் பாடல்களில், தொழில் பாடல்களில் எத்தனையோ பொருளாதாரக் கருத்துகள் அத்தனையும் அழகான தமிழில் அருமையான இசைப் பாடலாக நம் நாட்டுப்புறக் கவிஞர்கள் வழங்கி இருக்கிறார்கள்.

பொருளியலைப் பல கூறுகளாகப் பிரிப்பார்கள். நுகர்வு, உற்பத்தி, மாற்று விநியோகம் ஆகிய அப்பிரிவுகளில் மிக முக்கியமானது உற்பத்தி. ஒரு நாட்டின் வளமையும் வறுமையும் அந்த நாட்டின் உற்பத்தியை வைத்தே அமைகின்றன. உற்பத்தியைப் பெருக்குகின்ற நாடு வளம் பெற்று வருமானம் பெருகி வேகமாக வளர்ச்சியடைந்துவிடுகிறது. உற்பத்தியை அடிப்படையாக வைத்தே இன்று மேலை நாடுகள் ஒரு பெரும் போட்டியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன.

நிலமும் நிதியும் உழைப்பும் சேர்ந்தால் பலன் கிடைக்கும் என்பதைப் பிற்காலப் பொருளியல் கோட்பாடுகள் பல விரிவாக விளக்கியுள்ளன.

நிலம், நிதி, உழைப்பு இவை மூன்றையும் சேர்த்து வைத்தால் கிடைக்கும் பலனை "ஆடம் ஸ்மித்" தோன்றுவதற்கு எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால், ஒரு நாட்டுப்பாடல் மிகவும் அழகாகச் சொல்லாட்சியோடு விரிக்கின்றது.

ஆத்திலே தண்ணியுண்டு
அதனருகே வயலுமுண்டு
சேத்தினிலே ஈரமுண்டு
சேர்ந்த சோடிக் காளையுண்டு
நாத்தினிலே பசுமை யுண்டு
நட்டு வச்சா விளைச்சலுண்டு
கீத்துப் போட்ட குடிசையுண்டு
கிளியைப் போல அவளுமுண்டு
சோத்தினுக்குக் கவலை இல்லை
சோம்பலினால் பயனும் இல்லை.

இங்கே வயல் என்பது நிலம், காளைகள் என்பது மூலதனம்.' நாற்று நடுதல் உழைப்பு. இந்த மூன்றும் சேர்ந்து உழைத்தால் கிடைக்கும் பலன்கள்தான்

**நாட்டுப்புறப் பாடலின் வகைகள்**

- தாலாட்டுப் பாடல்கள்
- விளையாட்டுப் பாடல்கள்
- தொழில் பாடல்கள்
- சடங்குப் பாடல்கள்
- கொண்டாட்டப் பாடல்கள்
- வழிபாட்டுப் பாடல்கள்
- ஒப்பாரிப் பாடல்கள்



விளைச்சல், அழகிய வீடு, குடும்பம் எல்லாம்

இயற்கையாகக் கிடைக்கும் எதையும் "நிலம்" என்ற காரணியில் சேர்ப்பர் பொருளியல் அறிஞர்கள். எனவே ஆற்றில் உள்ள தண்ணீர், அதனருகில் உள்ள வயல் இரண்டுமே நிலத்தில் அடங்கும். நீரற்ற வயல் உழவுக்கு எனவே வயலோடு நீர் நிறைந்திருப்பது வளத்தைக் குறிக்கிறது.

மூலதனம் என்பது மனிதன் தன் முயற்சியால் சேர்த்த சொத்துகள். உற்பத்திக்குப் பயன்படும் சொத்துகள். அவை பணமாகவோ, காளையாகவோ, ஏராகவோ, வண்டியாகவோ இருக்கலாம். விதை நெல், எரு, உரம். போன்றவையும் மூலதனத்துக்குள் அடங்கும்.

என்னதான் நிலமும் பணமும் வசதியும் இருந்தாலும் பலனை நாம் அடைய வேண்டும் என்றால் உழைக்க வேண்டும். உழைப்பு இல்லாமல் எப்பயனும் இல்லை. ஒன்று தாமே இறங்கி வேலை செய்தல் அல்லது வேலைக்குக் கூலியாட்களை வைத்து வேலை வாங்குதல். இரண்டுமே உழைப்பில் அடங்கும். இந்த மூன்று காரணிகளையும் சேர்ப்பதே அவை என்பது. ஈண்டு உழைப்பும் அமைப்பும் ஒருவனிடம் அடைக்கலம் புகுந்து விடுகின்றன.

இந்த அருமையான செய்தியை ஒரு நாட்டுப்பாடல் வழியே வெளியிட்டவன் ஒரு பெரிய பொருள் நிபுணரோ அல்லது கவிஞனோ அல்ல. ஆனால் பொருளியலில் தத்துவத்தை வாழ்க்கைத் தத்துவமாக உணர்ந்த அவன். வாழ்க்கையைவிடவும் சிறந்த கோட்பாடு வேறில்லை என்பதற்கு இப்பாடலே சான்று.

– எ.மு. ராஜன்

**ஆசிரியர் குறிப்பு** இக்கட்டுரை 'நாட்டுப் பாடலில் பொருளாதாரம்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. இதன் ஆசிரியர் எ.மு. ராஜன். இவர் புதுச்சேரி தாகூர் கலைக் கல்லூரியில் பொருளியல் துறைப் பேராசிரியராகப் பணி ஆற்றியவர். 49 நூல்களைப் படைத்துள்ளார்.

## செயல்பாடுகள்

- ❑ உற்பத்திக்கான காரணங்களைப் பாடப்பகுதியின் துணைகொண்டும் உங்கள் கருத்துகளை இணைத்தும் விளக்கக் குறிப்பு தயாரியுங்கள்.
- ❑ நாட்டுப்புறப் பாடல்கள் மக்களின் வாழ்வியலை எவ்வாறு வெளிக்காட்டுகின்றன என்பதைக் குறிப்பாக எழுதுங்கள்.
- ❑ ஆத்திலே தண்ணியுண்டு என்ற பாடலை நயம்பாராட்டி எழுதுங்கள்.



# ஆமைச்சமூகமும் ஊமை முயல்களும்

நாலு நாளாக அஞ்சலை வேலைக்குப் போகவில்லை. குழந்தைக்கு உடம்பு சரியில்லாததால் போக முடியவில்லை. தான் போகாததால் அந்த வீட்டுக்கார அம்மாவே எல்லாம் செய்து கொள்வாள் என்று நினைத்துக் கொண்டாள். காலை ஐந்து மணிக்கு எழுந்து பால் வாங்கி, வாசல் தெளித்து, சாமான் தேய்த்து, வீடுபெருக்கித் துடைத்து, துணி துவைத்து... அந்த அம்மாளை நினைத்தபோது அவளுக்குக் கஷ்டமாக இருந்தது. அந்த அம்மாளுக்குக் கொஞ்சம் பாரி சரீரம். நடந்தால்கூட மூச்சு வாங்கும். இப்போது இத்தனை வேலையும் செய்வதனால்... ராதிகாகூட எந்த ஒத்தாசையும் செய்யாது. காலேஜுக்குப் போறதையே அது அம்மாவுக்குச் செய்யற பெரிய ஒத்தாசையாக நினைச்சுக்கும்... பாவம் அம்மா...!

குழந்தைக்குக் கொஞ்சம் உடம்பு தேவலாம் போலிருந்தால்கூட அவள் போயிருப்பாள். ஆனால் ஒரு வாரமாகக் குழந்தை கண்ணைக் திறக்கவில்லை. தொண்டையில் கபம் வேறு கட்டிக்கொண்டு ஓயாமக் இருமிக்கொண்டிருக்கிறது. வயிற்றுப் போக்கு வேறு ஆரம்பித்தது. அப்போதுதான் அஞ்சலை பயந்துபோய் தன் கணவனிடம் சொல்லிவிட்டு வேலை செய்கிற வீட்டுக்குக் கிளம்பினாள். வருகிறபோதே மனசுக்குள் பயந்து கொண்டுதான் வந்தாள். சாதாரணமாகவே எதற்கெடுத்தாலும் அந்த அம்மாள் சத்தம் போடுவாள். எது செய்தாலும் திருப்தியாய் ஒரு வார்த்தை வராது. 'என்ன வீடு துடைச்சிருக்கே.. வரி வரியா நிக்குது. பாரு அய்யா சட்டைக் காலர்ல அழுக்கு அப்படியே கிடக்குது, நேற்று பால் காய்ச்சின பாத்திரத்திலே பாலே போகலே.

இப்படி ஏதாவது மாற்றி மாற்றிச் சொல்லிக்கொண்டேதான் இருப்பாள். அஞ்சலை பதிலுக்கு எதுவும் பேசமாட்டாள். சிலநாள் முகத்தைமட்டும் தூக்கி வைத்துக்கொள்வாள். "இருபத்தஞ்சு ரூபா சம்பளத்துக்குக் கொடுக்கிற இரண்டு வேளை காப்பிக்கு – இதைவிடச் செய்வாங்க... போ... " என்று அவள் கணவன்தான் கத்துவான். அவள் எப்போதும் மௌனமாகத்தான் இருப்பாள்.

"என்ன அஞ்சலை இப்படிப் பண்ணிட்ட? வேலைக்கு வரலைன்னால் சொல்லிவிட்டுப் போகவேணாம்...?" என்று மட்டும் கேட்டாள்.

"இல்லீங்கம்மா, கொழந்தைக்கு ஒடம்பு சரியில்லேம்மா. ஒரு வாரமாவே காய்ச்சலாகக் கெடந்ததுங்க. கார்ப்பரேஷன் ஆஸ்பத்திரிக்குத் தூக்கிட்டுப் போயிருந்தேன். ஒரு ஊசி போட்டு மருந்து கொடுத்தாங்க. ஆனால் கொஞ்சம்கூடக் கொறையலீங்க. நேத்திலேருந்து வயத்தால் கூடப் போவுதுங்க.."

"அப்படியா...?" என்று யோசித்தாள் அந்த அம்மாள். இப்படியே போனால் அவள் வருவதற்கு ஒரு வாரம் பத்து நாள்கூட ஆகலாம் போலிருந்தது. அதுவரை இப்படித் தெரு தெளித்து, வாசல் பெருக்கி, பத்து தேய்க்க முடியாது. பதிலுக்கு வேறு ஆளையும் வைக்க முடியாது. வீட்டுக்கார அம்மா நினைத்துப் பார்த்தாள், அந்த அம்மாள் உள்ளே போய் மூன்று பத்து ரூபாய் நோட்டுகளைக் கொண்டு வந்தாள்.

"இந்தா அஞ்சலை, இதை வாங்கிக்க. மாசம் கொஞ்சமா பிடிச்சுகிட்டால் போவுது. முதல்ல குழந்தையைக் கொண்டுபோய் கீழ்ப்பாக்கத்தில் இருக்கிற நம்ம டாக்டர் கிட்டே காட்டு. அவரு குழந்தை வைத்தியத்துல கைதேர்ந்தவரு. சும்மா தொட்டுப் பார்த்தால் கூடப் போதும் உடம்பு குணமாயிடும்.

கூட்டம் நிறைய இருக்கும். அதனால் காலையிலே ஏழு மணிக்கெல்லாம் போயிடு. அவரு பதினோரு மணிக்கு மேல் பார்க்கமாட்டாரு." அஞ்சலை நன்றி சொன்னாள். அந்த அம்மாள் எதற்காகப் பணம் கொடுத்திருக்கிறாள் என்று தெரிந்தும் அப்போது அது பெரிய உதவியாகத்தான் தோன்றிற்று. டாக்டர் எவ்வளவு பீஸ் வாங்குவார் என்று கேட்டாள். "இருபது ரூபாய்தான் வாங்குவாரு. உன்கிட்டே கொஞ்சம் குறைச்சு பதினைந்துகூட வாங்கலாம். நான் கொடுத்திருக்கிற பணம் பீசு, வண்டி சார்ஜு , மருந்து எல்லாத்துக்கும் போதும். காலையில் மாத்திரம் சீக்கிரம் போய்டு. இல்லேன்னா கூட்டம் அதிகமாயிடும். ஆமா, எப்போ வேலைக்கு வரே...?'' கொஞ்சம் நல்லாயிருச்சுன்னா நாளைக்கேகூட வந்திடுவேன்" என்று சொல்லிவிட்டு வெளியில் வந்தாள்.

மறுநாள் காலை ஆறுமணிக்கெல்லாம் குழந்தையைத் தூக்கிக்கொண்டு கிளம்பினாள். கணவன் வேலைக்குப் போய்விடவே அவள் மட்டும்தான் புறப்பட்டாள். குழந்தைக்கு மாற்றுத் துணிகளும், பால் புட்டியும், வெளியில் போனால் துடைக்க சில கந்தைகளையும் எடுத்துக் கொண்டாள். தன் பழைய புடவை ஒன்றை நான்காக மடித்துக் குழந்தையை நன்றாகச் சுற்றிக் கொண்டாள். தான் ஏதாவது சாப்பிட நினைத்து பின்பு, முதல் நாள் ராத்திரி மீதமிருந்த சாதத்தை வெறும் உப்பு போட்டுத் தண்ணீர் ஊற்றிக் கரைத்துத் தன் கணவன் குடித்துவிட்டுப் போனதை நினைத்துக் கொண்டாள். அஞ்சலை பஸ் ஸ்டாப்பிற்கு வந்து விட்டாள். அவள் வந்த ஒரு நிமிஷத்திற்கெல்லாம் பஸ்ஸும் வந்தது. ஏறி ஸ்டாப்பின் பெயரைச் சொல்லி டிக்கெட் வாங்கினாள். ஸ்டாப்பிங் வந்ததும் இறங்கினாள். எதிர்ப்பக்கம்போய் இடது கைப்பக்கம் திரும்பினதும் டாக்டர் வீடு எது?

என்று தெரியாமல் போயிற்று. நம்பர் கேட்டுக்கொள்ள மறந்து போனாள். டாக்டரின் பெயர்கூட வாயில் நுழையாததாக இருந்தது. அதனால் எதிரில் வந்தவரிடம்.

"குழந்தை டாக்டர் வீடு எதுங்க...?" என்று கேட்டாள். "அதோ தெரியுதே... நாலைந்து கார்கள் நிற்குதே அதுதான்..." என்று கைகாட்டி விட்டுப் போனார். அப்போதே நாலைந்து கார்களா....! நாம் ஐந்தாவதாகத்தான் பார்த்துக்கொள்ள முடியும். அதற்குப்பின் திரும்பி நடந்து பஸ் பிடித்து வீட்டுக்குப் போக கிட்டத்தட்ட பதினோரு மணியாகிவிடும். குழந்தைக்கு ஒரு பாட்டில்தான் பால் இருக்கிறது. அதை ஏழரை மணிவாக்கில் கொடுத்துவிட்டால் மறுபடி திரும்பிப் போவதற்குள் அழாமல் இருக்க வேண்டுமே...

அவள் டாக்டர் வீட்டு வாசலை அடைந்தபோது நான்கு பேர்கள் இல்லை; ஆறேழு பேர்கள் இருந்தார்கள். எல்லாரும் உள்வராந்தாவில் நாற்காலியில் உட்கார்ந்திருந்தார்கள். அவளுக்கு நாற்காலி எதுவும் காலியில்லை. அப்படி இருந்தாலும் அவர்களுக்கிடையில் உட்கார முடியாது என்று தோன்றிற்று. அவர்கள் எல்லோருமே நன்றாக உடுத்திருந்தார்கள். லிப்ஸ்டிக் போட்டுக் கொண்டு, புருவத்தைக் கத்தரித்துக் கொண்டு நாலங்குல உயரச் செருப்பில், பெரிய கைப்பையுடன் அலுங்காமல், டாக்டர் வீட்டுக்கு வந்தவர்கள்போல் இல்லாமல், ஏதோ சினிமாக்கொட்டகைக்கு வந்தவர்கள் மாதிரி – விழாவிற்கு வந்தவர்கள் மாதிரி ...ஓரிரு குழந்தைகளைத் தவிர மற்ற குழந்தைகள்கூட அதே மாதிரிதான் தெரிந்தார்கள். பளிச்சென்று, வெண்மையாய், வழவழப்பாய், ஸாக்ஸும் ஷூவுமாக ஆங்கிலத்தில் பேசிக்கொண்டு காரைத் தரையில் ஒட்டிக் கொண்டு...

அவர்களுக்கு நடுவில் தான் வித்தியாசப்பட்டுப் போவதை அவள் உணர்ந்தாள். திறந்த வெளியில் அந்த கான்கிரீட் தரையின் ஓரமாக உட்கார்ந்து குழந்தையை மடியில் கிடத்திக்கொண்டாள். உள்ளே உட்கார்ந்திருந்த ஆண்களில் யாராவது எழுந்து இடம் கொடுத்தால் தேவலாம் போலிருந்தது

ஆனால் யாரும் எழுந்து அப்படி அவளுக்கு இடம் கொடுக்கத் தயாராக இல்லை. அவள் உட்காரக் காத்திருந்த மாதிரி குழந்தை வெளியில் போயிற்று. மேலே சுற்றியிருந்த புடவைகூட நனைந்து போயிற்று. அவள் புடவையை விலக்கி பையில் இருந்த துணியை எடுத்துத் துடைத்து, வேறு புடவை இல்லாத காரணத்தால் அதை அப்படியே மடித்து நன்றாக இருந்த பகுதியை மீண்டும் குழந்தையின் அடியில் போட்டாள். போட்டுவிட்டு ஏதேச்சையாய் நாற்காலியில் இருந்தவர்களைப் பார்த்தபோது அந்த முகங்கள் சுளித்துப் போயிருப்பது தெரிந்தது.

குழந்தை அழவே பால் பாட்டிலை எடுத்து வாயில் வைத்தாள். 'இவங்களுக்கு முன்னால நாம போகணும்...' என்று நினைத்துக் கொண்டிருந்தபோதே குழந்தை வயிற்றில் போன அத்தனைப் பாலையும் வாந்தி எடுத்தது. சட்டையும் புடவையும் நன்றாக நனைந்து போயிற்று. வாந்தி நாற்றம்கூட எடுத்தது. அவள் புடவையைச் சுருட்டி ஒரு ஓரமாக செடித் தொட்டிக்கு

அருகில் வைத்தாள். குழந்தையின் சட்டையை மாற்றினாள். போர்த்த வேறு போர்வை இல்லாததால் தன் புடவையின் தலைப்பாலேயே போர்த்தினாள்.

அப்போது உள்ளே போயிருந்த அந்த அம்மாள் தன் குழந்தையோடு வெளியில் வந்து காரில் ஏறிக்கொண்டாள். அடுத்து நீலப் புடவைக்காரி. அதற்கும் அடுத்து அந்தச் சிவப்பு சட்டைக்காரி. அவளுக்குப் பின்னால் கோட்டு போட்டுக் கொண்டிருக்கிற இவராக இருக்கும். பச்சைப் புடவைக்காரி போனதும் சற்று முன்பு வந்து இறங்கினவர்களுக்கு முன்னால் தான் போகவேண்டும்.

அவள் பார்த்துக் கொண்டிருந்தாள்; இன்னும் ஒரு ஸ்கூட்டரும் காரும் வந்தது. கார் பெரியதாய் நீளமாய் முன்னால் ஒரு கொடியோடு நின்றது. காரிலிருந்து இறங்கினவர் தன் மூன்று வயதுப் பையனோடு யாரையும் பார்க்காமல் உள்ளே இருந்த நோயாளி வெளியில் வந்ததும் நேராக உள்ளேபோனார். டாக்டரும் கைகுலுக்கி வரவேற்றுவிட்டுக் கதவை மூடிக் கொண்டார்.

மறுபடியும் குழந்தை சின்னச் சிணுங்கலாக ஆரம்பித்தது. இப்போது அவளுக்கே பசிக்கிற மாதிரி தோன்றியது. குழந்தைக்குப் பசிக்கும் என்று நினைத்துக் கொண்டாள். ஒரு தரம் வெளியில் போய் வாந்தியும் எடுத்துவிட்டது. மீண்டும் பால் பாட்டிலை வாயில் வைத்த குழந்தை சாப்பிடாமல் ரப்பரை நாக்கினால் வெளியில் தள்ளியது. தள்ளிவிட்டு நன்றாக அழ ஆரம்பித்தது. நல்ல காய்ச்சல் இருப்பதாகத் தெரிந்தது.

இதோ உள்ளே போனவர் வெளியில் வந்ததும் –பச்சைப் புடவைக்காரி போனதும், தான் போகவேண்டும் என்பதை மீண்டும் உறுதிப்படுத்திக் கொண்டாள். வயிற்றில் பசி அதிகமாகி நெருப்பாக எரிக்கிறாற்போல் தோன்றியது

ஆயிற்று. இதோ பச்சைப் புடவைக்காரி உள்ளே போயாயிற்று. அடுத்துப் போகவேண்டியது தான்தான் என்பதில் கொஞ்சம் மனசு சந்தோஷமாயிற்று. இன்னும் அரை மணி நேரத்தில் அந்த இடத்தை விட்டுப் போய்விடலாம் என்ற நிம்மதி ஏற்பட்டது.

இதைவிட கார்ப்பரேஷன் ஆஸ்பத்திரி தேவலாம். அங்கு எல்லோரும் வரிசையாய் நிற்பார்கள். சகஜமாகப் பேசுவார்கள். குழந்தைக்கு உடம்புக்கு என்ன என்று விசாரிப்பார்கள். தங்கள் குழந்தைகளின் உடம்பைப்பற்றி சொல்வார்கள். 'பயப்படாதே ...இதான் மொத கொழந்தையா... ? அதான் இப்படிப் பயப்படறே. எல்லாம் சரியாயிடும்...போன வருஷம் என் மூத்த பையனுக்கு இப்படித்தான்... ' என்று ஆரம்பித்து ஏதாவது சொல்வார்கள். அந்த இதம், ஆறுதல் இங்கு இல்லை.

ஆனால் அவள் நினைத்த மாதிரி பச்சைப் புடவைக்காரிக்குப் பின்னால் போக முடியவில்லை. அவளுக்குப் பின்னால் வந்து உள்ளே இடம் கிடைத்து உட்கார்ந்த அந்த இரண்டு பாப் தலைகளும் எழுந்து கொண்டன.

"குட்மார்னிங் டாக்டர்... என்று சிரித்துக் கொண்டே உள்ளே போயின . 'என்ன இது...?' என்று மனம் சிணுங்க அவள் பார்த்துக் கொண்டிருந்தபோதே அடுத்து வந்தவர், அதற்கு அடுத்து, அதற்கு அடுத்து, அதற்கும் அடுத்தவர்...

அவர்களிடம், 'நான்தான் போக வேண்டியவள், நீங்களெல்லாம் எனக்குப் பின்னால் வந்தவர்கள்' என்று சொல்ல அவளால் முடியவில்லை. வாய்வரை வந்த வார்த்தைகள் வெளியில் வரவில்லை. 'என்ன இது, என்ன இது...?' என்று மனசுக்குள் அரற்றத்தான் முடிந்தது. 'இதற்கு மேல் என்ன'என்று சலித்துக் கூடப் போயிற்று. வயிற்றில் பசியும் அடங்கின மாதிரித் தெரிந்தது. குழந்தையும் அழுது ஓய்ந்தது.

அடங்கித் தோளில் தூங்கிப்போய்விட்டது. எல்லோருக்கும் கடைசியாய் அவள் டாக்டரின் அறைக்குள் நுழைந்தபோது அவர் கடிகாரத்தைப் பார்த்தார். மணி பதினொன்று ஐந்தாகியிருந்தது.

"ஏம்மா, இன்னும் கொஞ்சம் முன்னால் வரக்கூடாது...? நான் பதினோரு மணிக்குமேல பார்க்கிறதில்லைன்னு தெரியாது? உன் வேலையெல்லாம் முடிச்சுட்டு நிதானமாக சாவகாசமாக வந்தால் எப்படி...? ம்...? அவள் ஒன்றும் பேசவில்லை." சரி... சரி ... குழந்தையை மேஜை மீது படுக்கவை. என்ன உடம்புக்குன்னு சொல்லு... '

அப்போதும் வார்த்தைகள் வராத பயத்தில் மெதுவாய், நிதானமாய் உதட்டைக் கடித்துக்கொண்டே பேச ஆரம்பித்தாள்...

– இந்துமதி

**ஆசிரியர் குறிப்பு** இவர் திருவண்ணாமலை மாவட்டம் மேல் நர்மா என்னும் ஊரில் பிறந்தவர். தலையில் இறங்கும் விமானங்கள், அசோகவனம், நெருப்பு மலர், சக்தி தொன்னூறு போன்ற பலவேறு படைப்புகளை இயற்றியுள்ளார். இக்கதை முத்துகள் பத்து என்னும் சிறுகதைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது.



## செயல்பாடுகள்

- சிறுகதையை விமர்சனம் செய்து எழுதுங்கள்.
- "என்ன அஞ்சலை இப்படிப் பண்ணிட்ட? வேலைக்கு வரலைன்னால் சொல்லிவிட்டுப் போகவேணாம்...?" என்று மட்டும் கேட்டாள். இப்பகுதியைத் தூய தமிழ் நடையில் எழுதுங்கள்.
- பொருளாதார சமமின்மையால் அஞ்சலைக்கு நேரிட்ட சிக்கல்களை விளக்கி எழுதுங்கள்?
- சமூக மறுமலர்ச்சிக்காக உழைத்த சான்றோர்களின் தரவுகளைத் திரட்டி படத் தொகுப்பு தயாரியுங்கள்.

அலகு 3

# கலை நயம்



கலை என்பது உணர்வின் வெளிப்பாடு. அது உணர்வை வெளியிடுவதுடன் பிறருக்கு அவ்வுணர்வை ஊட்டும் பெருமை உடையது என்பார் டால்ஸ்டாய். கலையைக் கருத்தின் உறைவிடம் அழகின் பிறப்பிடம், மகிழ்ச்சியின் மாட்சி, நாகரிகத்தின் ஒளிவிளக்கு, பண்பாட்டின் உரைகல் என்று குறிப்பிடுவர். அத்தகைய உன்னத கலையையும் பண்பாட்டையும் பேணிப் பாதுகாப்பது நமது கடமையாகும்.

# நளினம்



## எங்கே கிராமியக் கலைகள் எங்கே?

அழகுக் கலைகளை ஈன்ற தாய் தமிழ்நாட்டில்–இன்று
கிராமக் கலைகளோ கரைதேடி அலைகின்றது

கரகாட்டம் மயிலாட்டம் ஒயிலாட்டம் எல்லாம்
கோவில் திருவிழாவில் கூட கண்ணில் தெரிவதில்லை,

தமிழனின் வீரம் சொல்லும் சிலம்பாட்டமோ – இன்று
எடுப்பார் கைப்பிள்ளையாய்க் கிடக்கின்றதே.

கராத்தே, குங்ஃபு, கோபுடோ எல்லாம் நமது
சிலம்பத்தைச் செயலிழக்க செய்ததுவோ?

அந்நிய மோகத்தில் அழகுக் கலைகள் எல்லாம்
நம் கண்ணுக்குக் கழிவாகத் தெரிகின்றதோ?

தமிழகம் தந்த அந்த வர்மக்கலையை இன்று
கண்ணில் காண்பது என்பது எளிதானதா?

சப்பானும் சீனமும் இன்று வரையில் தன்
கலைகளைப் பொக்கிஷமாய் காத்து நிற்க

பண்பாட்டில் ஊறி நிற்கும் நமது நாடோ
கிராமக் கலைகளை வளர்த்தெடுக்க தயங்குவதா

கரகம் என்றொரு கலையும் உண்டா என
நாளை குழந்தை நம்மிடம் கேள்வி கேட்கும்

நாளைய சந்ததியின் கேள்விக்கு நமது பதில் தான்
என்ன என்பதை நாம் முதலில் சிந்திப்போம்

நாம் பார்த்த கலைகளை நம் சந்ததிகளும்
காரண காரியம் செய்வது நம் கடமையன்றோ.

கலைநயம் கொண்ட கிராமியக் கலைகளை
நாளும் வளரச்செய்வது நம் பெருமையன்றோ ....

– ஈஸ்வர் தனிக்காட்டு ராஜா

**ஆசிரியர் குறிப்பு** ஈஸ்வர் தனிக்காட்டு ராஜா, 'எழுத்து' என்ற இணையதளத்தில் எழுதிய கவிதையிலிருந்து நமது பாடப் பகுதி எடுக்கப்பட்டுள்ளது. வாலி என் நெஞ்சில் வலி, நதிகள் இணைந்தால், தாய்ப்பால் தானம், கர்மவீரன், அக்டோபர் 2 போன்ற கவிதைகளை எழுதியுள்ளார்.

## செயல்பாடுகள்

- உங்களுக்குத் தெரிந்த நாட்டுப்புற நடனங்களை வரிசைப்படுத்துங்கள்.
- கிராமியக் கலைகள் அழிந்து வருவதற்கான காரணங்களைக் கலந்துரையாடி குறிப்பு தயாரியுங்கள்.
- "சப்பானும் சீனமும் இன்று வரையில் தன்
  கலைகளைப் பொக்கிஷமாய் காத்து நிற்க
  பண்பாட்டில் ஊறி நிற்கும் நமது நாடோ
  கிராமக் கலைகளை வளர்த்தெடுக்க தயங்குவதா" – இப்பாடல் வரிகளுக்கு விமர்சனக் குறிப்பு தயாரியுங்கள்.

## பரத நாட்டியம்



கலை உலகத்திற்குத் தமிழகத்தின் மிகப்பெரிய பங்களிப்புகளில் ஒன்றாகப் 'பரதநாட்டியம்' எனும் நடனக் கலையைக் குறிப்பிடலாம். பரதநாட்டியம் தென்னிந்தியாவுக்குரிய சிறப்பாகத் தமிழ்நாட்டுக்குரிய நடனம் ஆகும். இந்தியாவின் செவ்வியல் ஆடல் வகைகளில் ஒன்று பரதநாட்டியம். மிகத் தொன்மை வாய்ந்த இந்நடனக்கலையின் பிறப்பிடம் தென்னகம் என்றாலும், இப்போது வெளிநாடுகளிலும் பிரபலமாகி உள்ளது. இக்கலை வடிவம் 2000 ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் உருவாகியதாகக் கூறுவர். பரதநாட்டியம் பற்றிய நேரடியான வரலாற்றுக் குறிப்புகள் சிலப்பதிகாரம் முதலான சில காப்பியங்களில்

காணக் கிடைக்கின்றன. சிலப்பதிகாரம் அரங்கேற்றுக் காதையில் நாட்டியம் குறித்தும் நாட்டிய முறைகள் குறித்தும் நாட்டியக் கலைஞர்கள் குறித்தும் ஆடை ஆபரணங்கள் குறித்தும் பல்வேறு இசைக்கருவிகள் குறித்தும் மேடை அமைப்புகள் குறித்தும் விரிவாகவே பாடியுள்ளார் இளங்கோவடிகளார். பரதநாட்டியத்தின் பழமைக்கு இவை சான்றுகள்.

பழங்காலத்தில் கூத்து, ஆடல், நாட்டியம், சின்ன மேளம், சதுர் எனப் பல பெயர்களில் இக்கலை அறியப்பட்டது. எனினும் 'சதிராட்டம்' என்ற பெயரே பெரும் வழக்காக இருந்தது. 1932 ஆம் ஆண்டில் கிருஷ்ணா ஐயர், ருக்மணி தேவி, அருண்டேல் ஆகியோர் இந்நடன வடிவத்திற்கு மரியாதை அளிக்கும் வகையில் சதிராட்டத்திற்குப் பரதநாட்டியம் என்று மறுபெயர் இடும் திட்டத்தை முன்வைத்தனர். பின்னர் அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்நிலையில் 90 ஆண்டுகளுக்கு முன்பு பரதநாட்டியம் என்ற பெயர் தோற்றம் கொண்டது.

ஓவியம், சிற்பம், ஆட்டம், பாட்டு முதலான பல்வேறு கலைகள் கோயில்களை ஒட்டி வளர்ச்சி பெற்றவை. கோயில்களை மையமாகக் கொண்டே இக்கலைகள் பெரும் வளர்ச்சி அடைந்தன என்றும் கூறலாம். ஆரம்பகாலத்தில் பெண்களே பரதநாட்டியம் ஆடி வந்தனர். இப்போது ஆண்களும் ஆடுகின்றனர்.

கண்ணுக்கு இனிய தோற்றம் ஆட்டம், காதுக்கு இனிய பண்ணோடு அமைந்த பாடல்கள் என ஆட்டமும் பாட்டும் கலந்த அற்புத நடனமே பரதநாட்டியம். எனவே பரதநாட்டியத்திற்குப் பாடல், நட்டுவாங்கம், வீணை, புல்லாங்குழல், வயலின், மிருதங்கம் முதலான இசைக் கருவிகளின் துணை தேவைப்படுகின்றன. ஒப்பனை மிக முக்கியம். நடனமாடுவோர் கண்கவர் ஆடை, ஆபரணங்கள் அணிந்திருப்பர். வண்ணப் பட்டாடைதான் முக்கிய ஆடை. பளபளக்கும் பலவகையான ஆபரணங்களுடன் கால்களில் சலங்கை அணிந்திருப்பர். காற்சலங்கை புனிதமானதாகக் கருதப்படுகிறது. ஆடுவோரின் ஒவ்வொரு உறுப்பும் நடனமாடும் என்றே சொல்லலாம். நவரசங்களின் பாவனைகளும் முகத்தில் வெளிப்படும். உடல் அசைவுகளாலும் கை முத்திரைகளாலும் பாடும் பாடலின் கருத்தையும் உணர்வையும் புரியவைப்பர். ஒவ்வொரு கைமுத்திரைக்கும் ஒவ்வொரு பொருளுண்டு.

உடல் அசைவுகளும் கை முத்திரைகளும் சேர்ந்தது 'அடவு' என்று வழங்கப்படுகிறது. சுமார் 120 அடவுகள் உள்ளன எனக் கூறுகின்றனர் ஆடற்கலை வல்லுநர்கள். கை முத்திரைகள் வழி கண் செல்லும்; கண்செல்லும் வழி மனம் செல்லும்; மனம் செல்லும் வழி உணர்வு செல்லும். அதுவே பரதநாட்டியக் கலையின் தனித்தன்மையும் சிறப்புமாகும்.

## செயல்பாடுகள்

- சிலப்பதிகாரம் வழி அறியலாகும் நாட்டியம் தொடர்பான செய்திகளைக் குறிப்பாக எழுதுங்கள்.
- பள்ளிக் கலை விழாவில் உரையாற்றுவதற்குப் 'பரத நாட்டியமும் தனித்தன்மைகளும்' என்னும் தலைப்பில் சொற்பொழிவுரை தயாரிங்கள்.

## பத்மா சுப்ரமண்யம்

டாக்டர் பத்மா சுப்ரமணியம் அவர்கள், உலகப் புகழ்பெற்ற நடனக்கலைஞராவார். மேலும் இவர் மிகச்சிறந்த இசை, நடன இயக்குநர், பேராசிரியர், ஆராய்ச்சியாளருமாவார். இவர் திரு. சு. சுப்ரமண்யம் என்பவருக்கும் மீனாட்சி அம்மாளுக்கும் மகளாக 4–2–1943 இல் சென்னையில் பிறந்தார். இவரது தந்தையார், புகழ் வாய்ந்த திரைப்படத் தயாரிப்பாளராவார். 1942–இல் இவரது தந்தையால் "நிருத்யோதயா" என்னும் அகாதமி நிறுவப்பட்டது. இவர் திரு. வழுவூர் ராமையாப் பிள்ளையிடம் முறையாக நாட்டியம் பயின்று, இக்கலையில் தேர்ச்சிப் பெற்று, 1956–இல் தனது அரங்கேற்றத்தினை முடித்து கலைப் பயண வாழ்க்கையைத் துவங்கினார். மேலும், திரு. தண்டாயுதபாணிப்பிள்ளை மற்றும் மயிலாப்பூர் கௌரி அம்மாளிடமும் முறையாகப் பயின்றார். இவர் தனது இளநிலை, முதுகலை, ஆய்வுப் பட்டயப் படிப்புகளை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் முடித்தார். இவர் தனது ஆய்வுக் கட்டுரையாக 108 கரணங்களை ஆய்வு செய்து, தொடர்ச்சியாக அதனை நாட்டியமாக ஆடியும் சாதனை படைத்தார். இவர், "மீனாட்சி திருக்கல்யாணம்", "விராலிமலைக் குறவஞ்சி", "சிலப்பதிகாரம்", "வந்தே மாதரம்" எனப் பல நாட்டிய நாடகங்களைத் தானே இயற்றியும் இசையமைத்தும், நாட்டிய நாடகங்களாக நடித்தும் ஆடியும் காட்டினார். உலகம் முழுதும் தனது கலைப்பயணத்தைத் தொடர்ந்து பல புதிய அழகிய கர்ண அபிநயங்களைக் கலந்து, அழகிய அசைவுகளுடன் கூடிய புதிய யுத்திகளை நடனத்தில் புகுத்தி, பார்ப்பவர்களைக் கலையின் அற்புதத்தினை எண்ணி பிரமிக்கச் செய்தவர். "பரதக் கலைக் கோட்பாடு", முதலான பல நூல்களையும் ஒலி, ஒளி வட்டுகளையும் வெளியிட்டுள்ளார்.



இவருக்குப் பத்மஸ்ரீ விருதும் 1983–இல் பத்மவிபூஷன் விருதும் 1983–இல் சங்கீத நாடக அகாதமி விருதும் 2003–இல் தமிழ்நாடு அரசாங்கத்தினரால்

"கலைமாமணி" விருதும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், நாரதகான சபாவினரால் "நாதப்ரம்மம்" விருதும், 1983–இல் "நேரு" விருதும் வழங்கப்பட்டது. இல்லற வாழ்க்கையில் ஈடுபடாமல், கலை உலக வாழ்க்கைக்கே தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு, கலைக்காக வாழும் அம்மையாரின் வாழ்க்கையும், அவரது தொண்டும் பாராட்டுக்குரியதாகும்.

தஞ்சாவூர் பெரிய கோவிலானது, 1006–இல் தொடங்கிய கட்டடத் திருப்பணி 1010–ஆம் ஆண்டு இராஜராஜ சோழனால் கட்டி முடிக்கப்பட்டது. உலகப் புகழ்பெற்ற இக்கோவிலின் 1000 ஆண்டு பூர்த்தி செய்யப்பட்ட மாபெரும் கலைவிழாவானது (25–9–2010), (26–9–2010) ஆகிய இரு தினங்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில், அனைத்து "பரதநாட்டியக் கலைஞர்களின் சங்கத்தினர்" சார்பாக டாக்டர். பத்மா சுப்ரமணியம் அவர்கள், ஆயிரம் பேர் கொண்ட நடனக் குழுவினருடன் சேர்ந்து நடனத்தை இயக்கினார். அன்றைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் இக்கலைவிழாவுக்குத் தலைமை தாங்கினார். காலத்திற்கும் அழியாத புகழைப் பெற்று, இளந்தலை முறையினருக்கு உதாரணமாக வாழ்ந்து காட்டியுள்ளார்.

தற்பொழுது அம்மையார் மாபெரும் நடனக்கோவில் ஒன்றை அமைக்கும் கலைப் பணியில் ஈடுபட்டுள்ளார்.

– சுகந்தி ரவீந்திரநாத்

**ஆசிரியர் குறிப்பு** சுகந்தி ரவீந்திரநாத் எழுதிய 'பரதநாட்டிய வழிகாட்டி' என்னும் நூலிலிருந்து நம் பாடப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது. இவர் ஜெர்மனியில் 'நாட்டியஸ்வரலயா பைன் ஆர்டிஸ்ட் அகதமியை' ஆரம்பித்து அங்கு நாட்டியப் பயிற்சி அளித்து வருகிறார். இராமாயணம், மகாபாரதம், பாஞ்சாலி சபதம் போன்ற நாட்டிய நாடகங்களை அரங்கேற்றியுள்ளார்.

## செயல்பாடுகள்

- டாக்டர் பத்மா சுப்ரமண்யம் அவர்களின் தன் விவரப் பட்டியல் தயாரியுங்கள்.
- டாக்டர் பத்மா சுப்ரமண்யம் அவர்களைப் பாராட்டி, கடிதம் எழுதுங்கள்.
- உங்கள் பள்ளி ஆண்டுவிழாவில் பத்மஸ்ரீ பத்மவிபூஷன் போன்ற பல விருதுகளைப் பெற்ற டாக்டர் திருமதி பத்மா சுப்ரமண்யம் அவர்கள் கலந்துகொள்ள உள்ளார். இதனைப் பொதுமக்களுக்குத் தெரிவிக்கும் விதமாகச் சுவரொட்டி தயாரியுங்கள்.
- 'மக்கள் வாழ்வில் கலைகளின் பங்கு' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.
- கிராமியக் கலைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் அதனை எவ்வாறு பாதுகாக்கலாம் என்பதனையும் சுட்டிக்காட்டும் விதமாகப் பத்திரிகைக்குத் தலையங்கம் எழுதுங்கள்.
- கிராமியக் கலைகள் அழிந்து போகாமல் இருக்க நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை விளக்கக் குறிப்பாக எழுதுங்கள்.

# மெய்ப்பொருள்



## பூனைச் சகுனம்

நண்பரைச் சந்தித்திராமல்
திரும்பி வந்திருக்கலாம்
பிழைத்துப் போயிருக்கும்
ஓர் உயிர்
மழையைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்
வெட்டாந்து கிடக்கும் இடத்திலிருக்கும்
நீர் பற்றிய தீராப் பசி
ஆற்றுப்படுத்த முடியாமலுள்ளது
என்றுதான் தொடங்கினார்.
வானம்
நட்சத்திரங்களைக் கூட்டி மடியிலிட்டு தாலாட்டட்டும்
பிள்ளைத்தாச்சியாய்
முகில்கள் மின்னி இடித்து
முக்கிக் கொண்டிருக்கட்டுமென
பீதி கலந்த கலக்கத்துடன்
பேச்சைத் தொடர்ந்தார்
எனது பசி எனக்கு
உனது பசி உனக்கு

என்றவர் பூனைக்கும் பசிக்கும்
என்பதைச் சொல்லவே இல்லை.
ஒரு வாய்ப்பு வந்திருக்கிறது
நானும் வருகிறேன் என்றபடி
பின் தொடர்ந்தவர்
மனையாளை அழைத்து
முன்னால் போடியம்மா போகும்போது
குறுக்கறுக்கும் பூனையை விரட்டுடி
சனியனால்தான் போனமுறையும்
சகுனம் பிழைக்க வைத்ததெனக் கூச்சலிட்டார்
பேருந்து சிற்றுந்தென நெரிசலான
இடத்தில் நிகழ்ந்த மேல் குறிப்பிட்டுள்ள
சம்பவத்தில் கண்ணெதிரே
ஒரு ஜீவன் எதிர்பாராமல்
உயிர் துறக்கவேண்டியாயிற்று
எனது கவலையெல்லாம்
பூனையைப் பற்றியே....
பாவம் பூனை நண்பரின் சகுனம்
பூனைக்கு எமனாகி இருந்தது!

– ரோஷான் ஏ.ஜிப்ரி

**ஆசிரியர் குறிப்பு** இவர் வலி, அடைமழை போன்ற கவிதைகளை இயற்றியுள்ளார். 'நடு' என்னும் இதழிலிருந்து நமது பாடப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது. இவர் இலங்கையைச் சார்ந்த எழுத்தாளர் ஆவார்.

## செயல்பாடுகள்

- 'பூனைச் சகுனம்' என்ற கவிதை சமூதாயத்திற்கு உணர்த்தும் செய்தியை விளக்கி எழுதுங்கள்.
- நாட்டுப்புற நம்பிக்கைகள் பற்றி வகுப்பில் கலந்துரையாடி குறிப்பு தயாரியுங்கள்.

## மூடநம்பிக்கைகள்

மனிதன் வாழும்வரை நல்ல கருத்துக்களைப் பின்பற்றி வாழவேண்டும். தவறான கருத்துக்களைப் பின்பற்றினால் தவறான முடிவுகளே எய்தப்படும். ஆகவே கருத்துகள் பற்றி எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

'நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட மனிதரை நினைத்து விட்டால்' என்ற பாரதியின் பாடலில் மனிதன் எவ்வகையான

மூடநம்பிக்கைகளில் ஆழ்ந்து வாழ்வைப் பயனற்றதாகச் செய்து விடுகிறான் என்பதைக் கூறியிருக்கிறார்.

"வஞ்சனைப் பேய்களென்பார், இந்த மரத்திலென்பார் அந்தக் குளத்திலென்பார் துஞ்சுது முகட்டி லென்பார்"

எண்ணிலா நோயுடையார் இவர் எழுந்து நடப்பதற்கும் வலிமையிலார். கண்ணிலாக் குழந்தைகள் போல் பிறர் காட்டிய வழியிற் சென்று மாட்டிக்கொள்வார் என்றார் பாரதியார். பேய்கள் மரக்கிளைகளில் இருக்கின்றது என்று கூறுவார்கள். பில்லி சூன்யம் என்பார்கள். மந்திரம் செய்தால் நோய் குணமாகும் என்பார்கள். பிறந்து வளர்ந்து பெரியவனாகி நன்கு கல்வியறிவு பெறப்பட்டிருந்தும்கூட சுயமாகச் சிந்தனை செய்யாமல் பிறர் சொல்வதைக் கேட்டு தம்முடைய வாழ்க்கையைக் கெடுத்துக்கொள்வார்கள்.

உலகப் புகழ்பெற்ற அர்னால்டு டாயின்பீ என்ற வரலாற்று அறிஞர் "நமது வாழ்க்கை நம் கையில் இருக்கிறது" என்றார். அதைப்போலவே தத்துவமேதை பெர்ட்ரண்ட் ரசல் அவர்கள் கிரகங்களே தம் கதி என்ன என்று தெரியாமல் சுழன்று கொண்டிருக்கும்போது நம் வாழ்க்கையை அவைகள் எப்படித் தீர்மானிக்க முடியும் என்று கேட்கிறார்.

சாதாரணமாக ஒரு நல்ல கல்வியறிவு பெற்றவன், தம்முடைய எதிர்கால வாழ்க்கை எப்படி அமைய வேண்டும் என்பதை அவன் முயற்சி செய்து தீர்மானிக்க வேண்டும். குறி கூறுவோரிடமும். கைரேகை பார்ப்பவரிடமும், ஜாதகம் பார்ப்பவரிடமும் சென்று தம்முடைய வாழ்க்கை எப்படியிருக்கும் என்று கேட்பதாக வைத்துக் கொள்வோம். அவ்வாறு அணுகப்பட்ட, எதிர்காலம் பற்றிக்கூறும் ஒரு நபர் நீங்கள் என்ன செய்தாலும் 5 ஆண்டுகளுக்கு உங்களுக்கு எந்தத் தொழிலும் அமையாது. அவ்வாறு நீங்கள் தொழில் துவங்கினாலும் நஷ்டத்தையே சந்திப்பீர்கள்" என்று கூறுவதாக வைத்துக் கொள்வோம். இந்த எண்ணம் எதிர்காலம் பற்றிக் கேட்ட நபரின் மூளையில் ஆழமாகப் பதிந்து, அதனால் ஏற்பட்ட பயத்தில் எந்தத் தொழிலும் துவங்காமல் முயற்சியும் செய்யாமல் பார்ப்பவரிடமெல்லாம் எனக்கு நேரம் சரியில்லை; ஐந்தாண்டுகளுக்குப் பின்னர்தான் எனக்கு நல்ல நேரம்' என்று சொல்லிக்கொள்ளத் துவங்குகிறார்.



நான் கல்லூரியில் புதுமுக வகுப்புப் படிக்கும்போது என் அறையில் தங்கியிருந்த மாணவர்கள் அங்கு வந்த ஒரு கைரேகை பார்ப்பவரிடம் தங்கள் கைகளைக் காண்பித்து

எதிர்காலம் பற்றிக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். எனக்கு இம்மாதிரியான விஷயங்களில் நாட்டமில்லை. ஆனால் என் அறைத்தோழர்கள் வற்புறுத்தி என் கைகளைக் காண்பிக்கச் செய்தார்கள். என்னைக் கிண்டலும் கேலியுமாகப் பேசிச் சம்மதிக்கச் செய்தார்கள். கைரேகை பார்ப்பவர் என்ன நினைத்தாரோ என்னவோ என் கையைப் பார்த்தவுடன் நீங்கள் 31 வயதுவரைதான் உயிர் வாழ்வீர்கள்' என்று கூறிவிட்டுச் சிரித்தார். அவரும் என் அறை நண்பர்களுடன் சேர்ந்துகொண்டார். அன்று அவர் கூறிய கூற்று என்னைக் கிண்டல் செய்ய ஒர் ஆயுதமாக என் தோழர்களுக்குப் பயன்பட்டது. நான் கல்லூரிப் படிப்பு முடிக்கும்வரை நான்கு ஆண்டுகள் நான் 31 வயது வரை மட்டுமே வாழப்போகிறேன் என்பதைச் சுட்டிக்காட்டி என் தோழர்கள் கிண்டல் செய்யும் அளவுக்குப் போய்விட்டது. விளையாட்டு வினையாகிவிட்டது. என் அறிவு இதை மறுத்தாலும், உணர்வு ஒரு பக்கம் அச்சத்தை ஊட்டியது. நான் திருமணம் செய்து கொள்ளும் காலம் வந்தபோது எண்ணினேன். இருபத்திநாலு வயதில் திருமணம் செய்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது. இன்னும் ஏழு ஆண்டுகளே வாழப்போகிற நான் எதற்காகத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று எண்ணினேன். அறிவுக்கும் உணர்வுக்கும் எழுந்த போராட்டத்தில் அறிவே வென்றது. இந்த நம்பிக்கைக்கு அறிவுப்பாதை துணையாக நின்றது. ஒருமனிதன் மற்றொரு மனிதனின் எதிர்காலத்தைக் கணிக்க முடியாது. இயற்கை அல்லது கடவுள் மட்டுமே அதைத் தீர்மானிக்க முடியும். ஒருவேளை நாம் எப்போது இறப்போம் என்பதை மருத்துவர்கள் வேண்டுமானால் தீர்மானிக்கலாம்.

விளையாட்டாக ஆரம்பித்த இந்தப் பேச்சுகளால் என் மனம், உடல் பாதிக்கப்பட்டது. மன உளைச்சல், கவலை,உடல் நலக்குறைவு ஆகியவை தோன்றலாயின. அவ்வளவையும் நான் வென்றேன். இன்று எனக்கு 67 வயது நிரம்பிவிட்டது.



கடவுள் ஒருவனையே நம்பவேண்டும். மற்றபடி மனிதன் கூறும் அபத்தக் கூற்றுகளை நம்பக்கூடாது. எனக்கு நினைத்துப்பார்த்தால் ஆச்சரியமாக இருக்கிறது.

ஆகவே சித்தார்த்! ஒரு தவறான கணிப்பால், சொல்லால் ஒரு மனிதனின் வாழ்க்கையில் எல்லாவிதமான மாற்றங்களையும் ஏற்படுத்திவிட முடியும் என்பதற்கு இதுவே சான்று.

சிலர் எல்லாவற்றிற்கும் சகுனம், நேரம் பார்க்கிறார்கள். அதைப்போல் ஜோசியம்,

ஜாதகம் பார்க்கிறார்கள். ஜாதகம் இல்லையென்றால் சிலருக்குத் திருமணமே நடைபெறுவதில்லை. அறிவியல் பூர்வமான ஆதாரங்களை விட்டுவிட்டு ஜாதகத்தை மட்டும் பார்த்து என்ன பயன். எய்ட்ஸ் நோய் உள்ள ஒருவருக்கு ஜாதகம் பார்த்து, பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கின்றனர். அதே சமயம் மருத்துவப் பரிசோதனை செய்வதில்லை.

சிலர் தங்கள் வாழ்க்கையையே மற்றவர்கள் கூறும் வாய்ச்சொல்லுக்கு விட்டுவிட்டார்கள். "நான் எப்போது வெளிநாடு செல்லலாம்". "என் மகனுக்கு எப்போது திருமணம் ஆகும்", "என் பெண்ணுக்கு எப்போது குழந்தை பிறக்கும்" என்பது போன்ற கேள்விகளை அவர்களிடம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். "எனக்கு நேரம் சரியில்லை" என்பார்கள்.

**பகுபதம் பகாப்பதம்**

அதியன் : என்ன இனியா! சிந்தனையில் மூழ்கி இருக்கிறாய் ?

இனியா : அப்படி எதுவும் இல்லை. பகுதம் பகாப்பதம் என்றால் என்ன ? என்பதைத்தான் எண்ணிப் பார்க்கிறேன் .

அதியன் : அது கொஞ்சம் விளக்கமா சொல்ல வேண்டிய விஷயம் ஆச்சே ! சரி... 'அடிப்படை இலக்கணம்' என்றொரு நூல் என்னிடத்தில் உள்ளது. தருகிறேன் ....... படித்துப்பார்.

இனியா : சரி .... பெரிய உதவியாக இருக்கும் அதியா.

அதியன் : இந்தா இனியா படி....... ஐயமிருந்தால் கேள்.

ஆகவே சித்தார்த்! இம்மாதிரியான மூடக்கருத்துகளுக்கு நீ செவிசாய்க்கக் கூடாது. உலகில் ஒருமுறை வாழ்கின்ற நாம் அறிவியல் ஆதாரத்துடன் வாழ்க்கையை வாழவேண்டும்.

இதைப்போல பல எண்ணற்ற நம்பிக்கைகள் நம் சமூகத்தில் வேரூன்றிக் கிடக்கின்றன. அவைகள் நம்மையும் பாதித்து விடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்.

சிறிய வயதில் ஏற்படும் பல உணர்ச்சிகள் மனிதனின் அடித்தளத்தில் சென்று மறைந்துகொள்ளுகின்றன. நேரம் கிடைக்கும் போது அவைகள் வெளியே வருகின்றன. அறிவின் துணைகொண்டு அவற்றை வெல்ல வேண்டும். சுடுகாட்டிற்குச் செல்ல பலர் பயப்படுவது ஏன்? அங்கே பேய்கள் நடமாடுவதாக ஒரு நம்பிக்கையை வரலாற்றுக் காலத்திலிருந்தே சமுதாயங்கள் ஏற்படுத்திவிட்டன. எகிப்து நாகரிக காலம் முதல் மாயா நாகரிகம் வரை பேய், பிசாசு போன்ற கருத்துகள் நம்பப்பட்டிருக்கின்றன. நரபலி கொடுக்கும் பழக்கம் பல நாகரிகங்களில் இருந்துள்ளன. நாம் அவர்களின் வழித்தோன்றல்கள். நம்மிடம் இந்த எண்ணங்கள் அவ்வப்போது தோன்றலாம். அதிகமாக இம்மாதிரியான கருத்துகளை நம்புபவர்கள் கல்வியறிவில்லாத கிராமப்புற மக்களே.

"சொற்கள் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகைப்படும். இவற்றுள் பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் முக்கியமானவை. அவை தனித்து நின்று பொருள் தருபவை.

'பகு' என்றால் பகுத்தல். 'பதம்' என்றால் சொல். பகுக்க முடிகின்ற சொல், பகுக்க முடியாத சொல் எனப் பெயர். சொல்லையும் வினைச் சொல்லையும் இரண்டு இரண்டாக வகைப்படுத்தலாம். . பகுக்க முடியாத சொற்கள் பகாப்பதங்கள் என்றும் பகுக்க முடிகின்ற சொற்களைப் பகுபதங்கள் என்றும் கூறலாம்.

அம்மா, ஆ, ஆறு, இலை, கண் முதலானவை பெயர்கள். இவற்றை மேலும் பிரிக்க இயலாது. எனவே இவற்றைப் பெயர்ப்பகா பதங்கள் எனலாம் . வா , பார், படி, எடு, ஆடு, உண் ….. முதலானவை வினைச்சொற்கள். இவற்றை மேலும் பகுக்க முடியாது. எனவே இத்தகைய வினைச்சொற்கள்

கணவனை இழந்த பெண்கள் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளக்கூடாது. அவர், நல்ல காரியத்திற்காக ஒருவர் புறப்படும் போது அவர் எதிரே வரக்கூடாது. அதேபோல் கணவனால் விரட்டப்பட்ட அல்லது கணவனை விட்டுப் பிரிந்து வாழ்கின்ற பெண்கள் நல்ல சுப நிகழ்ச்சிகளைச் செய்யக்கூடாது. இதெல்லாம் யார் விதித்த சட்டம். ஆண்கள் யார்? பெண்கள்? இருவரும் ஒரே மனித குலத்தைச் சேர்ந்த ஹோமோசாபியன்ஸ்' தானே! இதில் வேறுபாடு என்ன இருக்கிறது.

தனி மனித வாழ்க்கையைப் பறித்துக் கொண்டிருக்கிற சமுதாயத்தைப் பாதிக்கின்ற இத்தகைய மூட நம்பிக்கைகள் பல நம்மிடையே இருக்கத்தான் செய்கின்றன.

"எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் கண்பதறிவு"

என்ற வள்ளுவனார் வாக்கின்கினாங்க எல்லாவற்றையும் ஆர்யந்தறிவதே நலம்.

– உமாபதி

**ஆசிரியர் குறிப்பு** நமது பாடப்பகுதி 'திருவிழா காண வந்தேன்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இவர் சிறார் சார்ந்த பல்வேறு நூல்களை இயற்றியுள்ளார்.

## செயல்பாடுகள்

- ❑ மூடநம்பிக்கைகள் என்ற கட்டுரை மூலம் நீங்கள் அறிந்துகொண்ட செய்திகளைத் தொகுத்து எழுதுங்கள்.
- ❑ மூடநம்பிக்கைகள் மனித வாழ்வைச் சிறப்பாக்குகிறதா! சீரழிக்கிறதா! என்னும் தலைப்பில் நடைபெறும் பட்டிமன்றத்தில் ஏதேனும் ஒர் அணி சார்பாகப் பேசுவதற்குப் பட்டிமன்றக் குறிப்பு தயாரியுங்கள்.
- ❑ மூடநம்பிக்கைகளால் மனித வாழ்வின் ஏற்படும் பிரச்சினைகளையும், அதற்கான தீர்வுகளையும் சுட்டிக்காட்டி தலையங்கம் எழுதுங்கள்.

## மக்களின் பழக்க வழக்கங்களும் மூடநம்பிக்கைகளும்

மனிதனுடைய உயிர் வாழ்க்கைக்கு ஆதாரமாக இருப்பது நம்பிக்கை மட்டுமே! ஏதாவது ஒரு நம்பிக்கையின் பலத்தால் தான் மனிதன் இந்த உலகத்தில் நிம்மதியாக, மகிழ்ச்சியாக வாழ முடிகிறது. வாழ்க்கை என்பது ஒரு நம்பிக்கை தொகுப்புதான்.

மனிதன் உலகத்தில் தோன்றிய காலத்தில் இருந்தே ஏதோ ஒரு வகையான நம்பிக்கைதான் அவனை உற்சாகத்துடன் உத்வேகத்துடன் தன் வாழ்நாளைக் கடத்துவதற்கு உதவி புரிந்திருக்கிறது.

கடவுளைப் பற்றித் தெளிவான எந்த உருவமும் ஏற்படாத காலத்தில் இயற்கையின் பல்வேறு வகையான செயல்நிலை குறித்து மனிதன் பெருவியப்பும் பிரமிப்பும் அடைந்தான்.

கடுமையாகக் கொளுத்தும் வெயில் தனக்கு உதவி செய்கிறதா, உபத்திரவம் செய்கிறதா என்று அவனால் தீர்மானிக்க முடியவில்லை.

வானமே பொத்துக் கொண்டதோ என்று நினைக்கும் விதத்தில் கொட்டும் பெரு மழையின் இயல்பையும் தன்மையையும் அவனால் விளங்கிக்கொள்ள இயலவில்லை.

சுழன்றடிக்கும் பெருங்காற்று தனக்குச் செய்யக்கூடிய நன்மை என்ன என்று தெரிந்துகொள்ள முடியவில்லை.

நாளடைவில் வெயிலும் மழையும் காற்றும் ஏதோ ஒரு வகையில் தன் உயிர் வாழ்க்கைக்கு உதவி செய்கிறது என்று உணர்ந்தபோது அவற்றின்மீது அவனுக்கு ஆழ்ந்த பிடிப்பும் நம்பிக்கையும் ஏற்பட்டது.

தன் உயிர் வாழ்க்கைக்கு உதவும் சூரியன், மழை, காற்று போன்றவற்றைத் தன் நன்றிக்கும் நம்பிக்கைக்கும் ஏற்ப ஏதோ அமானுஷ்ய சக்திகள் என்று நம்பினான். அவற்றை வழிபட்டு தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் வழக்கம் அவனுக்கு ஏற்பட்டது.

கடவுள் நம்பிக்கையும் வழிபாடும் இப்படித்தான் தோன்றி இருக்க வேண்டும். திடீர் திடீரெனத் தோன்றும் இயற்கைச் சீற்றங்கள் மனிதனை அச்சமடையச் செய்தன.

வானத்தில் பளிச்பளிச்சென மின்னும் மின்னல் அதைத் தொடர்ந்து ஏற்படும் பயங்கரமான இடிச்சத்தம் போன்றவை கடவுள் ஏதோ காரணத்தால் தன் மீது

வினைப் பகா பதங்கள் எனப்படுகின்றன. முருகன், என்ற ஆள் பெயரை முருகு (அழகு), அன் (ஆண்பால் ஒருமை விகுதி) என இரண்டாகப் பிரிக்கலாம். அதைப் போன்றே வயநாடு என்னும் இடப்பெயரை வயல் + நாடு என இரண்டாகப் பகுக்கலாம். எனவே இத்தகைய பெயர்களைப் பெயர்ப் பகுபதங்கள் என்கின்றனர் . இதைப் போலவே வினைப் பகுபதங்களும் உண்டு.

பாடுகிறாள் என்பதை பாடு+ கிறு+ ஆள் எனப் பிரிக்கலாம் . இங்குப் பாடு என்பதை 'பகுதி' என்றும் 'ஆள்' என்பதை 'விகுதி' (பெண்பால் ஒருமை) 'கிறு' என்பதைக் காலம் காட்டும் (நிகழ்காலம்) இடைநிலை என்றும் கூறலாம். எனவே 'பாடுகிறாள்' என்பது வினைப்பகுபதம் எனப்படுகிறது.

கொண்ட கோபத்தின் பிரதிபலிப்பு என்று எண்ணிய மனிதன் கடவுளைச் சாந்தப்படுத்தும் நோக்கில் வகை வகையான வழிபாடுகளைச் செய்தான்.

தவறு செய்தால் கடவுள் தண்டனை கிடைக்கும் என்று பின்நாளில் ஏற்பட்ட நம்பிக்கை மனிதன் ஒழுக்கத்துடன் முறை பிறழா வாழ்க்கை நடத்துவதற்கு அடிப்படை வகுத்துத் தந்தது.

காட்டு விலங்குகளுக்கும் தனக்கும் வேறுபாடு இன்றி வாழ்ந்துக் கொண்டிருந்த மனிதனைச் சிறுகச் சிறுக சீர்த்திருத்தி அவன் மன இயல்பைத் தெளிவுடையதாக்கி, ஓர் ஒழுங்கு முறையுடன் வாழ வழி அமைத்துத் தந்தது என்பதை மறந்துவிட முடியாது.

இன்னும்கூட நாம் புரிந்து கொள்ள இயலாதப் பல மூடநம்பிக்கைகளின் மத்தியில்தான் வாழ்கிறோம்.

தாய் தான் பெற்ற மக்களிடம் அளவு கடந்த பாசத்தைப் பொழிகிறாள்.

கணவனும் மனைவியும் இறுக்கமான பிணைப்பும் அன்பும் தவழ வாழ்கிறார்கள்.

நமது குழந்தைகள் மீது நமக்குள்ள வாத்சல்யம்...

சகோதர பாசம்...

நட்பினால் ஏற்படும் அன்புடன் கூடிய பிணைப்பு ஆனால் இவ்வாறு நாம் கூறுவதை வைத்து ஒரேயடியாக மூடநம்பிக்கையின் அரவணைப்பில்தான் வாழ்க்கையே நடத்த வேண்டும் என்று தீர்மானித்து விடக்கூடாது.

மூடநம்பிக்கையை ஒரு மருந்து போலத்தான் வாழ்க்கையில் ஏற்றுக் கொள்ள வேண்டுமே தவிர, அளவுக்கு ஒத்துவராவிட்டாலும் மூடநம்பிக்கை மீது சவாரி செய்துதான் வாழ்க்கையை நடத்த வேண்டும் என்று சகட்டு மேனிக்கு முடிவெடுத்து விடக்கூடாது.

ஓர் உதாரணத்தின் அடிப்படையில் இதைப் பற்றி யோசிப்போம்.

உணவு நமது உயிர் வாழ்க்கைக்கு அடிப்படை என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான்.

மனிதன் மட்டும் அல்ல. உலகில் வாழும் எல்லா உயிர் இனங்களும் உணவைப் புறக்கணித்து உயிர் வாழ முடியாது.

உணவு உயிருக்கு ஆதாரமாக இருக்கிறது என்பதற்காக உணவு

இவ்வாறாக ஒரு வினைச்சொல்லைப் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என ஆறு கூறுகளாகப் பகுக்கலாம். ஒரு வினைச்சொல்லில் இந்த ஆறு கூறுகளும் அமைய வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

எ.டு. படித்தனன் ( படி+ த் + த்+ அன்+ அன்)

படி – பகுதி , அன் – விகுதி, ( ஆண்பால் ஒருமை), த் – சந்தி, த் – காலம் காட்டும் இடை நிலை, அன் –விகாரம்.

அதியன் : என்ன….. இனியா …….படித்துவிட்டாயா ? ஏதேனும் ஐயங்கள் உண்டா ?

இனியா: எந்த ஐயமும் இல்லை . அதியா….. மிகத் தெளிவாகவே இருக்கிறது. மிக்க நன்றி!

என்ற பெயரால் எதை வேண்டுமானாலும் உணவாக உட்கொள்ளலாமா?

இவற்றைப் பற்றி எல்லாம் ஆழ்ந்து சிந்தித்தோம். ஆனால், மேற்சொன்னவை எல்லாம்கூட ஒரு வகை மூடநம்பிக்கையே என்ற மயக்கம் ஏற்படுகிறது.

வாழ்க்கையில் இத்தகைய பிணைப்பு இருந்தாலொழிய வாழ்க்கையே சிக்கலாகி விடும், என்ற அச்சம் கலந்த நிர்ப்பந்தம் காரணமாக அன்பு, பாசம், பற்று என்றெல்லாம் பேசுகிறோமோ செயற்படுகிறோமோ என்று கூட எண்ணத் தோன்றுகிறது.

ஆகவே ஒரு வித மூடநம்பிக்கையின் அடிப்படையிலேயே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று நாம் நினைத்தால் அது தவறு என்று கூறிவிடமுடியாது.

ஆதி நாள் மனிதன் இலை, தழை, காய், கனி, கிழங்கு வகைகளை மட்டுமே உண்டு உயிர் வாழ்ந்துள்ளான் என்பதற்காக அதே மாதிரி உணவை இன்று உட்கொள்ளுவது சாத்தியமா?

ஆதி மனிதன் உட்கொண்ட அதே மாதிரி உணவை இன்றும் உட்கொள்ள வேண்டும் என்று நம்புவது மூடநம்பிக்கை,

காலத்தால் நாம் பெற்ற அறிவு அனுபவம் ஆகியவை காரணமாக உணவைச் சமைத்துப் பக்குவப்படுத்தி ருசித்து ரசித்துச் சாப்பிடுகிறோம்.

உணவை நமது உடல் நலத்துக்கு ஏற்றவாறு பக்குவப்படுத்துவது நமது உடலுக்கு ஊட்டச் சக்தியினை அளிப்பதற்கு என்ன விதமான பண்டங்களை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றெல்லாம் ஆராய்ச்சி செய்கிறோம்.

என்ன வகையான உணவுகள் உடலுக்கு ஏற்றவை அல்ல? எவற்றை விலக்க வேண்டும்? என்றெல்லாம் மருத்துவ மேதைகள் நமக்கு ஆலோசனை நல்குகின்றனர்.

உணவுதானே ஊசிப் போயிற்று என்பதற்காகப் பழைய உணவைச் சாப்பிடலாம் என்று எண்ணுகிறோமா?

உணவு உயிர் வாழ்வதற்கு ஆதாரமானது. உணவை அவசியம் உட்கொள்ள வேண்டும் என்று எண்ணுவது நம்பிக்கை.

உணவு எப்படி இருந்தாலும் பரவாயில்லை. உணவு என்று பெயர் கொடுக்கப்பட்டுவிட்ட எதை வேண்டுமானாலும் சாப்பிடலாம் என்று எண்ணுவது மூடநம்பிக்கை.

இவ்வகையில்தான் நம்பிக்கையையும் மூடநம்பிக்கையையும் நாம் பகுத்து உணர்ந்து தெரிந்து கண்டு பிடிக்க வேண்டும்.

### பிறப்புச் சடங்குகள்

சேனை தொடுதல்: சேய் + நெய் + தொடுதல் என இது பிரியும். குழந்தை பிறந்தவுடன் பெரியவர்களை அழைத்து, குழந்தையின் நாவில் இனிப்பு கலந்த நெய் அதாவது எண்ணெய்யைத் தொட்டு வைக்கும் வழக்கத்தையே சேனை தொடுதல் என்பர். சேனை தொட்டு வைக்கும் பெரியோரின் குணநலன்கள் குழந்தைக்கும் வரும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இச்சடங்கு செய்யப்படுகிறது.

> **தொட்டிலிடுதல்**
>
> குழந்தையை முதன்முதலில் தொட்டிலில் இடுவது நாட்டுப்புற மக்களால் மேற்கொள்ளப்படும் ஒரு சடங்காகும். குழந்தையின் தாய்மாமன் தொட்டில் துணி, தொட்டில் கம்பு, தொட்டில் கயிறு, புத்தாடை ஆகியவற்றைக் கொண்டு வந்து தொட்டிலில் குழந்தையைக் கிடத்தி மூன்று முறை ஆட்ட வேண்டும். இவ்வாறு செய்வதே தொட்டிலிடுதல் சடங்காகும்.

பாரதம் தவிர்த்த பிற நாடுகளில் வாழும் மக்களின் பழக்கவழக்கங்களுக்கு எத்தனையோ காரணங்கள் இருக்கக் கூடும்.

நமது பாரத தேசத்தில் சிறப்பாகத் தமிழ் நாட்டில் மக்களின் பழக்கவழக்கங்கள் உருவானதற்கு இங்கு நிலவி வரும் சமயங்களே அடிப்படையாக விளங்குகின்றன.

நமது மக்களின் பழக்கவழக்கங்கள் இங்கு நிலவும் சமயங்களின் கடவுள் நம்பிக்கையோடு தொடர்புடையனவாகவே உள்ளன.

இன்றைய சூழலை வைத்துப் பார்க்கும்போது நமது மக்களின் பழக்கவழக்கங்களில் பெரும்பான்மை மூடநம்பிக்கைகள் என்றே சிலரால் கருதப்படுகின்றன. ஆனால் நமது மக்களின் பழக்கவழக்கங்கள் அனைத்துமே மூடநம்பிக்கை என்று கூறிவிட முடியாது.

கடவுள் நம்பிக்கை சார்ந்த பழக்கவழக்கங்கள் மக்களின் வாழ்க்கையைப் பண்படுத்தி மக்களின் மனோபாவத்தை விசாலப்படுத்தி, பரஸ்பரம் மனித நேயத்தை ஊட்டுவனவாகவே உள்ளன.

சிக்கல் இல்லாத, குழப்பம் இல்லாத, நிம்மதியான வாழ்க்கைக்கு அவை அடிப்படை அமைத்துத் தந்துள்ளன.

அந்தப் பழக்கவழக்கங்கள் மூடநம்பிக்கை என்றே கொண்டாலும், அந்த மூடநம்பிக்கைகளே மக்கள் வாழ்வை செம்மைப்படுத்த உதவியுள்ளன என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

– சங்கர சிவம்

> **ஆசிரியர் குறிப்பு** சங்கர சிவம் அவர்கள் எழுதிய 'மக்களின் பழக்க வழக்கங்களும் மூடநம்பிக்கைகளும்' என்னும் நூலிலிருந்து நம் பாடப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- "ஆதிகால மனிதனின் நம்பிக்கைகள்" என்ற தலைப்பில் பள்ளி இலக்கிய மன்ற விழாவில் சொற்பொழிவாற்ற சொற்பொழிவுரை தயாரியுங்கள்.
- இப்பாடப்பகுதியில் மனிதன் கண்டு அஞ்சிய இயற்கைப் பொருள்களை வரிசைப்படுத்துங்கள்.
- நம்பிக்கைத் தொடர்பான பழமொழிகள், பொன்மொழிகள் போன்றவற்றைத் திரட்டி எழுதுங்கள்.

# கைவண்ணம்



## கீழடி

கீழடி தொல்லியல் களம் என்பது இந்தியத் தொல்லியல் ஆய்வு நிறுவனத்தால் அகழாய்வு தொடங்கப்பட்டு பின்னர் தமிழ்நாடு தொல்லியல் துறையால் செயற்பட்டு வரும் ஒரு சங்ககால வசிப்பிடம் ஆகும். சிவகங்கை மாவட்டத்தில் கீழடி என்ற ஊரில் நிலத்தை உழும்போது பல்வேறு தொல்லியல் எச்சங்கள் கிடைத்ததன் அடிப்படையில் அங்கு விரிவாக ஆய்வு செய்யப்பட்டபோது பல்வேறு பொருட்கள் கிடைக்கப்பெற்றன. அவற்றில் சில முக்கியமான பொருட்களைப் பற்றி இங்குக் காண்போம்.

### சுடுமண் அச்சு மற்றும் உருவங்கள்

கீழடி அகழாய்வில் இந்தப் பருவத்தில் மட்டும் சுடுமண்ணாலான 13 மனித உருவங்களும் 3 விலங்கினங்களின் உருவங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு மனிதத் தலையின் அச்சு ஒன்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அச்சானது மனிதத் தலையினை, உலோகம் அல்லது பிற பொருட்களைக் கொண்டு வார்த்து உருவாக்கக் கூடியது என்று கருதலாம். இதன் உட்பகுதியானது மிகவும் நேர்த்தியான வடிவில் வடிக்கப்பட்டுள்ளது. இந்த அச்சிலுள்ள தலை ஆபரணம், நீண்ட காது ஆகியவை நுண்ணிய முறையில் செதுக்கப்பட்டுள்ளன. இந்த அச்சானது சலித்த களிமண்ணைக் கொண்டு செய்யப்பட்டு நன்கு தீயிலிட்டு சுடப்பட்டுள்ளது.

### காதணிகள்

இந்த அகழாய்வில் இரண்டு வகையான சுடுமண் காதணிகள் கண்டறியப்பட்டுள்ளன. ஒன்று நல்ல களிமண்ணைக் கொண்டு வட்டவடிவில் தட்டையாகவும் சற்று தடிமனாகவும் மேல் புறத்தின் நடுப்பகுதியினைச் சுற்றி சிறிது பள்ளமான தடத்தை ஏற்படுத்திக் காது துளையில் பொருந்தும் வண்ணம் அமைக்கப்பட்டு தீயிலிட்டு சுடப்பட்டு செய்யப்பட்டவை. மற்றொன்று அதே போன்று தட்டையான நடுப்பகுதியில் துளையிடப்பட்ட காதணி ஆகும். இவை பனை ஓலையைச் சுற்றி, காதணியாக அணிவது போன்ற அமைப்பில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இக்காதணிகள் தட்டையான பகுதியின் ஒரு பக்கத்தில் நன்கு அலங்கரிக்கப்பட்டுள்ளன. ஒரு காதணியில் 'ழ' வடிவம் போன்ற அமைப்பில் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இந்த அகழாய்வில் மொத்தம் 28 சுடுமண் காதணிகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

### வளையல்கள்

கீழடியில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் உடைந்த வளையல்களின் 63 பாகங்கள் கிடைத்துள்ளன. இத்தகைய வளையல்கள், பல்வேறு அளவுகளிலும் சங்கு மற்றும் கண்ணாடி போன்ற மூலப்பொருள்களாலும் செய்யப்பட்டவை ஆகும். இவை தடித்த மற்றும் மெல்லிய குறுக்கு வெட்டினைப் பெற்றுள்ளன. ஒரு வளையலின் மேல் பாகத்தில் அழகிய வேலைப்பாடுகளுடன், இரு சிறிய கோடுகள் மேல் பாகத்தினைச் சுற்றி அலங்கரிக்கின்றன.



### ஆட்டக்காய்கள்

வரலாற்றுக் காலத்தில் ஆட்டக்காய்கள் களிமண்ணால் செய்யப்பட்டிருந்தன. கீழடி அகழாய்வில் பல வகையான ஆட்டக்காய்கள் கிடைத்துள்ளன. இவ்வகையான பொருட்கள், சதுரங்கம் போன்ற விளையாட்டுகளை விளையாடுவதற்காகப் பயன்படுத்தப் பட்டிருக்கலாம், இப்பருவத்தில் 80 ஆட்டக்காய்கள் கிடைத்துள்ளன. இவையனைத்தும் சுடுமண்ணால் சுடப்பட்டு பெரும்பாலானவை கருப்பு நிறம் கொண்டவையாக உள்ளன.

### வட்டச்சில்லுகள்

தட்டையான வடிவில் உள்ள பானை ஓட்டின் விளிம்புகள் நன்கு தேய்க்கப்பட்டு வட்ட வடிவத்தைக் கொண்டிருக்கும் விளையாட்டுப்

பொருள் 'சில்லு' என்றழைக்கப்படுகிறது. இச்சில்லுகளைக் குழந்தைகள் தங்களின் விளையாட்டுக்குப் பயன்படுத்தினர். இவை, பல்வேறு அளவுகளில் பல்வேறு நிறங்களையுடைய பானை ஓடுகளில் கிடைக்கின்றன. கருப்பு–சிவப்பு நிறம், சொர சொரப்பான சிவப்பு நிறம், சிவப்பு நிறம் ஆகிய நிறங்களைக் கொண்ட பானை ஓடுகளில் செய்யப்பட்ட மொத்தம் 601 வட்டச்சில்லுகள் இதுவரை அகழாய்வில் சேகரிக்கப்பட்டுள்ளன.



## கைவினைத் தொழில்கள்

அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட 17 பானைகள் கண்டறியும் சோதனைக்காக இத்தாலியிலுள்ள பைசா பல்கலைக் கழகத்தின் புவி அறிவியல் துறைக்கு வேலூர் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டன. பானை ஓடுகளில் காணப்பட்ட கனிமங்கள், பாறைத்துகள்களின் தன்மை, மேலும் அவற்றின் பயன்பாடு குறித்து ஆய்வு முடிவுகள் பெறப்பட்டுள்ளன. கீழடியில் கிடைக்கப்பெற்ற, தண்ணீர்ச் சேகரிக்கவும் சமையலுக்காகவும் பயன்படுத்தப்பட்ட பானைகள் தனித்த பானை வனைவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உள்ளூரிலேயே வனையப்பட்டவை என்பது உள்ளூர் மண் மாதிரியை ஒப்பீட்டாய்வு செய்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கீழடி அகழாய்வில் இரண்டு இடங்களில் 4 மீட்டர் அளவுக்கு மேல் மிகப்பெரிய அளவில் பானை ஓடுகளின் குவியங்கள் கண்டறியப்பட்டதைக் கருத்தில் கொண்டு கீழடியில் பானை வனையும் தொழிற்கூடம் செயல்பட்டிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரலாம்

அடுத்து, கீழடியில் கிடைத்த கருப்பு – சிவப்பு அணிகலன் சிலவற்றின் மாதிரிகள் நிறமாலையியல் பகுப்பாய்வு சோதனைக்கு உட்படுத்தப் பட்டன. அந்த ஆய்வு முடிவுகளின் மூலம், கருப்பு – சிவப்பு நிறப்பானை ஓடுகளின் சிவப்பு நிறத்திற்குத் இரும்பின் தாதுப் பொருளான ஹேமடைட் என்பதையும், கருப்பு நிறத்திற்குக் கரிமப் பொருளான கரியையும் பயன்படுத்தியுள்ளது தெரியவருகிறது. இக்கருப்பு–சிவப்பு நிறப் பானைகளை $100^{\circ}C$ வெப்பநிலையில் சுட்டு உருவாக்கும் தனித்தன்மை வாய்ந்த தொழில்நுட்பத்தைப் பண்டைய கீழடி வாழ் மக்கள் பயன்படுத்தியுள்ளனர்.

கீழடியில் கிடைத்த மண்பாண்டங்களின் தொழில்நுட்பம், தனிமங்களின் கலவை, களிமண்ணின் தன்மை ஆகியவை கிமு. 6–ஆம் நூற்றாண்டிலிருந்து கி.மு.2–ஆம் நூற்றாண்டு வரை ஒரே மாதிரியாக இருந்துள்ளன என இத்தாலி பல்கலைக்கழக அறிக்கையில் தெரியவருகிறது. பானை ஓடுகளின் மாதிரிகள் தமிழகத்தின் பிற்பகுதியில் உள்ள மண்தன்மையை ஒத்திருப்பதாகவும், அது 2–ஆம் நூற்றாண்டிற்குரியது என்றும் ஆய்வறிக்கை விளக்குகிறது எனவே, இதன்மூலம் வணிகர்கள், தொழில் சார்ந்தோர். பயணியர் ஆகியோரிடையே நிலவிய வணிகப் பரிமாற்றங்கள் உறுதியாகின்றன.

**ஆசிரியர் குறிப்பு** தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியீடான 'கீழடி வைகை நதிக்கரையில் சங்க கால நாகரிகம்' என்னும் இதழிலிருந்து நமது பாடப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது.

### செயல்பாடுகள்

- கீழடி அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட காதணியின் வடிவமைப்பு பற்றி சிறுகுறிப்பு தயாரியுங்கள்.
- கீழடி அகழாய்வின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறி நண்பனுக்குக் கடிதம் எழுதுங்கள்.
- தொல்லியல் துறை வல்லுநரிடம் நேர்காணல் காண்பதற்கான வினாநிரல் தயாரியுங்கள்.

## நாட்டுப்புறப் புழங்கு பொருட்கள்

மானிடவியலார் பண்பாட்டினைப் பொருள்சார் பண்பாடு, பொருள்சாராப் பண்பாடு என்று இருவகைப்படுத்துவர். பொருள்சார் பண்பாட்டில் மக்களது உணவு, உடை, உறையுள் குறித்த அனைத்துப் பொருட்களும் அடங்கும். பொருள்சாராப் பண்பாட்டில் அவர்தம் பழக்கவழக்கங்கள், ஆடைகள், நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாடுகள் ஆகியவை அடங்கும்.

நாட்டுப்புறத்தில் மரபுவழி வந்த உணவு சார் வீட்டு உபயோகப் பொருட்களின் தற்போதைய நிலையினைக்கண்டறிவதும் மறைந்துபோன பொருட்கள் கருவிகள் ஆகியவற்றை வெளிப்படுத்துவதும். நவீன வாழ்வின் கூறுகளுக்கேற்பப் பொருட்கள் எவ்வாறு தங்களைத் தகவமைத்துக் கொண்டுள்ளன என்பதை அறிதலும் ஆகும்.

### அடுக்குப் பானைகள்

'காயமே இது பொய்யடா, வெறும் காற்றடைத்த பையடா, மாயவனார் குயவன் செய்த மண்ணுப் பாண்ட ஓடடா' என்று மனித உடலையே

மண்பாண்டமாக உருவகித்தனர் சித்தர்கள். பிறப்பிலிருந்து மூன்று துளையிட்டுக் குடம் உடைக்கும் இறப்பு வரை மண்பாண்டங்கள் நாட்டுப்புற மக்களோடு தமக்குள்ள நெருங்கிய உறவை நிலை நாட்டிக் கொண்டிருக்கின்றன. நகர நாகரிகமாகிய சிந்து வெளி நாகரிகத்தில் மண்பாண்டத் தொழில் உன்னத வளர்ச்சி பெற்றிருந்ததை வரலாறு வரைந்து வைத்துள்ளது. ஆய்வுக்குட்பட்ட தற்போதைய கிராமப்பகுதியில் அடுக்குப் பானைகள் ஏறத்தாழ எல்லா வீடுகளிலும் இருக்கின்றன. குடிசை வீடு, மெத்தை வீடு எனப்படும் மாடிவீடு எதுவாகிலும் அடுக்குப் பானைகள் இல்லாவிட்டால் விருத்தியம்சம் வராது என்று மக்கள் கருதுகின்றனர். வீட்டினுள் ஒருபக்கச் சுவரில் பானைகள் வரிசை வரிசையா வைக்கப்பட்டிருப்பதால் அடுக்குப் பானைகள் என அழைக்கப்படலாயிற்று, தரையில் ஒரு வைக்கோல் பிரிமணையில் அரிய அளவுள்ள பானையும் அடுத்து ஒன்றன் மேல் ஒன்றாக அளவில் சிறிய பானைகளும் அமைந்திருக்கும். பானைகள் விழுந்து விடாதிருக்கச் சுவரில் அணைந்தவாறு இருக்கும். ஒரு வரிசையில் ஏறக்குறைய எட்டு பானைகளாகப் பத்து வரிசை வரை காணப்படும். இந்தப் பானைகளில் தானியங்கள், மளிகைச் சாமான்கள் ஆகியவை வைக்கப்பட்டிருக்கும். பானை வரிசையின் உச்சியில் சட்டிகளும், மூடியுடன் இடம்பெறுவதுண்டு. சட்டியென்றால் இந்தப் பகுதியில் மண்சட்டியை மட்டுமே குறிக்கும். அடிக்கடி பொருட்கள் ஏற்றி இறக்குகிற வசதி காரணமாக மேல்பானைகளிலும், எப்போதாவது எடுக்க வேண்டிய பொருட்கள் அடிப்பானைகளிலும் வைக்கப்பட்டிருக்கும். பானையிலுள்ள பொருட்களின் இருப்பை முட்டி விரலால் தட்டியே அறிந்து கொள்வர்.

## வரகு எந்திரம்



பட்டிக்காடு என்று நகர மக்களால் அழைக்கப்படும் இந்தப் பகுதி வானம்பார்த்த பூமியாதலால் வாதுமை எனப்படும் வரகு நிறைய விளைந்து கொண்டிருந்தது. 30 ஆண்டுகட்கு முன்பு வரையிலும் திருமணங்களில் வரகுச்சோறு போடுவதுதான் வழக்கம். நெல் சோறு கேழ்வரகு எந்திரத்திற்கும் வரகு எந்திரத்திற்கும் அடிப்படையில் வேறுபாடு உண்டு. நடுவில் முனையுள்ள தட்டையான ஒரு வட்டக்கருங்கல்லின் மேல் இன்னொரு வட்டக் கல்லைச் சொருகிச் சுற்றுவது கேழ்வரகு எந்திரமாகும். ஆனால் அரையுருண்டை வடிவிலான ஒரே கல்லை மட்டும் பயன்படுத்தி அரைப்பது வரகு



எந்திரமாகும். காலாகாலமாக இருந்து வந்த இந்த நாட்டுப்புறத் தொழில் நுட்பக் கருவி இப்போது காணாமல் போய்க் கொண்டு இருக்கிறது. வரகு அருகிப் போனதாலும், நெல்லின் வரவு பெருகிவிட்டதாலும் விளைந்த விளைவு இது. மேலும் வரகினை அரைப்பதற்கு அதிக உடல் உழைப்பு தேவைப்படும். அதனைத் தருவதற்கு மக்கள் தற்போது தயாரில்லை.

### தாங்கல்

மறைந்து கொண்டிருக்கின்ற நாட்டுப்புற மனைப் பொருட்களில் தாங்கல் என்று அழைக்கப்படும் சோறு ஆற வைக்கும் ஓலை உபகரணமும் ஒன்று. பனை ஓலை அல்லது ஈச்சம் ஓலையால் சுமார் 2 அடி நீளம், 2 அடி அகலம், ½ அடி உயரத்தில் சதுரமாகப் பின்னப்படும் தாங்கல் நவீன வாழ்வின் பாத்திரங்களால் தற்போது ஓரங்கட்டப்பட்டு விட்டது. சோற்றை வடித்துத் தாங்கலில் கொட்டுவர். பின்னர் குடும்ப உறுப்பினர்கள் சுற்றி உட்கார்ந்து கொண்டு தட்டுகளில் அள்ளிப் போட்டுச் சாப்பிடுவர். சோற்றில் தண்ணீர் கோர்த்துக் கொண்டிருந்தால் உலர வைக்கவும், சூடாக இருப்பதை ஆற வைக்கவும் இது பயன்படுகிறது. மட்டுமன்றிப் பொருளியல் மற்றும் சமூக உளவியல் சார்ந்த ஒன்றாகவும் தாங்கல் பயன்படுகிறது. பானையில் வைத்துக் கொண்டு பரிமாறுவதால் உணவின் இருப்பு தெரியாமல் பற்றாக்குறை ஏற்பட்டுவிட வாய்ப்பு உண்டு. ஆனால் தாங்கல்களில் கொட்டி வைத்துப் பரிமாறும்போது குடும்பத்தினர் அனைவரும் பகுத்துண்டு நிறைவு கொள்ளலாம். உணவு நேரத்தில் நாட்டுப்புற மக்களை ஒன்றுபடுத்திய தாங்கல் தங்காமல் மறைந்து விட்டதை மனத்தாங்கலோடு பதிவு செய்ய வேண்டியுள்ளது.

### மரத்தட்டு

ஆடு மாடுகட்குத் தண்ணீர், தவிடு இவற்றை வைக்க மரத்தாலான சதுர அல்லது செவ்வகத் தொட்டிகள் பயன்பாட்டில் உள்ளதை நாமறிவோம். ஆனால் மக்கள் உணவு கொள்ள மரத்தினால் செய்யப்பட்ட வட்ட வடிவத் தட்டினை இப்பகுதியில் உபயோகப்படுத்தினர் என்பதை அறிய வியப்புண்டாகும். அதிக வேலைப்பாடுகள் ஏதுமின்றி எளிமையாக மாம்பலகை அல்லது பலாப் பலகையினால் மரத்தட்டு செய்யப்பட்டிருக்கும். உதிரிப் பலகைகளையே இதற்குப் பயன்படுத்துவர். வீட்டிலுள்ளவர்கள் குறிப்பாகக் குழந்தைகள் இதில் சாப்பிடுவர். விருந்தினருக்கு மரத்தட்டு மரியாதைக் குறைவாகக் கருதப்படும்.

## சம்பு

'சிறிய சம்பங்குச்சிகளைத் துடைப்பம் மாதிரிக் கட்டி, சோறு வடிப்பதற்குப் பயன்படுத்துவது நாட்டுப்புறத்தில் வழக்கமாக இருந்தது. உலோக அல்லது மண் வடிதட்டினால் நெல்சோறு மட்டும்தான் வடிக்க முடியும். வரகுச் சோறு சிறிய அளவில் இருக்குமாதலால் வடிக்கும்போது துளைகள் வழியே வெளியேறி விடும். எனவே, வரகுச் சோறு வடிப்பதற்கென்றே ஆரம்பத்தில் பயன்பட்ட சம்பு பின்பு அரிசிச் சோறு வடிக்கவும் ஆயத்தம் செய்து கொண்டுவிட்டது. இன்றைய சூழலில் குக்கர்களின் படையெடுப்பு சம்பு, வடிதட்டு ஆகியவற்றைப் பெரும்பாலான வீடுகளிலிருந்து வெளியேற்றிவிட்டது.

## தொம்பை

கம்பு, கேழ்வரகு, முந்திரிக் கொட்டை இவற்றைப் பெரிய அளவில் சேமித்து வைக்கப் பயன்படும் தொம்பையினைத் தெற்கத்திக்காரர்கள் குதிர் என்றும் அழைப்பர். மண் தொம்பைகள், மரத்தொம்பைகள் என இரு வகைத் தொம்பைகள் உண்டு. மண் தொம்பைகள் சேறு, வைக்கோல் ஆகியவற்றைக் கொண்டு வட்ட வடிவில் செய்யப்பட்டிருக்கும். மரத்தொம்பை, மா, முந்திரி ஆகிய பலகைகளால் கோர்க்கப்பட்டுச் செவ்வக வடிவில், திறக்கும் வகையில் மூடியுடன் காட்சியளிக்கும். ஒரு தொம்பையில் 5 கிண்ணங்கள் முதல் 7 கிண்ணங்கள் வரை இருக்கும். ஒரு கிண்ணம் என்பது ஏறக்குறைய 1 ½ அடி உயரம் ஆறு அடி நீளம் நான்கு அடி அகலம் கொண்டது. தொம்பை செய்வதைத் தொம்பை கடாசுதல் என்று கூறுவர். ஒரு தொம்பையில் 25 மூட்டைகள் வரை தானியங்களைக் கொட்டி வைக்க முடியும், அடிக் கிண்ணத்தின் நடுவில் சிறிய திறப்பொன்று இருக்கும். தேவைப்படும்போது அதன் வழியே தொம்பையிலுள்ளவற்றை வெளியே சரித்து எடுத்துக் கொள்வர். "தொம்பய தொறவம் பொண்ணே". "தொம்பையிலே அரிசியிருக்க தொவரம் பயிரிருக்க" என்றெல்லாம் வரும் நாட்டுப்புறப் பாடல்களில் தொம்பையினைப் பற்றிய குறிப்புகள் வருகின்றன. ஓரளவு வசதியுள்ள வீடுகளில் எல்லாம் தொம்பை இன்றும் நின்று நிலவுவதைக் காண முடிகிறது.



## தோல் அல்லது கோணித் தராசு

பொருட்களை எடை போட நாட்டுப்புறத்தில் வழக்கில் இருந்த ஒருவகைத் தராசு இது. சதுரமான தோல் அல்லது கோணியின் (சாக்குத்



துணி) நான்கு மூலைகளிலும் துளையிட்டு ஓரளவு மெல்லிய முறுக்கேறிய, கயிறுகளை அதில் கோர்த்து ஒர் அடி நீளமுள்ள உருட்டுக் கழியின் முனையில் கட்டித் தொங்க விடப்பட்டிருக்கும். கையில் பிடித்துக் கொள்ள வசதியாக உருட்டுக் கழியின் மேல் முனையில் சிறிது தள்ளி சிறிய கயிறு இருக்கும். உருட்டுக் கழியில் வட்ட வட்டமாகச் சில கோடுகள் வெட்டப்பட்டிருக்கும். இந்தக் கோடுகளே எடை காட்டும் அளவுகள். நிறுக்கும்போது எந்த வட்டத்தில் கைப்பிடிக் கயிறு படிந்து உருட்டுக்கழி தட்டையாகவோ பாறைச் சாய்வாகவோ நிற்கிறதோ அதே அளவில் மாற்றுப் பொருளை நிறுத்து வழங்குவர். பண்ட மாற்று முறைக்குப் பக்குவமாகப் பயன்பட்ட கோணித் தராசு இப்போது முற்றிலும் மறைந்து விட்டது.

### வரவோடு

கழுத்துடன் பாதி உடைந்த நிலையிலுள்ள மண்பானை இதன் அமைப்பாகும். கொள்ளு, பயிறு, உழுந்து, மணிலாக் கொட்டை. மிளகாய் ஆகியவற்றை எண்ணையில்லாமல் வறுப்பதற்குப் பயன்படுகிறது. வறுக்கும் ஓடு என்பதனால் வரவோடு ஆயிற்று. சிறுமியர், சிறுவர் வயல்களில் கொள் வறுத்து அவித்துச் சாப்பிடத் தயாரித்துக் கொள்ளும் திடீர் வாணலியும் இதுதான். இன்னும் நாட்டுப்புற அடையாளங்களைக் காட்டிக் கொண்டிருக்கும் சமையல் சாதனங்களில் இது ஒன்று.

### வெங்கலக் கிண்ணி

ஏறத்தாழத் திருவோடு வடிவில் பாதத்துடன் கூடிய வெங்கலக் கிண்ணி நாட்டுப்புறத்தில் உணவு உண்ணும் பாத்திரமாக இருந்தது. சிறுவர்களால் தூக்க முடியாத அளவுக்கு எடையுள்ள இந்தக் கிண்ணியில் வெளியாட்களுக்கு உணவு பரிமாறப்படுவதில்லை. கிண்ணி மறைந்து விட்டதற்குக் காரணம் அதிக எடை. கையாள்வதில் இடர்ப்பாடு, வெங்கலத்தின் விலை போன்றவை. மேலும் கூட்டுகறி, அவியல், பொரியல் என்றெல்லாம் உணவின் இரகங்கள் பலவகையில் ஊடாடிக் கொண்டிருக்கும் இன்றைய கால கட்டத்தில் இவற்றையெல்லாம் ஒரே கிண்ணியில் கூட்டணி அமைத்துப் பரிமாறும் சாத்தியக்கூறு குறைந்து விட்டது என்பதும் காரணமாகும்.

### நெருப்புக்கரண்டி

அடுப்பைப் பற்ற வைக்க அக்கம் பக்கத்து வீடுகளில் நெருப்பு எடுப்பது வழக்கம். இதற்குப் பயன்படுத்தப்படும் இரும்புக் கரண்டி நீண்ட

கைப்பிடியுடன் எல்லா வீடுகளிலும் இருந்த ஒன்று. தீப்பெட்டியின் வருகை நெருப்புக் கரண்டியின் பயன்பாட்டுக்குத் தீ வைத்து விட்டது. குழம்பு வைத்துவிட்டு கடைசியில் தாளித்துக் கொட்டுகிற வழக்கம் இந்தப் பகுதியில் உண்டு. தாளிதம் செய்வதற்கெனத் தனியே இரும்புக் கரண்டி வைத்திருப்பர்.

– எழிலன்

**ஆசிரியர் குறிப்பு** எழிலன் எழுதிய 'தமிழகத்தின் மரபுக் கலைகள்' என்னும் நூலிலிருந்து நம் பாடப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது. இவர் கவிதை, கட்டுரை தொடர்பான பல நூல்களை எழுதியுள்ளார்.

## செயல்பாடுகள்

- நாட்டுப்புறக் கருவிகளின் பெயர்களை வரிசைப்படுத்துங்கள்.
- பள்ளிக் காலாண்டு இதழில் வெளியிடுவதற்கு 'நாட்டுப்புறக் கருவிகளும் சிறப்புகளும்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.
- பள்ளியில் நாட்டுப்புறக் கருவிகளின் கண்காட்சி நடைபெறுகிறது. இந்நிகழ்வைப் பொதுமக்களுக்கு அறிவிக்கும் வகையில் அறிவிப்பு தயாரியுங்கள்.

## பத்தமடைப் பாய்



திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பத்தமடை என்ற ஊரில் தயாரிக்கப்படும் கோரம்பாய்கள் உலகப் புகழ்பெற்றவை.

பாய் செய்வதற்குரிய முக்கிய மூலப்பொருளாகிய கோரைப்புல் தாமிரபரணிக் கரையோரத்தில் கிடைக்கிறது. நீளமான கோரைப் புற்களை அறுத்து வந்து அவற்றை வெயிலில் உலர்த்துவர். ஏறக்குறைய பத்து நாட்கள் அக்கோரைகளைப் பொன்னிறம் வருவதுவரை உலர்த்தியபின் அவற்றைப் பிடிப்பிடியாகக் கட்டி, ஓடும் நீரில் ஊற வைப்பர். தினமும் அவற்றை எடுத்து நன்கு கழுவி மீண்டும் ஊற வைப்பர். இவ்வாறு ஊறவைக்கப்படும் கோரைகள் நீரினுள் இருக்கும் போது தரையில் படாமலும் வெளியே தெரியாமலும் இருக்க வேண்டும். கோரையின் தேவையற்ற பகுதிகள் இதனால்

அழுகிவிடும். பாய் நெய்யப் பயன்படும் நார்த்தன்மையுள்ள கோரையின் தோல்பகுதி மிஞ்சும்.

நீரில் ஊறவைக்கப்பட்ட கோரைகளைச் சிலநாள் கழித்து எடுத்துவந்து அவற்றுள் நீளம் குறைந்தவற்றையும் நார் உருவாகாத இளங்கோரைகளையும் கழித்துவிட்டு நல்ல கோரைகளை மட்டும் பாய் நெய்வதற்காகத் தேர்ந்தெடுப்பர். தேர்ந்தெடுக்கப்பட்ட கோரைகளைச் சிறிது உலர்த்திவிட்டு பின்னர் இரண்டாகக் கிழிப்பர். ஆள்காட்டி விரலில் துணியைச் சுற்றிக்கொண்டு கூர்மையான கத்தியினால் கோரைகளைக் கிழிப்பர். கோரையின் நடுவிலிருக்கும் சோற்றுப் பகுதியை நீக்கிவிட்டு மேற்புறமிருக்கும் சருகு (தோல்) போன்ற பகுதியைத் தரவாரியாகக் கிழித்தெடுப்பர். நூல்போல் கிழித்தெடுக்கப் படுபவற்றை 80ஆம் நம்பர், 100ஆம் நம்பர், 120ஆம் நம்பர், 140ஆம் நம்பர் என்று தரம் பிரிப்பர்.

தரவாரியாகக் கோரைகள் கிழித்தெடுக்கப்பட்டதும் அவற்றிற்குச் சாயமேற்றுவது அடுத்தக்கட்டப் பணியாகும். ஒரு மண் பானையில் சம்பங்கிப் பட்டை, காசரசன் பட்டை போன்றவற்றை இட்டு நீர்விட்டு வேகவைப்பர். பட்டையிலிருந்து இறங்கும் சாயத்தில் கிழிக்கப்பட்ட கோரையை அமிழ்த்தி ஊறவைத்துச் சாயமேற்றுவர். தற்போது இம்முறையைக் கடைப்பிடிப்பதில்லை. வேதிப் பொருட்களால் உருவாக்கப்பட்ட வண்ணப் பொடிகள் தற்போது கடைகளில் கிடைப்பதால் அவற்றை வாங்கி இளஞ் சுடுநீரில் கலக்கிக் கோரைகளை அதில் ஊறவைத்து வண்ணமேற்றுகின்றனர். இதனால் நேரம் மிச்சப்படுவதாகக் குறிப்பிடுகின்றனர். கோரையில் வண்ணம் அழுத்தமாகப் படிவதற்காக விளக்கெண்ணெயை இடுகின்றனர். சாயமேற்றப்பட்ட கோரையைப் பானையோடு நிழலில் வைப்பர். இவ்வாறு தங்களுக்குத் தேவையான சிவப்பு, பச்சை, ஆரஞ்சு, கருப்பு, ஊதா, வைலட் போன்ற பல வண்ணக் கோரைகளை உருவாக்கிக் கொள்வர்.

பாய் நெய்வதற்குத் தேவையான நூலை ஒரு காலத்தில் நூற் பாலையிலிருந்து வாங்கி வந்து பசைபோட்டு நெய்வதற்குரியதாக மாற்றுவர். ஆனால் தொழில்நுட்ப முன்னேற்றத்தினால் 'கோட்ஸ்', 'ஸ்பேடு' போன்ற நூல்களைத் தற்போது பயன்படுத்துகின்றனர்.

துணி நெய்வதற்குரிய தறிபோல் பாய் நெய்வதற்கும் தறி உள்ளது. பாய் நெய்வதற்குரிய தறி முன்தண்டு, பின்தண்டு, அணை குழல், முக்காலி, மாந்தான், தொடுவட்டம், விலுவட்டம், குச்சாலி போன்ற முக்கிய உறுப்புகளைக் கொண்டது. பாயின் தன்மைக்கு ஏற்ப (நம்பருக்கு ஏற்ப) தறியிலுள்ள அச்சு வேறுபடும். இந்த அச்சுகளைப் பெரும்பாலும் உள்ளூரிலுள்ள தச்சர்களே செய்கின்றனர்.

சேலைப் பாவு போட்டதுபோல் அச்சினை அமைக்க வேண்டும். 100, 120, 140 போன்ற எண்கள் கொண்ட பாய்களைத் தனித்தனியான அச்சில்தான் போடுவர். ஒரு குச்சாலியில் (கோரையை ஒரு புறத்தி லிருந்து மற்றொரு பக்கம் இழுக்கும் கம்பு) கோரையை வைத்து அதில் ஓர் அணைப்புச் செய்தால் இரண்டு கண்கள் திறக்கும். அதாவது ஒரு மிதிப்புக்கு இரண்டு கண் திறக்கும். இவற்றில் கோரையை விடும்போது அது வலைப்பின்னல் போன்று அமைந்துவிடும். இதே முறையில் சாதாரணப் பாய்கள் செய்வதற்கு இரண்டு முதல் மூன்று நாட்கள் தேவைப்படும். பட்டுப்பாய்கள் செய்வதற்குப் பதினைந்து முதல் இருபது நாட்கள் தேவைப்படும். பட்டுப்பாயை ஒருவர் ஒரு நாளைக்கு 2 முதல் 3 அங்குலம்வரைதான் நெய்ய முடியும். இவ்வாறு நெய்யப்பட்ட பாயின் கோரைகளை இணைத்து நெருக்கமாகச் சேர்த்து வைக்கவேண்டும். இதனைக் கடத்துதல் என்று குறிப்பிடுகின்றனர். அதன் பிறகு பாயின் விளிம்பில் பட்டு வைத்துத் தைத்து அலங்காரம் செய்யப்படுகிறது. இவ்வாறு நெய்யப்பட்ட பாய் இரண்டரை அடி அகலமும் ஆறடி நீளமும் உடையதாக இருக்கும்.

பாயில் போடப்படும் 'டிசைன்கள்' எல்லாம் முன்னோரிடமிருந்து தெரிந்துகொண்டதாகும். பாயில் போடப்படும் படங்கள், எழுத்துகள் போன்றவை திறமைசாலிகளால் மட்டுமே வடிவமைக்கப்படுகின்றன.

– தே. லூர்து

**ஆசிரியர் குறிப்பு** பேராசிரியர் தே. லூர்து எழுதிய 'நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள்' என்னும் நூலிலிருந்து நம் பாடப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது. இவர் நாட்டார் வழக்காற்றியல் கோட்பாடுகள், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள், தமிழ்ப் பழமொழிகள் ஓர் ஆய்வு போன்ற பல நூல்களை எழுதியுள்ளார். தமிழ்நாடு அரசின் குறள்பீட விருதைப் பெற்றுள்ளார்.

## செயல்பாடுகள்

- ❑ பத்தமடைப் பாய் உருவாக்கும் முறையைக் குறிப்பாக எழுதுங்கள்.
- ❑ நீங்கள் அறிந்த ஏதாவது ஒரு கைவினைப்பொருளை உருவாக்கும் முறையை விளக்கி குறிப்பு தயாரியுங்கள்.
- ❑ பத்தமடைப் பாய்க்கும் தாமிரபரணி ஆற்றுக்கும் உள்ள தொடர்பைச் சிறுகுறிப்பாக எழுதுங்கள்.
- ❑ பள்ளியில் கைவினைப் பொருட்களின் கண்காட்சி நடைபெறவுள்ளது. அதற்கேற்ற விளம்பரம் தயார் செய்யுங்கள்.
- ❑ 'கலையும் பண்பாடும்' என்னும் பொருண்மையில் கருத்தரங்கு நடத்துங்கள்.

# அகராதி

| | | |
|---|---|---|
| அகழி | – | கோட்டையைச் சுற்றியுள்ள நீர் |
| அகழ்ந்த | – | தோண்டிய |
| அச்சாரம் | – | உறுதியளித்தல் |
| அஞ்சிறை | – | அழகிய சிறகு |
| அடி | – | பாதம் |
| அம்சிறை | – | அழகிய சிறகு |
| அம்புலி | – | நிலா |
| அரண் | – | கோட்டை |
| ஆழி | – | சக்கரம், கடல் |
| இச்சை | – | ஆசை |
| இப்பி | – | சிப்பி, |
| இயல்புளி | – | விதிப்படி |
| இலஞ்சி | – | நீர் நிலை |
| ஈழை | – | நோய் |
| ஈறு | – | இறுதி |
| உதாசீனம் | – | அலட்சியம் |
| உவகை | – | மகிழ்ச்சி |
| ஊருணி | – | குடிநீர் |
| எல் | – | ஒளி |
| எழினி | – | வயல் |
| ஒடுக்குதல் | – | அடக்குதல் |
| ஓம்பி | – | பாதுகாத்து |
| ஓதை | – | ஓசை |
| ஓர்ந்து | – | ஆராய்ந்து |
| கடிதல் | – | நீக்குதல் |
| கண்ணோடது | – | கண்ணோட்டம் செய்யாது |
| கண்மாய் | – | குளம் |
| கந்தை | – | கிழிந்த ஆடை |
| கரம்பு | – | வண்டல் |
| கவின் | – | அழகு |
| கழனி | – | வயல் |
| களம் | – | இடம் |
| கனிமம் | – | இயற்கையில் கிடைக்கும் திடப்பொருள் |
| கா | – | காடு |
| காயம் | – | உடல் |
| காரிகை | – | பெண் |
| கிம்புரி | – | யானை |
| கிரயம் | – | பணத்திற்கு விற்பது அல்லது வாங்குவது. |
| குட்டை | – | குளம் |
| குதர்க்கம் | – | நியாயமற்ற வாதம் |
| கூவல் | – | ஆழமற்ற கிணறு, பள்ளம் |
| கேணி | – | கிணறு |
| கொண்டல் | – | மேகம் |
| கொண்டல் | – | மேகம் |
| கோலோச்சும் | – | ஆட்சி செய்யும் |
| சங்கமம் | – | கூடுதல் |
| சழக்கு | – | தீமை, குற்றம் |
| சிசு | – | குழந்தை |
| சிறை | – | இறகு |
| சுதை | – | சுண்ணாம்பு |
| சுனை | – | மலை ஊற்று |
| செம்மாந்து | – | மிடுக்குடன் |
| சேட்டை | – | குறும்பு செயல் |
| திமிறி | – | பிடியிலிருந்து விடுபடுதல் |
| துஞ்சுதல் | – | உறங்குதல் |
| தும்பி | – | வண்டு |
| தும்பை | – | மூங்கில் அமைக்கப்பட்ட |
| துயில் | – | உறக்கம் |
| துழனி | – | ஓசை |
| தூர்த்தல் | – | அடைதல் மறைதல் |
| தென்றல் | – | தெற்கே |
| தொனித்தல் | – | ஒலித்தல் |
| தோகை | – | மயில் |
| தோய்தல் | – | முழுகுதல் |
| தோரணை | – | முறை |
| நச்சு | – | நஞ்சு, விஷம் இருந்து வீசும் காற்று |
| பாவலர் | – | புலவர் |
| பிரமை | – | மயக்கம் |
| பீடு | – | துன்பம் |
| புலம் | – | நிலம் |
| புவி | – | பூமி |
| புழுதி | – | மண் துகள் |
| புள் | – | பறவை |
| புனல் | – | நீர் |
| புன்கண் | – | துன்பம் |
| பெயல் | – | மழை |
| பொழில் | – | சோலை |
| மகசூல் | – | விளைச்சல் |
| மஞ்ஞை | – | மயில் |
| மண்டி | – | கசடு, உணவு |
| மறவன் | – | வீரன் |
| மாது | – | பெண் |
| மிரள்தல் | – | மயங்கி அச்சம் கொள்ளுதல் |
| முகில் | – | மேகம் |
| முழவு | – | முரசு, மதக்கை |
| மேதி | – | எருமை |
| மேரு | – | மலை |
| வடு | – | தழும்பு |
| வதுவை | – | திருமணம் |
| விழல் | – | வளமற்ற நிலம் |
| வெம்புதல் | – | வாடுதல் |
| வென்றி | – | வெற்றி |
| வேந்தன் | – | அரசன் |
| வையகம் | – | உலகம் |

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

**51 அ பிரிவுக்கூறு**

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதிநான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

*அன்பார்ந்த குழந்தைகளே,*

*உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.*

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்


*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**

ஸ்ரீ கணேஷ், TC. 14/2036, வான்ரோஸ் ஜங்ஷன்,

கேரளா பல்கலைகழகம் P.O, திருவனந்தபுரம்–34, தொலைபேசி : 0471–2326603

இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in

www.kescpcr.kerala.gov.in


**சைல்டு ஹெல்ப் லைன்-1098, கிரைம் ஸ்டோப்பர்-1090, நிர்பயா-1800 425 1400**

**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் - 0471-324300/44000/45000**

*Online* ***R. T. E Monitoring : www.nireekshana.org.in***